Vol.9, Issue 4 | Annual Subscription ₹ 600
Rotary News, September 2026, Chennai


செப்டம்பர் 2026

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்


இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

# Advertise in
# Rotary News




... with a circulation of 1.56 lakh, and connect with 6 lakh readers. Reach some of the most influential industrialists, businessmen, finance professionals, doctors, lawyers and other high flyers.

| Tariff (per insert) | |
|---|---|
| Back cover | ₹1,00,000 |
| Inner Front Cover | ₹60,000 |
| Inner Back Cover | ₹60,000 |
| Inside Full Page | ₹30,000 |
| **Specifications** | |
| 17 x 23 cm | Full page |
| **Advertisements in colour only** | |

GST 5% applicable

**Rotary News Trust**
Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org

**Attractive discounts available for advertisements of three months and above.**

# உள்ளே




12
ரோட்டரியை உயர்ந்த சிகரங்களுக்கு அழைத்துச் செல்வோம்



22
மாற்றத்தின் கதைகளைச் சொல்லுங்கள்




30
குணமளிக்கும் ஒரு ரோட்டரி நட்பு அமைப்பு



36
சிறிய இதயங்களைக் குணப்படுத்துதல்



40
பலவீனமான பச்சிளம் குழந்தைகளுக்கு பால்



46
சக்கரங்களில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு



Rotary

A publication of Rotary Global Media Network


## முக்கிய அறிவிப்பு

### ஆண்டு சந்தா கட்டணத் திருத்தம்

அன்பார்ந்த சந்தாதாரர்களே,

ரோட்டரி நியூஸ் இதழின் ஆண்டு சந்தா கட்டணம் ஜூலை 1, 2026 முதல் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது:

- அச்சுப் பதிப்பு: **₹600**
- மின்னணு பதிப்பு: **₹360**

இதற்கேற்ப உங்கள் சந்தா ரசீது அனுப்பி வைக்கப்படும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், தாமதமின்றி இதழை உடனுக்குடன் பெறவும், ரோட்டேரியன்கள் **மின்னணு** (e-version) **பதிப்பைத்** தேர்வு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் தொடர்ந்த ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## RI தலைவரின் பொருத்தமான செய்தி




*சிறந்த உலகை உருவாக்குவதற்கான அமைதிக் கட்டமைப்பை மையமாகக் கொண்டு, அனைத்து ரோட்டரியர்களுக்கும் RI தலைவர் யின்கா பபலோலா விடுத்துள்ள சவால் என்னை மிகவும் நெகிழச் செய்துள்ளது. உலகின் பல பகுதிகளில் நடைபெறும் கொடூரமான போர்களின் பின்னணியில், ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள், குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் கொல்லப்படும் இந்நேரத்தில், அவரது சவால் மிகவும் பொருத்தமானது.*

*பபலோலாவின் செய்தி மனிதநேயத்தின் அடிப்படையையே தொடுகிறது. மருத்துவமனைகள், பள்ளிகள் போன்றவற்றை அமைப்பதில் ரோட்டரி மேற்கொள்ளும் அனைத்து கடினமான முயற்சிகளுக்கும் என்ன பயன்? அவை அனைத்தும் சில நிமிடங்களில் அழிக்கப்படலாம்; மனித உயிர்களும் பறிக்கப்படலாம்.*

*அன்பும் இரக்கமும் அமைதியுடன் கைகோர்த்துச் சென்றால் மட்டுமே, அதுவே நிலையான உண்மையான சேவையாக அமையும். நிறம், சாதி, மதம், தேசியம் ஆகிய வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு மனிதரும் மற்றவரை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.*

*சுரேஷ் கோகுல்தாஸ்*
*RC கோயம்புத்தூர் மிட்-டவுன் — D 3206*

*ஆகஸ்ட் மாத இதழில் RI தலைவர் பபலோலா, அமைதிக் கட்டமைப்பு நமது முக்கிய கவனப் பகுதிகளில் ஒன்று என்றும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் அதைத் திட்டமிட்டும், உத்திபூர்வமாகவும், நோக்கத்துடனும் இணைத்து முன்னெடுக்க வேண்டும் என்றும் கூறுகிறார். இதுவே அவர் நம் முன் வைக்கும் சவால்.*

*எனவே, நாம் குடிநீர்த் திட்டமாக இருந்தாலும், தொழில்திறன் பயிற்சித் திட்டமாக இருந்தாலும், அல்லது சேவையின் மற்ற ஏழு முக்கியக் கவனப் பகுதிகளில் ஏதேனும் ஒன்றைச் சார்ந்த திட்டமாக இருந்தாலும், அவை நமது சமூகங்களில் அமைதியை உருவாக்கி, நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவா என்பதை உறுதி செய்துகொள்வோம்.*

*N ஜகதீசன், RC ஏலூரு — D 3020*

### இண்டராக்டர்களின் முக்கியப் பங்கு

நீட் தேர்வு தொடர்பாக தில்லியில் நடைபெற்ற CJP போராட்டத்தின்போது ஜந்தர் மந்தரில் நிகழ்ந்த சம்பவம், சமூக ஊடகங்களில் காணொளிகள் பரவியதைத் தொடர்ந்து, பொது மக்களின் கவனத்தை ஈர்த்ததுடன் பல்வேறு கருத்துகளையும் உருவாக்கியுள்ளது. சில இளம் மாணவர்களின் பேச்சும் நடத்தையும், இன்றைய காலத்தில் இளைய தலைமுறையினரின் பொதுவெளி வெளிப்பாடு எவ்வாறு மாறிவருகிறது என்ற கவலையை எழுப்பியுள்ளது.

இந்தத் தலைமுறை இளைஞர் களின் போராட்டம், மரியாதை, பொறுப்பு, பரிவு, ஆக்கபூர்வமான உரையாடல் ஆகிய மதிப்புகளைப் பற்றி சிந்திக்க ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இவை அனைத்தும் இந்தியப் பண்பாட்டின் முக்கியமான மதிப்புகளாகும்.

இத்தகைய சவாலான காலகட்டங்களில், ரோட்டரி தனது இண்டராக்டர்கள் மூலம் செய்து வரும் பணிகள் எனக்கு நம்பிக்கை யளிக்கின்றன. நாட்டை உருவாக்குவது இன்றைய மக்களுக்கு சேவை செய்வது மட்டுமல்ல; நாளைய குடிமக்களை உருவாக்குவதுமாகும். இளம் இண்டராக்டர்களை ஊக்குவிப்பதன் மூலம் ரோட்டரி இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைக்கிறது. குழந்தைகள் பரிவு, மரியாதை, பொறுப்பு, சேவை மனப்பான்மை ஆகியவற்றுடன் வளரும்போது, சிறந்த உலகை உருவாக்க உதவும் மதிப்புகளை அவர்கள் தங்களுடன் எடுத்துச் செல்கிறார்கள்.

பிரியதர்ஷினி கனோரியா
RC தில்லி சவுதெக்ஸ் — D 3011

### எல்லாமே சங்கத்தில்தான் தொடங்குகிறது

ஆகஸ்ட் மாத ரோட்டரி நியூஸ் இதழை மிகவும் சிறப்பாக வழங்கியுள்ளீர்கள். ‘இயக்குநர் பேசுகிறார்’ பகுதியில் RI இயக்குநர் K P நாகேஷ் இதை மிக அழகாகச் சுருக்கிக் கூறியுள்ளார்: அனைத்தும் சங்கத்திலிருந்தே தொடங்குகிறது.

சங்க அளவில்தான் கருத்துகள் திட்டங்களாக மாறுகின்றன; அந்நியர்கள் குடும்பமாக மாறுகின்றனர். சேவை ஒரு உறுப்பினரிடமிருந்து தொடங்கி உலகம் முழுவதும் பரவுகிறது. நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் ஒவ்வொரு முயற்சிக்கும் முதல் சந்திப்பு சங்கத்தில்தான் நடைபெறுகிறது.

ஒரு கைகுலுக்கல், ஒரு திட்டம், ஒரு மாற்றமடைந்த வாழ்க்கை. நமது சங்கக் கூடத்திலிருந்து சமூகத்தை நோக்கிச் செல்லும் இந்தப் பயணத்தில்தான் ரோட்டரி உயிர்ப்புடன் செயல்படுகிறது.

S நடராஜன்
RC கூத்தப்பாக்கம் — D 2981

ஆகஸ்ட் மாத இதழில் RI இயக்குநர் நாகேஷின் செய்தி, உறுப்பினர் தக்கவைப்பை மேம்படுத்துவதற்கான பல்முனை உத்தியாக அமைந்துள்ளது. “ரோட்டரி உலகம் முழுவதும் உறுப்பினர்களைத் தொடர்ந்து தக்கவைப்பது மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக உள்ளது. மக்கள் தங்களை வரவேற்கிறார்கள், மதிக்கிறார்கள், ஈடுபடுத்துகிறார்கள், பாராட்டுகிறார்கள் என்று உணரும் இடத்தில்தான் தொடர்ந்து இருக்கிறார்கள்,” என்று அவர் சரியாகக் கூறுகிறார்.

பங்கேற்பை ஊக்குவிக்கும், புதிய கருத்துகளை வரவேற்கும், வளர்ந்து

வரும் தலைவர்களுக்கு வழிகாட்டும், அர்த்தமுள்ள நட்புறவை உருவாக்கும் சங்கங்கள் எப்போதும் துடிப்புடன் இருக்கும். எனவே உறுப்பினர் சேர்க்கையும் தக்கவைப்பும் ஒரு குழுவின் பொறுப்பு மட்டுமல்ல; ஒவ்வொரு ரோட்டரியரின் பொறுப்பாகும்.

R முரளி கிருஷ்ணா
RC பெர்ஹாம்பூர் — D 3262

ஆகஸ்ட் மாத இதழில் வெளியான மானச குடீரா பற்றிய சிறப்பான கட்டுரைக்கு நன்றி.

திட்டம் சாதித்தவற்றை மட்டுமல்லாமல், அதன் பின்னணியில் உள்ள சேவை உணர்வையும் கூட்டு அர்ப்பணிப்பையும் கட்டுரை அழகாக எடுத்துக்காட்டுகிறது.

சமூக உறுப்பினர்களின் வாழ்க்கையில் மானச குடீரா ஏற்படுத்தி வரும் மாற்றத்தை வெளிக்கொணர எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

ராகேஷ் பாபு K L
RC மைசூர் மிட்-டவுன் — D 3181

ஆகஸ்ட் மாத இதழில் முத்துக்குமரன், கானாவின் தமாலே நகரில் அண்மையில் நடைபெற்ற எங்கள் குழந்தைகளுக்கான கண் அறுவைச் சிகிச்சை முகாம் குறித்து வெளியிட்டதற்கு மிக்க நன்றி.

தேவையான மருத்துவச் சேவைகளை வழங்குவதில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்காக, ஆப்பிரிக்காவிலும் உலகின் பிற பகுதிகளிலும் உள்ள பல ரோட்டரி சங்கங்களும் மாவட்டங்களும் ரோட்டரி அறக்கட்டளையின் உதவியுடன் கண் அறுவைச் சிகிச்சை நிபுணர்களுடன் இணைந்து செயல்படுவார்கள் என்று நம்புகிறோம்.

ரோட்டரி அறக்கட்டளை, உலகம் முழுவதும் உள்ள அனைத்து கூட்டாளர்கள் மற்றும் கானாவில் உள்ள பங்காளிகள் வழங்கிய அற்புதமான ஒத்துழைப்புக்கும் ஆதரவுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Dr K V ரவிசங்கர்
RC பெங்களூரு — D 3191

**எளிமையான சங்க நிறுவல் விழாக்கள் தேவை**

ஜூன் மற்றும் ஜூலை மாதங்கள் சங்கங்களின் நிறுவல் விழாக்களுக்கான காலமாகும். இவற்றில் பல நிகழ்ச்சிகள் நட்சத்திர விடுதிகளில் மிகப் பிரம்மாண்டமாகவும், கணிசமான செலவிலும் நடத்தப்படுகின்றன.

பொதுவாக நிகழ்ச்சிகள் இரவு வெகுநேரத்தில் தொடங்கி, சில நேரங்களில் நள்ளிரவு வரை நீடிக்கின்றன. ரோட்டரியர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

தாமதமான இரவு நிகழ்ச்சிகள் சில நேரங்களில் தவிர்க்க முடியாதவையாக இருக்கலாம். ஆனால் அவற்றின் தாக்கத்தைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம். அடுத்த நாள் பொதுவாக வேலை நாளாக இருக்கும். பள்ளி, கல்லூரி மாணவர்கள், பணிபுரியும் தொழிலாளர்கள், வணிகர்கள், தொழிற்சாலை ஊழியர்கள், மூத்த குடிமக்கள் என அனைவரும் தங்களது இயல்பான அன்றாடப் பணிகளுக்குத் திரும்ப வேண்டியுள்ளது. நள்ளிரவு வரை நீளும் நிகழ்ச்சிகள் பல பங்கேற்பாளர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய ஆடம்பரமான கொண்டாட்டங்கள் உண்மையில் அவசியம்தானா என்று நாம் சிந்திக்க வேண்டும். இந்நிகழ்ச்சிகளுக்காகச் செலவிடப்படும் பெருந்தொகையை, ஏழை மற்றும் பின்தங்கிய மக்களுக்குப் பயனளிக்கும் அர்த்தமுள்ள திட்டங்களுக்குத் திருப்பிவிடலாம்.

ரோட்டரியர்களாகிய நாம் எளிமை, சிக்கனம், வளங்களைப் பொறுப்புடன் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

T D வாசு, D 3233

**அட்டைப்படத்தில்:**
RI இயக்குநர் K P நாகேஷ், RI தலைவர் யின்கா பபலோலா மற்றும் RI துணைத்தலைவர் M முருகானந்தம், ஹைதராபாத்தில்.

**புகைப்படம்:** ரஷீதா பகத்


*We welcome your feedback Write to the Editor:*

**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**

*Mail your project details, along with hi-res photos, to*

**rotarynewsmagazine @gmail.com.**

*Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at*


**rushbhagat@gmail.com** *or* **rotarynewsmagazine@gmail.com.**

*WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.*



Have you read Rotary News Plus?

Or does it go to your junk folder?




Every month we bring out the online publication ROTARY NEWS PLUS to feature your projects. This is sent to every member by e-mail by mid-month.

Read Rotary News Plus on our website www.rotarynewsonline.org

RI தலைவரிடமிருந்து...

# 12.5 லட்சம் என்பது வெறும் ஒரு எண் மட்டுமல்ல



புகைப்படம்: ஆண்ட்ரூ எசிபோ

ரோட்டரி எப்போதுமே மக்களைப் பற்றியதே. திட்டங்களைப் பற்றியதல்ல. எண்களைப் பற்றியதல்ல. மக்களைப் பற்றியது.

2030-ல் நமது 125வது ஆண்டு விழாவிற்குள் 12.5 லட்சம் ரோட்டேரியன்களையும் 1,25,000 ரோட்டராக்டர்களையும் எட்டும் நமது இலக்கும் மக்களைப் பற்றியதே.

இந்த இலக்கை நான் மீண்டும் குறிப்பிடுவது, அந்த எண்ணே உங்களைத் தூண்டும் என்று எதிர்பார்ப்பதால் அல்ல. இவ்வளவு பெரிய இலக்கு, நமது சங்கங்களின் அன்றாடப் பணியிலிருந்து விலகி, அருவமானதாக உணரத் தொடங்கும் என்று நான் கவலைப்படுவதால் இதைச் சொல்கிறேன். அது நடக்க நான் விரும்பவில்லை.

உங்கள் சங்கத்திற்கு ஒரு எளிய பயிற்சியை அளிக்க விரும்புகிறேன். கடந்த ஐந்து முதல் ஏழு ஆண்டுகளைத் திரும்பிப் பார்த்து, உங்கள் சிறந்த ஆண்டைக் கண்டறியுங்கள். ஒருவேளை புதிய உறுப்பினர்கள் வந்து, இன்னும் முக்கியமாக, தங்கிய ஆண்டாக அது இருக்கலாம். அல்லது, நெரிசலான நாட்காட்டியில் மற்றொரு கடமையாக அல்லாமல், உறுப்பினர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த கூட்டங்களாக உங்கள் கூட்டங்கள் மாறிய ஆண்டாக இருக்கலாம். அந்த ஆண்டைக் கண்டறியுங்கள். பின்னர், உங்கள் சிறந்ததை விட சிறப்பாகச் செய்யுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2030 உறுப்பினர் இலக்கு எனக்கு ஏன் இவ்வளவு முக்கியமானதாகத் தொடர்ந்து தோன்றுகிறது? ஏனெனில், அந்த ஒவ்வொரு எண்ணுக்குப் பின்னாலும், என்னுடையவும் உங்களுடையவும் வாழ்க்கை மாற்றப்பட்டதைப் போலவே, இந்த அமைப்பால் வாழ்க்கை மாற்றப்படக்கூடிய ஒரு மனிதர் இருக்கிறார். ரோட்டரி எனக்கு பல தசாப்தங்கள் நீடித்த நட்புகளையும், நான் தேடிக்கொண்டிருந்ததே தெரியாத ஒரு நோக்க உணர்வையும், காலப்போக்கில் என் குடும்பத்தின் நீட்சியாகவே உணரப்பட்ட ஒன்றையும் அளித்துள்ளது. உங்களில் பலரும் இதை உங்கள் சொந்த வாழ்க்கையில், உங்கள் சொந்த வழியில் புரிந்துகொள்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அந்த வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தையே ஒருவரை நம்முடன் இணையுமாறு அழைக்கும்போது நாம் வழங்குகிறோம். யாராவது கேட்க நினைத்தால், உங்கள் சமூகங்களில் இப்போதே உண்மையான அர்த்தத்தைக் காணக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். எனவே அவர்களிடம் உங்கள் கதையைச் சொல்லுங்கள். ரோட்டரி உங்களை எப்படி மாற்றியது என்பதை நேர்மையாகச் சொல்லுங்கள் – நீங்கள் வழிநடத்திய திட்டங்களைப் பற்றியோ, திரட்டிய நிதியைப் பற்றியோ மட்டுமல்ல, அந்த வழியில் நீங்கள் ஆன மனிதரைப் பற்றி. அந்தக் கதைகள் மற்ற எதனாலும் சாத்தியமில்லாத வகையில் மக்களை எட்டும் வல்லமை கொண்டவை.

தலைமுறைகளுக்கு எதிரொலிக்கும் நீடித்த தாக்கத்தை நாம் உருவாக்க விரும்பினால், நமது பணியை முன்னெடுத்துச் செல்ல உதவ, நம்முடன் நிற்க மேலும் பலர் தேவை.

**யின்கா பாபலோலா**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# அட்ரினலின் பெருக்கு

சமீப காலங்களில் இந்திய இளைய தலைமுறையின், குறிப்பாக நன்கு அறியப்பட்ட Gen Zee தலைமுறையின் வாழ்வில் பெரும் கொந்தளிப்புகளைக் கண்டோம். நமது நாட்டின் முழுக் கல்வி அமைப்பின் நிலை குறித்த உண்மையான கவலைகளே இதற்குக் காரணம்: வணிகமயமாக்கல், ஊழல், பிற முறைகேடுகள் ஆகியவை அமைப்பின் பலனை சமூகத்தின் ஒரு பிரிவுக்கே திருப்புகின்றன.

நாடு முழுவதும் விரக்தி, நம்பிக்கையின்மை, போராட்ட மேகங்கள் சூழ்ந்தபோது, 2026 கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்திய வீரர்கள் அளித்த மகிழ்ச்சியான செய்தி வந்தது. துப்பாக்கிச் சுடுதல், மல்யுத்தம் போன்ற இந்தியா சிறக்கும் முக்கிய விளையாட்டுகள் இல்லாதபோதும், இந்தியா 13 தங்கம், 17 வெள்ளி, 9 வெண்கலம் என 30 பதக்கங்களுடன் நான்காவது இடத்தைப் பிடித்தது.

இந்திய குத்துச்சண்டை வீரர்கள் முதன்முறையாக வரலாற்றுச் சாதனையான 10 பதக்கங்களை வென்றனர்; அவற்றில் ஏழு தங்கம். ஒரே போட்டியில், ஒரே நாட்டுக்குக் கிடைத்த அதிக தங்கப் பதக்கங்களின் சாதனையும் இதுவாகும். ஜூடோவில் இந்தியா முதல் தங்கத்தைப் பெற்றது. நட்சத்திரப் பளுதூக்குபவர் மிராபாய் சானு தொடர்ந்து மூன்றாவது காமன்வெல்த் தங்கத்தை வென்றார். குல்வீர் சிங், ஒரே போட்டியில் ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் வென்ற முதல் இந்திய தடகள வீரரானார்.

தொலைக்காட்சி முன் அமர்ந்து நம் வீரர்களை உற்சாகமாக ஆதரிப்பதைவிட மகிழ்ச்சியானது எதுவுமில்லை. 2030 காமன்வெல்த் விளையாட்டுகளை அகமதாபாத் நடத்தவுள்ளது; வரும் ஆண்டுகளிலும் நம் வீரர்கள் பெருமை சேர்ப்பார்கள் என நம்புவோம்.

விளையாட்டு வெற்றி ரசிகர்களுக்கு அளிக்கும் அட்ரினலின் பெருக்குக்கு ஈடு காண்பது அரிது. ஆனால் ஆரவாரம் செய்வது எளிது; ஒரு வீரர் அல்லது கிரிக்கெட் வீரர் களத்தில் தோல்வியுறும்போது எதிர்கொள்ளும் கடின உழைப்பு, தூக்கமில்லா இரவுகள், விடியற்காலப் பயிற்சிகள், வியர்வை, கண்ணீர், ஏமாற்றம் ஆகியவற்றையும் நினைக்க வேண்டும்.

அட்ரினலின் பற்றி அறிய, சமூகச் சேவைத் திட்டங்களை முழுமையான ஆர்வத்துடனும் பரிவுடனும் செயல்படுத்தும் ரோட்டேரியன்களைக் கேளுங்கள். இந்தியாவில் அத்தகையோர் ஏராளம். வீடுகள் கட்டுதல், நீர்நிலைகளை மீட்டெடுத்தல், ஆப்பிரிக்காவிலோ இந்தியாவிலோ சிக்கலான அறுவை சிகிச்சைகள் செய்தல், பள்ளிகளில் டிஜிட்டல் கற்றல் வசதிகளை அமைத்தல் எனத் திட்டங்களில் ரோட்டேரியன்கள் மிக உயர்ந்த திறனையும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் செலுத்துகின்றனர்.

இவற்றைச் செய்ய அவர்களைப் பணியமர்த்த முடியாது; அவர்கள் தங்கள் வளமான தொழில்கள், வணிகங்களில் ஈடுபட்ட வெற்றிகரமானவர்கள். அதனால் ஊதியமின்றி வழங்கப்படும் சேவையும் நிபுணத்துவமும் உயர்ந்த சிறப்பையும் கிட்டத்தட்ட முழுமையையும் அடைகின்றன.

தன்னார்வ ரோட்டேரியன்களுக்கு கிடைக்கும் பலன் என்ன? மனநிறைவு, பெருமிதம், வெற்றியைக் கொண்டாடும் வீரருக்குக் கிடைப்பதற்கு நிகரான அட்ரினலின் பெருக்கு. அது ஆயிரக்கணக்கான கனவுகளைத் தூண்டுகிறது. ஆனால் ரோட்டேரியன்களின் சிறந்த திட்டங்கள் வாழ்வையும் வாழ்வாதாரங்களையும் கற்பனைக்கெட்டாத வகையில் மாற்றுகின்றன. அவற்றின் தாக்கம் உடனடியானது, கணக்கிடக்கூடியது, நீடித்தது.

கூரை வேய்ந்த குடிசையிலிருந்து உறுதியான வீட்டுக்குச் சென்ற பழங்குடி கிராமவாசியையோ, பேருந்து ஓட்டுநரின் மகனாக இருந்து சிறந்த IT புதுமை ஆய்வகத்தில் பயிற்சி பெற்று உடனடி வேலை பெற்ற மகாராஷ்டிர மாணவரையோ, தையல், அழகுப் பராமரிப்பு, பிற திறன்களில் பயிற்சி பெற்ற பெண்களையோ கேளுங்கள். இந்தியாவின் முகத்தைச் சிறுசிறு பகுதிகளாக மாற்றுவது அட்ரினலின் பெருக்கை ஏற்படுத்தவில்லை என்றால், வேறு எது ஏற்படுத்தும்? இத்தகைய பணிகளுக்கு மேலும் வலிமை கிடைக்கட்டும்.

விளையாட்டிலும் சமூகச் சேவையிலும் வெளிப்படும் இந்த உணர்வு ஒரே அடிப்படையைக் கொண்டது: இலக்கை நோக்கிய ஒழுக்கமான முயற்சி. பதக்கத்தின் பின்னால் பல ஆண்டுகளின் பயிற்சியும் தியாகமும் இருப்பதுபோல், ஒரு சேவைத் திட்டத்தின் பின்னாலும் திட்டமிடல், நிபுணத்துவம், நேரம், கூட்டுறவு, பொறுப்பு ஆகியவை உள்ளன. வெற்றியைப் பார்ப்பவர்கள் இறுதி தருணத்தின் மகிழ்ச்சியை மட்டும் காண்கிறார்கள்; ஆனால் அந்த முடிவை உருவாக்கிய உழைப்பையும் உறுதியையும் அறிந்தால் அதன் மதிப்பு மேலும் பெருகும்.

ரோட்டரி திட்டங்கள் ஒரு தனிநபரின் கருணையை மட்டும் பிரதிபலிப்பதில்லை; சமூகத்தின் தேவையைப் புரிந்து, தீர்வை உருவாக்கி, அதன் பயன் நீடிப்பதை உறுதி செய்யும் குழு முயற்சியாகும். அத்தகைய சேவை, உதவி பெறுபவரின் வாழ்க்கையை மாற்றுவதோடு, செயல்படுத்துபவரின் வாழ்க்கைக்கும் அர்த்தம் அளிக்கிறது. அதனால்தான் ஒவ்வொரு வெற்றிகரமான திட்டமும் புதிய தன்னார்வலர்களையும் புதிய கனவுகளையும் உருவாக்குகிறது.

அத்தகைய மாற்றத்தை நேரில் காணும் தருணமே, தொடர்ந்து செயல்படத் தேவையான உற்சாகத்தையும் நம்பிக்கையையும் அனைவருக்கும் நாள்தோறும் புதிதாக மிகுந்த ஆற்றலுடன் என்றும் மனதிலும் செயலிலும் உறுதியாக வழங்குகிறது.

ரஷீதா பகத்

ADVT.



SHIKHAR
ROTARIANS,
TAKE YOUR CONNECTIONS GLOBAL.
Travel. | Fellowship. | Networking. | Experiences.
From club meetings to international journeys, we create memorable travel experiences designed around your Rotary group.
TRUSTED BY
1000+
ROTARIANS & TRAVELERS
SINCE 1979
LOCAL ROTARY FELLOWSHIP
Meet & connect with Rotary Clubs worldwide.
EXCLUSIVE CLUB EXPERIENCE
Private Meeting, dinners & get togethers.
CUSTOMISED JOURNEY
Travel Designed around your group's interest.
COMPLETE TRAVEL SUPPORT
Flights • Hotels • Visas • Insurance • Logistics
TRAVEL THE WORLD. LEAVE THE DETAILS TO US.
Contact Us
Call/Email:-
+91 87964 64447
tours@shikhar.com
Singapore
Europe
Thailand
SCAN HERE
Book
FLIGHT TICKET
at
Affordable Price
than Other Platforms
SHIKHAR TRAVELS
SINCE 1979
Your Journey, Our Passion
1,00,000+
Happy Travelers
IATA



# RI இயக்குனர் செய்தி

# தொடர்ந்து வளர்வோம்

*சங்கத்தை வளர்த்திடுங்கள். உறுப்பினர்களைத் தக்கவைத்திடுங்கள். அதன் எதிர்காலத்தை உருவாக்குங்கள்.*

தொடரும் மோதல்கள், ஏற்ற இறக்கமான பொருளாதாரங்கள், காலநிலைச் சவால்களை எதிர்கொள்ளும் சமூகங்கள் நிறைந்த நிச்சயமற்ற உலகில் வாழ்கிறோம். இளைஞர்கள் முன்பைவிட அதிகமாக இணைக்கப்பட்டிருந்தாலும், வாழ்வின் நோக்கத்துடன் தொடர்பின்றி இருப்பதாக அடிக்கடி உணர்கிறார்கள்.

இத்தகைய காலத்தில் உலகிற்கு சேவை செய்யும், அக்கறை காட்டும், நம்பிக்கையை உருவாக்கும் அதிகக் கைகள் தேவை. நாம் மேற்கொள்ளும் ஒவ்வோர் திட்டமும், தொடும் ஒவ்வோர் வாழ்வும், வலுப்படுத்தும் ஒவ்வோர் சமூகமும் சேவை செய்யத் தேர்ந்தெடுத்த ஒரு ரோட்டேரியனிடமிருந்து தொடங்குகிறது.

ரோட்டரி ஒரு உறுப்பினர் அமைப்பு என்பதை ஒரு போதும் மறக்கக் கூடாது. உறுப்பினர்கள் இல்லையென்றால் திட்டமோ, சங்கமோ, மாவட்டமோ, ரோட்டரியோ இல்லை. வலுவான உறுப்பினர்கள் வலுவான சங்கங்களை உருவாக்குகிறார்கள்; வலுவான சங்கங்கள் வலுவான மாவட்டங்களை; வலுவான மாவட்டங்கள் வலுவான ரோட்டரியை உருவாக்குகின்றன.

ஊக்கமளிக்கும் செய்தி உள்ளது. மண்டலங்கள் 4, 5, 6, 7-ல் 225 புதிய சங்கங்களையும் 6,400-க்கும் மேற்பட்ட புதிய உறுப்பினர்களையும் வரவேற்றுள்ளோம். நான்கு மண்டலங்களிலும் உறுப்பினர் வளர்ச்சி நேர்மறையாக உள்ளது; ஒவ்வொரு புதிய உறுப்பினரும் ஒரு புதிய ஜோடிக் கைகளையும் சேவைக்கான புதிய வாய்ப்பையும் குறிக்கிறார்.

ஆனால் வளர்ச்சி கதையின் பாதி மட்டுமே. உலகம் முழுவதும் ரோட்டரி சங்கங்களைச் சேர்த்தபோதும் உறுப்பினர்களை இழந்துள்ளது. கதவைத் திறப்பதில் வெற்றி பெறுகிறோம்; ஆனால் உள்ளே வந்தவர்கள் தங்குவதை எப்போதும் உறுதி செய்வதில்லை. அதனால் இந்த ஆண்டின் கவனம் எளிது: சங்கத்தை வளர்த்திடுங்கள்; உறுப்பினர்களைத் தக்கவைத்திடுங்கள்.

ஒவ்வோர் சங்கமும் சிவப்பு, அம்பர், பச்சை RAG பகுப்பாய்வு செய்ய வேண்டும். உறுப்பினர் எண்ணிக்கை 51-ஐத் தாண்டி வளர்ந்தால் பச்சை; 26 முதல் 50 வரை மாற்றமின்றி இருந்தால் அம்பர்; 25-க்குக் கீழே குறைந்தால் சிவப்பு. உறுப்பினர்கள் வெளியேறினால் ஏன் என்று கேட்க வேண்டும். ரோட்டரிக்கு நோக்கம் இல்லை என்பதால் பெரும்பாலோர் விலகுவதில்லை; உண்மையாக ஈடுபடுத்தப்படாததால்தான் விலகுகிறார்கள். அவர்களை வரவேற்று, பங்கேற்கச் செய்து, பொறுப்பு அளித்து, மதிக்கப்படுவதாக உணரச் செய்தால், தக்கவைப்பு இயல்பாக நிகழும்.

ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் 1:2:3 இளைஞர் சேவை அணுகுமுறையை ஏற்க வேண்டும்: ஒரு ரோட்டரி சங்கம் குறைந்தது இரண்டு ரோட்ராக்ட் சங்கங்களையும் மூன்று இன்டராக்ட் சங்கங்களையும் வளர்க்க வேண்டும். இன்றைய இன்டராக்டர் நாளைய ரோட்ராக்டராகவும் பின்னர் ரோட்டேரியனாகவும் மாறி, தலைமுறைகள் தாண்டி ரோட்டரியை நிலைநிறுத்துவார்.

ரோட்டரி உலகின் மிகச் சிறந்த தலைமைத்துவ ஆலையும் ஆகும். ஒவ்வோர் ஆண்டும் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட தலைவர்கள் சங்கம், மாவட்டம், மண்டலம், சர்வதேச நிலைகளில் பொறுப்பேற்கிறார்கள். ரோட்டரி தலைவர்களை அடையாளம் காண்பதோடு நிற்பதில்லை; சேவை, பொறுப்பு, செயல்பாடு வழியாக அவர்களை வளர்க்கிறது. ஒவ்வொரு புதிய உறுப்பினரும் தன்னார்வலர் மட்டுமல்ல; எதிர்காலத் தலைவர், ஆளுநர், இயக்குநர் அல்லது அறங்காவலராகும் திறன் கொண்டவர்.

இதனால்தான் விஷன் 2030 முக்கியமானது. ரோட்டரி தனது 125-வது ஆண்டு நிறைவை நெருங்கும்போது, 12.5 லட்சம் ரோட்டேரியன்கள், 1.25 லட்சம் ரோட்ராக்டர்கள் என்ற உலகளாவிய இலக்கு துணிச்சலானது. ஒவ்வொரு சங்கமும் வளர்ந்து, தக்கவைத்து, ஒவ்வொரு ரோட்டேரியனும் ரோட்டரியின் எதிர்காலத்தை உருவாக்க 'ஆம்' சொல்லும்போதுதான் இந்தக் கனவு நனவாகும்.

**முருகானந்தம்** M
RI துணைத்தலைவர், 2026–27
RI இயக்குநர், 2025–27

TRF
தலைவரிடமிருந்து...

# போலியோவை வரலாறாக்குவோம்



இந்த மாதம், அக்டோபர் 24 உலக போலியோ தினத்துக்காகச் சிறிது மகிழ்ச்சியுடன் முன்திட்டமிடல் பயிற்சி செய்ய விரும்புகிறேன். என்னுடன் இணைகிறீர்களா?

ஒவ்வோர் ஆண்டும் உலக போலியோ தினம், உலகில் எந்தக் குழந்தையும் இனி போலியோவின் பேரழிவு விளைவுகளை அனுபவிக்கக் கூடாது என்ற ரோட்டரியின் வாக்குறுதியை நினைவுகூரவும், சிந்திக்கவும், மீண்டும் உறுதியேற்கவும் ஒரு தருணத்தை அளிக்கிறது. இந்த ஆண்டு அந்தத் தருணம் மிகவும் வலிமையானதாக உணரப்படுகிறது.

ரோட்டரியின் முதன்மை நிறுவன முன்னுரிமையில் உங்கள் சங்கம் இதுவரை ஈடுபடவில்லை என்றால், இப்போதே endpolio.org/donate-ல் குறைந்தது 1,500 அமெரிக்க டாலர் நன்கொடை அளித்து தொடங்குங்கள். இந்த ஒரே தாராளச் செயல் நீங்கள் நினைப்பதைவிடப் பெரிய மாற்றத்தை உருவாக்கும். கேட்ஸ் அறக் கட்டளையின் இரண்டுக்கு ஒன்று இணை நன்கொடையால், ஒவ்வொரு டாலரும் மூன்று டாலராகிறது. ஒன்றாக, நமது ஆண்டு இலக்கான 50 மில்லியன் டாலரை எட்டி, ரோட்டரி தொடங்கிய பணியை நிறைவு செய்யலாம்.

போலியோ ஒழிப்பு என்பது துணிச்சல், கருணை, சேவை எதிர் காலத்தை மாற்ற முடியும் என்ற நம்பிக் கையால் உருவாக்கப்பட்ட மனிதநேய முயற்சியாகும்.

உலக போலியோ தினத்தில், அந்த உணர்வைத் துல்லியமாகக் குறிக்கும் ஒரு இடத்தில் நான் நேரம் செலவிடுவேன். நான் இதுவரை சென்றிராத தனித்துவமான இடம் அது; சமூக ஊடகங்களில் நிகழ்நேரத்தில் அதை வெளிப்படுத்த ஆவலாக உள்ளேன். படைப்பாற்றலுடனும் மகிழ்ச்சியுடனும் அங்கு இருக்கும் போது, ரோட்டரியின் உயரிய கொள்கைகளை வாழ்வாக்கும் நோய்த்தடுப்பு முன்னணிப் பணியாளர்கள், தன்னார்வலர்கள், சமூகத் தலைவர்களின் பணியை வெளிச்சமிடுவேன்.

இந்த ஆண்டின் பிற்பகுதியில், தலைவர் யின்காவும் நானும் இத்தலைவர்களில் பலரைச் சந்தித்து, எங்கள் தனிப்பட்ட நன்றியைத் தெரிவிக்க பாகிஸ்தானுக்குப் பயணம் செய்வோம். நாம் இவ்வளவு தூரம் வந்ததற்கும், தொடங்கியதை நிறைவு செய்ய வேண்டியதற்கும் காரணம் அவர்களே.

உலக போலியோ தினத்துக்குத் தயாராகும்போது, உணர்விலும் செயலிலும் என்னுடன் இணையுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒரு நிகழ்வை நடத்துங்கள். ரோட்டரியின் தலைமைத்துவக் கதையைச் சொல்லுங்கள். சமூகத்தைப் பங்கேற்க அழையுங்கள். உங்கள் சங்கத்தின் நன்கொடையை அளியுங்கள்.

குழந்தைகள் போலியோ அச்சமின்றி வாழும் எதிர்காலத்தை உறுதி செய்வது, நாம் அனைவரும் பகிர்ந்துகொள்ளும் பொறுப்பும் நம்பிக்கையும் ஆகும். இன்று எடுக்கும் உறுதியான நடவடிக்கை, நாளைய பாதுகாப்பான உலகத்தை உருவாக்க உதவும். இந்தப் பணியில் ஒவ்வொருவரின் ஆதரவும் எதிர்கால வெற்றிக்கு உண்மையிலேயே மிகவும் முக்கியமானது.

**ஜெனிபர் ஜோன்ஸ்**
TRF அறங்காவலர் தலைவர்


**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| RID 2981 | வைத்தியநாதன் K |
| RID 2982 | செந்தில்குமார் C |
| RID 3000 | R B S மணி |
| RID 3011 | அஜீத் ஜலான் |
| RID 3012 | அமித் குப்தா |
| RID 3020 | ஸ்ரீராம் குட்டிகொண்டா |
| RID 3030 | ராஜேஷ் V பாட்டீல் |
| RID 3040 | சன்ஸ்கர் கோத்தாரி |
| RID 3053 | பிரிஜ் மோகன் அகர்வால் |
| RID 3055 | நைமிஷ் N ராவணி |
| RID 3056 | அருண் பகாடியா |
| RID 3060 | நிலேஷ் R ஷா |
| RID 3070 | அனில் குமார் சிங்கல் |
| RID 3080 | ரீட்டா கல்ரா |
| RID 3090 | அமித் குமார் |
| RID 3100 | பாயல் கௌர் |
| RID 3110 | ஜஸ்பீர் சிங் பாட்டியா |
| RID 3120 | பூனம் குலாட்டி |
| RID 3131 | நிதின் S தாமலே |
| RID 3132 | ஜெயேஷ் R படேல் |
| RID 3141 | ராஜன் துவா |
| RID 3142 | நிலேஷ் V ஜாவந்த் |
| RID 3150 | உதய் சுதிர் பிலானி |
| RID 3160 | கேசவ் ரெட்டி P |
| RID 3170 | லெனினி டா கோஸ்டா |
| RID 3181 | சதீஷ் போலார் |
| RID 3182 | B M பட் |
| RID 3191 | அனில் குப்தா |
| RID 3192 | ரவிசங்கர் டகோஜு |
| RID 3203 | K பூபதி |
| RID 3204 | M V மோகன்தாஸ் மேனன் |
| RID 3205 | ஜோஷி சாக்கோ |
| RID 3206 | R S மாருதி |
| RID 3211 | K G நாயர் |
| RID 3212 | காந்தி கிருஷ்ணன் |
| RID 3231 | T S ரவிக்குமார் |
| RID 3233 | ஸ்ரீராம் துவ்வுரி |
| RID 3234 | சுரேஷ் D ஜெயின் |
| RID 3240 | அசிம் காந்தி A |
| RID 3250 | அனு நரங் |
| RID 3261 | ஆலம் S ரூப்ரா |
| RID 3262 | அனில் குமார் சமல் |
| RID 3291 | தபஸ் பட்டாச்சார்யா |



அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.

ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

This periodical is published by **PT Prabhakar** from Dugar Towers 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008, on behalf of **Rotary News Trust**, edited by **Rasheeda Bhagat** and printed by **Rasi Graphics** at 40 Peters Road, Royapettah, Chennai 600 014, India.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| K P நாகேஷ்<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3191 |
| M முருகானந்தம்<br>RI துணைத்தலைவர்<br>மற்றும் இயக்குநர் | RID 3000 |
| A S வெங்கடேஷ்<br>TRF அறங்காவலர் | RID 3234 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மகாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3234 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr பரத் பாண்ட்யா | RID 3141 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| ராஜு சுப்ரமணியன் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| குர்ஜீத் சிங் சேகோன் | RID 3070 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2026–27)

| | |
|---|---|
| பாயல் கௌர்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3100 |
| லென்னி டா கோஸ்டா<br>துணைத்தலைவர்,<br>ஆளுநர் குழு | RID 3170 |
| R சுப்ரமணி<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| அஜீத் ஜலான்<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3011 |



**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*



Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.


**TRF அறங்காவலர் செய்தி**



# தேவையே வழிகாட்டட்டும்

நம் பிராந்தியத்தின் பல மாவட்டங்களுக்குச் சென்று, சங்கங்கள் செயல்படுத்தும் திட்டங்களைப் பார்க்கும்போது, ரோட்டரியன்கள் தங்கள் திட்டங்களைப் பற்றி பேசும் ஆர்வம் என்னைக் கவர்கிறது. உரிமையுணர்வும் பெருமையும் தெளிவாகத் தெரிகின்றன. ஆனால், பல நேரங்களில் கிடைத்த விளைவிலேயே திருப்தியடைந்து, நாம் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய தாக்கத்தை நோக்கி முன்னேறுவதில்லை. இதுவே நமது சேவையின் பரப்பைச் சுருக்குகிறது.

நாம் எங்கிருந்து தொடங்குகிறோம் என்பதை மறுபரிசீலனை செய்வோம். சங்க நிதி திரட்டலில் இருந்தா, அல்லது திட்ட யோசனையில் இருந்தா? சமூகத்துக்குத் தேவையானதை இலக்காகக் கொண்டால், நமது ஆற்றலுக்கு எல்லையே இல்லை; நாம் செய்யக்கூடியதை மட்டுமே இலக்காக்கக் கூடாது. சமூகச் சேவைத் திட்டங்களின் தொடக்கப்புள்ளி தேவைக் கணிப்பாக இருக்க வேண்டும். நிறைவேற்றப்படும் தேவை, நீடித்தும் மீளமுடியாத வகையிலும் பயனளிக்கும் தாக்கத்தை உருவாக்க வேண்டும். சமூகங்களில் நிலையான மாற்றங்களை உருவாக்குவதிலேயே ரோட்டரி அறக்கட்டளை எப்போதும் கவனம் செலுத்துகிறது.

தனிநபரின் ஒவ்வொரு கருணை, நன்கொடைச் செயலும் ஒருவருக்கு உதவலாம்; ஆனால், ஒழுங்கமைந்த கூட்டு சேவையின் முழு வலிமையை அது பயன்படுத்தாமல் போகலாம். எனவே ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வொரு சங்கமும் தங்கள் சமூகத்தைச் சுற்றிப் பார்த்து, வாழ்க்கையை மாற்றக்கூடிய அவசரத் தேவையை அடையாளம் காண வேண்டும்.

பெரியதாகவும் கடக்க முடியாததாகவும் தோன்றும் பிரச்சினைகளைக்கூட, நாம் ஒன்றிணைந்து சிந்தித்துச் செயல்பட்டால் தீர்க்க முடியும். நமது பட்ஜெட்டுக்கு ஏற்ற திட்டங்களைத் தேடாமல், சமூகத்தை மாற்றும் தாக்கமிக்க யோசனைகளைத் தேடுவோம். தனிநபர்களாக நம்மால் செய்யக்கூடியவற்றின் கூட்டுத் தொகையை விட, நாம் ஒன்றிணைந்தால் மிகப் பெரியவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

நிலையான தாக்கத்தை ஏற்படுத்த, நம் சமூகங்களில் நாம் கூட்டாகத் தீர்க்கக்கூடிய தேவைகளைத் தேடி அடையாளம் காண உறுதியேற்போம். ராபர்ட் பிரவுனிங் தனது Andrea del Sarto கவிதையில் கூறியது போல்: “மனிதனின் எட்டும் எல்லை, அவன் பிடியில் உள்ளதைவிட மேலானதாக இருக்கவேண்டும்; இல்லையெனில் சொர்க்கம் எதற்காக?”

**A S வெங்கடேஷ்**
TRF அறங்காவலர்




RI இயக்குநர் K P நாகேஷ்.

ரஷீதா பகத்



# ரோட்டரியை உயர்ந்த சிகரங்களுக்கு அழைத்துச் செல்வோம்

ரஷீதா பகத்

விவசாயக் குடும்பத்தில் பிறந்த RI இயக்குநர் K P நாகேஷ், கர்நாடகத்தின் கனகபுரா தாலுகாவில் உள்ள ஒரு கிராமத்தில் வளர்ந்தார். உயர்நிலைப் பள்ளிவரை கன்னட வழியில் படித்த அவர், ஆங்கிலம், இந்தி மொழிகளைப் பாடங்களாகக் கற்றார். “உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல தினமும் சுமார் 8 கி.மீ. நடக்க வேண்டும்; மீண்டும் 8 கி.மீ. நடந்து திரும்ப வேண்டும்,” என்கிறார். PUC படிப்புக்காகக் குடும்பம் கனகபுராவுக்கு இடம்பெயர்ந்தது; கிராமத்திலிருந்து 23 கி.மீ. நடப்பது சாத்தியமில்லை என்பதே காரணம்.

பின்னர் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பட்டம் பெற்றார். வேலை தேடுவது அடுத்த சவாலாக இருந்தது; வேலை கிடைப்பது எளிதல்ல. இந்திய விமானப்படை அவரது வாழ்க்கையில் தற்செயலாக நுழைந்தது. இளம் இன்ஜினியர்களை இந்திய ஆயுதப் படைகளில் சேர்க்கும் விளம்பரத்தை ஒரு வகுப்புத் தோழர் பார்த்தார். “தேர்வாகப் போவதில்லை என்றாலும் செல்லலாம்; நல்ல சுற்றுலாவாக இருக்கும் என நினைத்தோம். பயணம், தங்குமிடம், உணவு எல்லாமே இலவசம்,” என்கிறார் நாகேஷ்.

அவருக்கே பெரும் ஆச்சரியமாக, ஒவ்வொரு சுற்றையும் வென்று தேர்வானார். பைலட் அதிகாரியாகச் சேர்ந்த அவர், பின்னர் ஃபிளைட் லெப்டினன்ட் பதவியை அடைந்து, விமானப்படையில் ஆறு ஆண்டுகள் பணியாற்றினார்.

### விமானப்படை ஆண்டுகள்

அவர் ஏன் வெளியேறினார்? 1990-களின் தொடக்கத்தில் பல இளம் இந்திய இன்ஜினியர்கள் அமெரிக்கா சென்று கொண்டிருந்தனர்; அவருடைய பெரும்பாலான வகுப்புத் தோழர்களும் அங்கே செல்ல முடிவு செய்திருந்தனர். “என் மனைவி உமா கணினி இன்ஜினியர்; நான் மெக்கானிக்கல் இன்ஜினியர். எனவே அமெரிக்கா போகலாம் என நினைத்தோம்.” ஆனால் விதி வேறு திட்டம்

## ஒரு பார்வையில்

மதம்: என் மதத்தையும் அனைத்துமதங்களையும் மதிக்கிறேன். ஆனால் பூஜை, பிற சடங்குகள் அனைத்தையும் உமா கவனித்துக்கொள்கிறார். எனக்காகவும் அவர் ஈடுசெய்கிறார் என்பதற்கு நான் நன்றியுள்ளவன்.

விருப்ப உணவு: நம் தென்னிந்திய உணவுக்கு ஈடு இல்லை. எல்லா வகை தோசைகளும் மிகவும் பிடிக்கும்; நிச்சயமாக பிரியாணியும் பிடிக்கும்.

சமையல்: சமையல் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு உண்டு. ஆனால் உமா என்னைச் சமையலறைக்குள் விடுவதில்லை!

உடற்தகுதி: காலை 4 முதல் 7 மணி வரை ஓட்டம், விளையாட்டுகள், உடற்பயிற்சி என இடைவிடாத மூன்று மணி நேரப் பயிற்சியளித்த இந்திய விமானப்படைக்கு நன்றி. இன்றும் உடற்தகுதி என் வழக்கத்தின் ஒரு பகுதி. காலை 6 மணிக்கு ஒரு மணி நேரம் ஷட்டில் பேட்மிண்டன் விளையாடி, மேலும் ஒரு மணி நேரம் உடற்பயிற்சிக் கூடத்தில் செலவிடுகிறேன். மகள் நிதி என்னை அங்கு செல்ல வற்புறுத்துவார்.

ஓய்வு: சற்றே ஓய்வெடுக்கச் சொன்னவரிடம், படுத்தவுடன் பதற்றம் வரும் என்றேன். மக்களுடன் பேசுவதும் பிஸியாக இருப்பதும்தான் எனக்கு உண்மையான ஓய்வு.

இசை: இசை மிகவும் பிடிக்கும்; அது மனதுக்கு ஓய்வளிக்கிறது. இந்தி, கன்னடப் பாடல்கள் உட்பட எல்லா வகை இந்திய இசையும் பிடிக்கும்.

திரைப்படங்கள், விருப்ப நடிகர்கள்: இந்தியத் திரைப்படங்கள் பிடிக்கும். ஆரம்பக் காலத்தில் ராஜ்குமார், பின்னர் ரஜினிகாந்த், கமல் ஹாசன் ஆகியோரை விரும்பினேன். இப்போது இந்திப் படங்களும் பிடிக்கும்; புதியவற்றைவிட பழைய படங்களே அதிகம் பிடிக்கும்.

மக்களை நேசிப்பவர்: பல செயல்களை ஒரே நேரத்தில் செய்ய விரும்புகிறேன். தினமும் சுமார் 18 மணி நேரம் வேலை செய்கிறேன். பல ஆண்டுகளாகக் குடும்பமாகிவிட்ட சுமார் 20 பேர் இருக்கிறார்கள். மாதம் ஒருமுறை திரைப்படம் பார்க்கவும், சுற்றுலா செல்லவும், லால்பாக் அல்லது கப்பன் பூங்காவில் அதிகாலை நடைப்பயிற்சி மேற்கொள்ளவும், அல்லது எங்காவது உணவருந்தவும் சந்திப்போம். மக்களுடன் இருப்பதே எனக்குப் பிடிக்கும்; தனியாக இருந்தால் பதற்றமும் அமைதியின்மையும் வருகிறது.



இயக்குநர் நாகேஷ், அவரது மனைவி உமா, மகள் நிதி மற்றும் மகன் தேஜஸ் ஆகியோருடன்.

வைத்திருந்தது. இன்னொரு விளம்பரம் அவரது வாழ்க்கையைப் புதிய திசைக்குத் திருப்பியது.

இம்முறை பாதுகாப்பு நிறுவனத்துக்காக இளம் பாதுகாப்பு அதிகாரிகள் தேவை என விளம்பரம் வந்தது. அமெரிக்கா செல்வதே நோக்கமாக இருந்ததால் அவர் அதில் கவனம் செலுத்தவில்லை. ஆனால் “என்ன நடக்கிறது பார்க்கலாம்” என உமா அவருக்காக விண்ணப்பித்தார். மூன்றாம் நாளே நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வந்தது; தேர்வாகி இரண்டு ஆண்டுகள் அங்கு பணியாற்றினார். இருப்பினும் விமானப்படை அவரது மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

விமானப்படை, குறிப்பாகத் தலைமைப் பண்பு குறித்து என்ன கற்றுத்தந்தது என்ற கேள்விக்கு, தேர்வு மிகவும் நுணுக்கமான, சவாலான நடைமுறை; ஏறத்தாழ ஐந்து நாட்கள் நீடித்தது என்கிறார். எழுத்துத் தேர்வுகள், தொழில்முறை அறிவு, குழுச் செயல்பாடுகள், விவாதங்கள், உடற்தகுதி, ஓட்டம், கயிறு ஏறுதல், தாவுதல் எனப் பல நிலைகள் இருந்தன. “ஓட்டத்தில் நான் முதலிடம் பிடித்தேன்.”

பள்ளிக்கால நடைப்பயிற்சி உதவியிருக்க வேண்டும் என்று கூறியபோது அவர் சிரிக்கிறார். “ஆம், அந்த நடைப்பயணங்களால் என் உடற்தகுதி மிகச் சிறப்பாக இருந்தது.” ஆனால் குழு விவாதங்கள் அவருக்குச் சிரமமானவை. IIT-க்கள், மற்ற மதிப்புமிக்க கல்லூரிகளைச் சேர்ந்த இளைஞர்கள் இருந்தனர். கன்னட வழியில் படித்த நாகேஷுக்கு உரையாடலில் நுழைவது கடினமாக இருந்தது. “அனைவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்; எனக்கு ஒரு வார்த்தைகூட சொல்ல வாய்ப்பு கிடைக்கவில்லை.”

அப்போதுதான் பார்த்த ஒரு படத்தில் இடம்பெற்ற “கமல் ஹாசன் உத்தி” நினைவுக்கு வந்தது. மொழிப் பிரச்சினையால் பேருந்து ஓட்டுநரை நிறுத்த முடியாத நடிகர், எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்தபின் உரக்கக் கத்துவார்; ஓட்டுநர் பிரேக் போடுவார்; பயணி இறங்கி நன்றி சொல்வார்.

அதுபோல முயல நாகேஷ் முடிவு செய்தார். திடீரென, “நண்பர்களே!” என்று உரக்கக்



ரஷீதா பகத்

*விருப்ப விடுமுறை இடம்: இயற்கையும் இயற்கை அழகும் நிறைந்த இடங்கள் பிடிக்கும். இயற்கை அழகின் உச்சம் நியூசிலாந்து; சில ஐரோப்பிய நாடுகளும் அழகானவை. அண்மையில் எட்டு ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சென்று மிகவும் ரசித்தோம்.*

*சுருக்கமாக ரோட்டரி: ஒப்பிட முடியாத, ஈடு இணையற்ற அமைப்பு; அனைவருக்கும் அனைத்தும் அதில் உண்டு. எதற்கும் ஒரே சாளரத் தீர்வு என்பதால்தான் ரோட்டரியை நேசிக்கிறேன்.*

*நல்ல தலைவர்: ரோட்டரி தலைவர்களின் அமைப்பு என்பதால், நல்ல தலைவர் முன்மாதிரியாக வழிநடத்த வேண்டும். அப்படிச் செய்தால் மக்கள் பின்பற்றி மதிப்பார்கள். பெங்களூருவின் மறைந்த PDG யோகானந்தாவிடம் நிறைய கற்றேன்; அவர் என் ரோட்டரி குரு.*

*ரோட்டரிக்கான கனவு: அமைப்பு இப்போது இருக்கும் நிலையில் எனக்குத் திருப்தியில்லை. ரோட்டரி நல்ல பணிகளைச் செய்கிறது; ஆனால் அரசு சாரா அமைப்புகளில் சிறந்ததாகவும் உச்சத்திலும் இருக்க வேண்டும். அதற்கான பண்பும் திறனும் இருக்கின்றன. சிக்கல் தலைவர்களில் அல்ல; தலைமைத்துவம் என்ற கருத்தில் உள்ளது. நம்மிடம் சிறந்த தலைவர்கள் இருக்கின்றனர்.*

*TRF நன்கொடை: உலகில் இரண்டாம் இடத்தில் இருந்தாலும் திருப்தியில்லை. திறன் பத்துமடங்கு வளர முடியும். பெங்களூரு ஏற்புரையில், 2030-க்குள் இந்தியாவில் 100 ரோட்டரி மாவட்டங்கள், TRF நன்கொடையாக 100 மில்லியன் டாலர் என்ற இலக்கை அறிவித்தேன்.*



இந்தியாவில் RID 3190 சிறந்த மாவட்டமாக்க வேண்டும் என்ற இலக்குடன் தொடங்கிய முயற்சி, TRF நன்கொடை மட்டுமல்ல; உறுப்பினர் வளர்ச்சி, ரோட்ராக்ட், இன்டராக்ட், பெண் உறுப்பினர்கள் ஆகியவற்றிலும் உலகின் முதலிடத்தைப் பெற்றது.

இந்திய ரோட்டரியின் வலிமை, உறுப்பினர் வளர்ச்சி, TRF நன்கொடை, சேவைத் திட்டங்கள் குறித்து RI இயக்குநர் நாகேஷ் நம்பிக்கையுடன் கூறுகிறார்: "யாராலும் நம்மை வெல்ல முடியாது. உலகுக்கான ரோட்டரி தலைவர்களை இந்தியா உருவாக்குகிறது. ரோட்டரி ஒரு உற்பத்தி ஆலையைப் போன்றது; தலைமைத்துவ உற்பத்தி ஆலையே அது."

ரோட்டரி மனிதர்களை மாற்றும் விதம் அவரை வியக்க வைக்கிறது. "என் கணவரைத் தலைவராக்கியதற்கு நன்றி; இப்போது அவர் முற்றிலும் மாறிவிட்டார் என்று பல பெண்கள் கூறியுள்ளனர்."

இந்திய ரோட்டரியில் உள்ள அரசியல் குறித்து அவர் அதிகம் கவலைப்படவில்லை. ஐந்து முதல் பத்து சதவீத வழக்குகள் எல்லை மீறலாம்; ஆனால் துணைத் தலைவர் M முருகானந்தமும் அவரும் அவற்றைக் கையாள்கிறார்கள். முன்மாதிரித் தலைமைதான் பதில். இந்தியாவில் இருந்து வரும் புகார்கள் குறைந்து வருகின்றன; அதிக மாவட்டங்களையும் தலைமை வாய்ப்புகளையும் உருவாக்கினால் சச்சரவுகளும் புகார்களும் குறையும் என அவர் நம்புகிறார்.

**குடும்பத்தின் ஆதரவு**

நாகேஷின் ரோட்டரி பயணம் குடும்ப ஆதரவால் சாத்தியமானது. ஆரம்பத்தில் அவர், உமா இருவரும் குடும்பச் சுற்றுலாக்கள், கூட்டங்கள், நிகழ்வுகளை மகிழ்ச்சியாக அனுபவித்தனர். உமாவும் 25 ஆண்டுகளாக ரோட்டேரியன். ஆனால் காலப்போக்கில் நாகேஷின் ஈடுபாடு வளர்ந்தது. "முன்பு என் நேரத்தில் 20 சதவீதம் ரோட்டரிக்காகச் செலவிட்டேன்; இப்போது அது ஏறத்தாழ 80 சதவீதம்."

இப்போது குறைவான நேரமே கிடைத்தாலும் குடும்பமும் நண்பர்களும் ஆதரவளிக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறார். "ஆனால் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பிறகு எதையும் செய்யாமல் எங்களுடன் கொஞ்சம் நேரம் செலவிடுங்கள் என்கிறார்கள்." மகள் நிதி பட்டயக் கணக்காளர், உடற்தகுதி ஆர்வலர். மகன் தேஜஸ் மெக்கானிக்கல் இன்ஜினியர்; தனது சொந்த ஸ்டார்ட்அப் நிறுவனத்தை நடத்துகிறார்.




அமெரிக்காவின் சிகாகோவில் உள்ள ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸின் இல்லத்தில், RI துணைத் தலைவர் மற்றும் இயக்குநர் M முருகானந்தத்துடன்.

கூறினார். அனைவரும் பேசுவதை நிறுத்தினர். "நாம் இந்தியாவுக்கு வெளியே நடப்பவற்றைப் பற்றி விவாதிக்கிறோம்; இந்தியாவுக்குத் திரும்புவோம்," என்றார். தேர்வுக் குழுவினர் குறிப்பெடுத்ததைப் பார்த்ததும், நல்ல மதிப்பெண் பெற்றதை உணர்ந்தார்.

பின்னோக்கிப் பார்க்கும்போது விமானப்படையே வாழ்க்கையின் திருப்புமுனை என்கிறார். தலைமைத்துவம், அச்சமின்றி நம்பிக்கையுடன் பேசும் திறன், ஒழுக்கம், நேர மேலாண்மை, உடை அணியும் நெறி எனப் பல நல்ல அம்சங்களை விமானப்படை கற்றுத்தந்தது.

### ரோட்டரியின் வருகை

அதன் பின்னர் ரோட்டரி வந்தது. விமானப்படை நண்பர் G C ஜெயப்பிரகாஷ், ஒரு ரோட்டரி சங்கத்தில் இணையுமாறு கூறிய போது நாகேஷுக்கு ரோட்டரி பற்றி எதுவும் தெரியாது. "நான் ஏற்கெனவே இந்தச் சங்கம், அந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன் என்றேன். இல்லை, இது முற்றிலும் வேறு; தொடர்புவலை, சேவை, தலைமைத்துவம், நிறைய மகிழ்ச்சி கொண்டது. குடும்பங்கள் நிகழ்வுகளில் சந்திக்கும், சுற்றுலா செல்வார்கள்," என நண்பர் விளக்கினார்.

1995-ல் RC பெங்களூரு ஹை கிரவுண்ட்ஸில் பட்டய உறுப்பினராகச் சேர்ந்தார். உடனே பொருளாளராக நியமிக்கப்பட்டார்; ஒழுக்கமான பாதுகாப்புப் பின்னணி கொண்டவர் என்பதே காரணம். 1998-ல் பாதுகாப்புச் சேவை நிறுவனத்தை உருவாக்குவதில் பிஸியாக இருந்ததால், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தலைவராகுமாறு கேட்டபோது மறுத்தார். ஆனால் சங்க உறுப்பினர்கள் விடாமுயற்சியுடன் செயல்பட்டனர்.

ஒரு கூட்டம் முடிந்தபின், மூத்த ரோட்டேரியன் ரமேஷ் ஜோஷி பெருமழையில் அவரது கார்வரை வந்தார். நாகேஷ் காருக்குள் இருக்க, ஜோஷி வெளியே நனைந்தபடி சங்கத் தலைவர் பொறுப்பை ஏற்குமாறு கேட்டார். இறுதியில் நாகேஷ் சம்மதித்தார். "ஒரு பொறுப்பை ஏற்றால் அதை மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டும்; இல்லையெனில் ஏற்கக்கூடாது என்பதே என் கொள்கை. அதனால் தான் தயங்கினேன்," என்கிறார். அந்தக் கொள்கை இன்றும் அவருடன் உள்ளது.

### சாதனை படைத்த DG

2015–16-ல் RID 3190 ஆளுநராக நாகேஷ் பொறுப்பேற்றார். TRF நன்கொடையில் தனது மாவட்டத்தை உலகின் முதலிடத்துக்குக் கொண்டு சென்றார். இந்தியாவில் சிறந்த மாவட்டமாக்க வேண்டும் என்ற இலக்குடன் தொடங்கிய முயற்சி, TRF நன்கொடை மட்டுமல்ல; உறுப்பினர் வளர்ச்சி, ரோட்ராக்ட், இன்டராக்ட், பெண் உறுப்பினர்கள் ஆகியவற்றிலும் உலகின் முதலிடத்தைப் பெற்றது என்று பெருமிதத்துடன் நினைவுகூர்கிறார்.

துபாய் இன்ஸ்டிடியூட்டில் அன்றைய RID 3190 DG அனைத்து விருதுகளையும் வென்றதை ரோட்டரி நியூஸ் பதிவு செய்ததையும், நினைவூட்டுகிறேன். அவர் சிரித்த படி பெரும்பங்கு தனது குழுவுக்குச் செல்லும் என்கிறார்; அதே சமயம் விமானப்படையில் கற்ற



ரஷீதா பகத்







*மேலிருந்து வலஞ்சுழியாக: தனது குருவும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான யோகானந்தாவுடன்; துபாய் மண்டல மாநாட்டில் (இடமிருந்து) PRIP K R ரவீந்திரன், வானதி, உமா, நாகேஷ், ஷர்மிஷ்தா மற்றும் PRID மனோஜ் தேசாய் ஆகியோருடன்; நாகேஷ் மற்றும் உமா திருமணத்தின்போது; டெல்லி மண்டல மாநாட்டில் இயக்குநர் நாகேஷும் உமாவும்.*

அனைத்தையும் பயன்படுத்தினேன் என்றும் கூறுகிறார்.

ரோட்டரி தனக்குத் தந்தவற்றைப் பற்றி, “மிகத் தகுதியான, முதிர்ச்சியுள்ள தலைவர்கள் கொண்ட நல்ல நண்பர் வலையமைப்பு ரோட்டரி. ரோட்டரியில் கற்கக் கிடைப்பது வேறு எங்கும் கிடைக்காது. மிக வெற்றிகரமான ரோட்டேரியன்களின் பண்புகளைப் பார்த்து நாமும் ஏற்கலாம். ரோட்டரி உங்களை மெருகேற்றுகிறது; தங்களை எப்படிப் பிரசன்னப்படுத்த வேண்டும் எனக் கற்றுத்தருகிறது,” என்கிறார்.

உலகைப் பார்க்கவும் சேவை செய்யவும் ரோட்டரி வாய்ப்பு அளித்தது. இணைந்த ஓராண்டிலேயே சங்கத்தின் போலியோ குழுத் தலைவரானார்; அதுவே ரோட்டரியில் தொடர முடிவெடுக்க வைத்த திருப்புமுனை. ஆளுநர் பதவிக்காலத்தில் தொழில் பாதிக்கப்பட்டதை ஒப்புக்கொள்கிறார்; ஆனால் அவர் முழுமையாக ரோட்டரியில் ஈடுபட்டிருந்தார். “நான் உலகின் முதலிடமாக முடிவு செய்துள்ளேன்; பிடிக்க முடிந்தால் பிடியுங்கள்,” என்று சகபடிப்பாளர்



களிடம் கூறினார். அந்தப் பட்டம் அவருடன் ஒட்டிக்கொண்டது.

52 வாரங்களில் 52 புதிய சங்கங்களைத் தொடங்கும் சவாலையும் எடுத்தார்; RI-யில் முதன் முறையாக அது நிறைவேறியதாகக் கூறுகிறார்.

### பெரிதாக இருப்பது எப்போதும் தவறல்ல

உறுப்பினர் தரமா, எண்ணிக்கையா என்ற விவாதத்தில் நாகேஷின் பார்வை வேறுபட்டது. "ஒருவரை ரோட்டரியில் சேர்க்கும்போது அவருக்குத் தரம் இருக்கிறது என்று எங்கே எழுதப்பட்டுள்ளது? முதலில் மக்களை ரோட்டரியில் சேருங்கள்; ரோட்டரியை விளக்குங்கள்; அவர்களைப் புரிந்துகொண்டு புதிய உறுப்பினர்களை உருவாக்குங்கள். ரோட்டரியை நேசிப்பவர் தொடர்வார்; விரும்பாதவர் எந்தக் காரணத்துக்காகவும் விலகலாம்."



PDG-*கள் பராக் ஷேத்* (3060), *சதீஷ் மாதவன்* (3191), H R *அனந்த்* (3192) *ஆகியோருடன்.*

## *பெண் உறுப்பினர்கள் அதிகரிக்க வேண்டும்*

*ரோட்டரிக்கு இன்னும் அதிகமான பெண்கள் தேவை என்பதில் நாகேஷ் தெளிவாக உள்ளார். "இந்திய ரோட்டரியில் பெண்கள் உறுப்பினர் நிலவரத்தில் எனக்குச் சிறிதும் திருப்தியில்லை. பெரிய படத்தைப் பாருங்கள்; எந்தத் துறையிலும் பெண்கள் முன்னணியில் உள்ளனர். அப்படியிருக்க, எங்கள் அமைப்பில் பெண்களை முன்னணிக்கு அழைக்கவோ ஊக்குவிக்கவோ ஏன் செய்யவில்லை? தலைமைப் பதவிகளில் அந்த இடைவெளி இன்னும் உள்ளது."*

*மெல்ல மாற்றம் ஏற்படுகிறது; அதிக பெண் சங்கத் தலைவர்களையும் ஆளுநர்களையும் காணத் தொடங்கியுள்ளோம். ஆனால் தற்போதைய 18 சதவீத பெண் உறுப்பினரை குறைந்தபட்சம் 33 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்கிறார்.*

*ரோட்டரி குடும்பத்துக்குள் அதிகப் பெண்களைக் கொண்டுவர இன்னர் வீலைப் பயன்படுத்தும் யோசனையை அவர் ஆதரிக்கிறார். "அது குறைந்த செலவானது, எளிதானது, அதிகக் கோரிக்கையற்றது. முதலில் அதிகப் பெண்கள் இன்னர் வீலில் சேரட்டும்; பின்னர் அதிலிருந்து 10–20 சதவீதம் ரோட்டரிக்கு வரலாம்." பிரேசிலில் இது வெற்றிகரமாக இருப்பதை எடுத்துக்காட்டி, இந்தியாவிலும் செயல்படுத்த வேண்டும் என்கிறார்.*

*பெண்கள் ரோட்டரிக்கு பல பலங்களைச் சேர்க்கிறார்கள் என்று அனுபவத்தில் அறிந்துள்ளார். அவர்கள் அதிகக் கவனமுள்ளவர்கள், உற்பத்தித் திறனும் செயல்திறனும் கொண்டவர்கள், நேர்மையானவர்கள், ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் இருப்பவர்கள். அதிகப் பெண் உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்கள் செழித்து வேகமாக வளர்கின்றன.*

*பெண்கள் இல்லாத சங்கங்களை அடையாளம் கண்டு, குறைந்தது 10 சதவீத பெண் உறுப்பினர்களையாவது இணைக்க ஊக்குவிக்கும் இயக்கம் ஏற்கெனவே நடக்கிறது. வாழ்க்கைத் துணையர், பெண் உறவினர்களை இன்னர் வீலில் சேர்த்து, பின்னர் இன்னர் வீல், ரோட்டரி இரண்டிலும் இரட்டை உறுப்பினர் வழங்குவது மற்றொரு வாய்ப்பு. செய்தி எளிது: "மக்கள்தொகையின் பாதியை ஓரங்கட்ட ரோட்டரியால் முடியாது."*

ரோட்ராக்ட் குறித்தும் அவர் மிகுந்த இலட்சியத்துடன் உள்ளார். இந்திய மக்கள் தொகையில் 65 சதவீதம் பேர் 35 வயதுக்குக் குறைவானவர்கள் என்பதால், ஒரு பெரியவாய்ப்பு இந்தியாவுக்கு உள்ளது என நம்புகிறார். 2030-க்குள் 1.25 லட்சம் ரோட்ராக்டர்கள் என்ற இலக்கை RI வாரியம் வைத்த போது, இந்தியா மட்டுமே அந்த இலக்கை அடையும் என்று கூறியதாகச் சொல்கிறார்.

இந்திய ரோட்ராக்டர்கள் கடந்த ஆண்டு 24,000-லிருந்து இந்த ஆண்டு சுமார் 50,000-ஆக இரட்டிப்பாகியுள்ளனர். அதை ஒரு லட்சமாக இரட்டிப்பாக்கி, அவரும் M முருகானந்தமும் இயக்குநர் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்பு 1.25 லட்சமாக்க வேண்டும் என்பதே இப்போது நோக்கம். அப்படியானால் உலகம் 2030-ல் அடைய வேண்டிய இலக்கை இந்தியா 2027-லேயே அடையும்.

தலைவர் யின்காவும், ரோட்ராக்டர்கள் ஒரு லட்சத்தை எட்டியவுடன் உலகில் எங்கிருந்தாலும் 48 மணி நேரத்தில் இந்தியா வந்து கொண்டாடுவேன் என உறுதியளித்துள்ளதாக நாகேஷ் கூறுகிறார்.

*அக்டோபர் 2026 இதழில் RI துணைத்தலைவர் M முருகானந்தத்தின் வாழ்க்கைச் சித்திரம்.*■

ADVT.

PROUD BNI MEMBER

## Pankaj Shah

COL Representative District 3131 2026-28
RI Convention Promotion Chair : Taipei, 2025-26
DRFC RID 3131 RY 2025-26
ARRFC ZONE 7 RY 2023-25
District Membership Chair 2022-25
District Learning Facilitator 2024-25
District Governor 2021-22
Charter Member : Rotary Club of Pune Sarasbaug



+91 98220 57299
rotary.pankajshah@gmail.com

Personal Secretary : 81490 57299 | Email : secretary.pankajshah@gmail.com

GDM RRFM

Shree Ganesh Dal & Besan Mills - Shirwal
Ramtilak Roller Flour Mills (p) Ltd. - Chakan
Mandar Health And Hygiene Pvt. Ltd. - Phaltan
M/s. Arun Narayandas Shah - Lonand
Shree Ganesh Shelters - Pune
M/s Deepchand Venichand Shah, Pune.

www.ramtilak.com www.ganeshdal.com
• ISO 9000:2015 • ISO 22000:2015

**Head Office**
Tel : +91 20 24404900 (30 lines)
Call Center : 7888039303.
admin@ramtilak.com

SCAN for the Location

**Corporate Office:**
Shop No. 243,
Chatrapati Shivaji Market Yard,
Gultekadi, Pune,
Maharashtra-411037

CRESCO HEALTHCARE
**Multibrand Pathology**
**www.crescohealthcare.com**

**PATHOLOGY HOME COLLECTION**
**MEDICAL STORE - CHEMIST AND DRUGGIST**

To avail the services
**89564 66801/2/3/4/5**

Download Cresco app

**PATHOLOGY PARTNERS**

Grant Medical Foundation Ruby Hall Clinic
DMH
Bharati Vidyapeeth's Bharati Hospital and Research Centre
Sahyadri
Trutest Laboratories
Metropolis The Pathology Specialist

# மாற்றத்தின் கதைகளைச் சொல்லுங்கள்: பாபலோலா

ரஷீதா பகத்

புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் அழுத்தம், உறுப்பினர் பலத்தை நீர்த்துப்போகச் செய்கிறது; தரத்தைவிட எண்ணிக்கைக்கே முக்கியத்துவம் அளிக்கிறோம் என்று சில ரோட்டேரியன்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் ரோட்டரி அழைப்பின் மூலம் இணையும் அமைப்பு. உங்களில் தரமற்றவர் யார்? இங்கே ஹைதராபாத்திலேயே தகுதியும் திறமையும் வளமும் நிறைந்த, ரோட்டேரியன்களாகத் தகுதியானவர்கள் உள்ளனர். ஆனால் அவர்களிடம் நுழைவுச்சீட்டு இல்லை. நீங்கள் அவர்களை அழைக்காவிட்டால், 15 ஆண்டுகளில் இந்த அரங்கு காலியாகிவிடும்; RI தலைவர் தனது நிகழ்ச்சியைத் திட்டமிடும்போது ஹைதராபாத் பட்டியலில் இருக்காது என்று RI தலைவர் யின்கா பாபலோலா கூறினார்.

RC ஹைதராபாத் ஈஸ்ட், RC ஹைதராபாத் சென்டினியல் மற்றும் ஆஸ்ரய் வாரங்கல் இணைந்து நடத்திய, ‘நீடித்த தாக்கத்தை உருவாக்குதல்’ என்ற RI மாவட்டம் 3150 உறுப்பினர் கருத்தரங்கில் அவர் பேசினார்.

உறுப்பினர் வளர்ச்சி குறித்து, ரோட்டரி துணைத்தலைவர் M முருகானந்தமும் RI இயக்குநர் K P நாகேஷும், இந்தியா 10,000 நிகர உறுப்பினர் வளர்ச்சிக்கு உறுதியளித்ததாகத் தெரிவித்தனர். மொத்த இலக்கின் 40 சதவீதம் என்பதால் முதலில் பாபலோலா கவரப்பட்டார். ஆனால் இந்தியாவின் 10 நகரங்களுக்குச் சென்ற பிறகு, 10,000 போதுமான இலக்கல்ல என்று முடிவு செய்தார். “புதிய உறுப்பினர் ஒரு சொத்து, புதிய வளம், ரோட்டரியின் எதிர்காலத் தலைவர். மக்களின் வாழ்வை நல்லபடியாக மாற்றும் அமைப்புக்கு அதிக உறுப்பினர்களைக் கண்டறிவதில் ஏன் சிரமம் இருக்க வேண்டும்?”

எங்கேயோ ஒரு தொடர்பின்மை உள்ளது; ரோட்டேரியன்களாக நாம் மாற்றத்தின் கதைகளைச் சொல்வதில்லை என்பதே அதற்குக் காரணம் என்றார். ரோட்டரியின் நோக்க அறிக்கை, “ஒன்றாக இணைந்து, உலகம் முழுவதும், நமது சமூகங்களில், நம்மிடத்திலும் நீடித்த மாற்றத்தை உருவாக்கச் செயல்படும் உலகை நாம் காண்கிறோம்” என்கிறது.

போலியோ ஒழிப்பு நீடித்த தாக்கத்தை உருவாக்குகிறது. புணே சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்ட புதிய மையம், கம்பாலாவின் மேக்கரேரே பல்கலைக் கழகம் உள்ளிட்ட ரோட்டரி அமைதி மையங்களும் அதையே செய்கின்றன. இந்த மையங்களில் ஒவ்வொரு ஃபெல்லோவும், அமைதியை மேம்படுத்தும் அல்லது ஊக்குவிக்கும் சமூக மாற்ற முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இரு ஆண்டுகளில், இந்த மையங்கள் வழியாக 80 சமூக மாற்ற முயற்சிகள் நடைபெறும்; அவை நீடித்த மாற்றத்தை உருவாக்கும்.




*இடமிருந்து:* RID 3150 PDG *ரமேஷ் வங்கலா,* DG *உதய்* S *பிலானி,* RI *துணைத் தலைவர்* M *முருகானந்தம்,* RI *இயக்குநர்* K P *நாகேஷ், மாவட்ட PHS தலைவர் மொபலா ரவீந்தர் ரெட்டி,* RI *தலைவர் யின்கா பாபலோலா, அவரது மனைவி ப்ரெஸி,* TRF *அறங்காவலர்* A S *வெங்கடேஷ் மற்றும்* PDG *ஹன்மந்த் ரெட்டி.*

ரோட்டரியின் கவனப் பகுதிகளில் மாற்றம் உருவாக்கும் ரோட்டேரியன்களிடம், “நம்மிடத்தில் நீடித்த மாற்றம் ஏற்பட என்ன செய்வது?” என்று கேட்டால் அரங்கு அமைதியாகிவிடுகிறது என்றார். ரோட்டரி மற்றவர்களுக்கு ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றியே பேசுகிறோம்; ரோட்டரி நம்மை எவ்வாறு மாற்றுகிறது என்பதைச் சிந்திப்பதில்லை. அதைச் சிந்தியுங்கள் என்றார்.

30 வயது வழக்கறிஞராக இருந்தாலும், 50 வயது இன்ஜினியராக இருந்தாலும், 70 வயது ஓய்வுபெற்ற தொழிலதிபராக இருந்தாலும், ஒவ்வொருவரும் வாழ்க்கையில் நீடித்த மாற்றத்தை விரும்புகிறார்கள். “அவர்கள் வரும்போது ரோட்டரியின் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்; அவர்களை வரவேற்கவும்; இங்கே அவர்கள் சேர்ந்திருக்க முடியும், அவர்களின் கருத்துகளுக்கு மதிப்பு உண்டு என்பதை உணர்த்துங்கள்.” பன்முகத்தன்மை, நேர்மை, தங்கள் தொழில் மற்றும் திறமையால் சமூகத்தை மேம்படுத்தும் வாய்ப்பு, தலைமைத்துவத் திறன் வளர்ப்பு, நட்பு, தோழமை, மகிழ்ச்சி நிறைந்த சூழல் ஆகியவை அவர்களுக்குக் கிடைக்கும்.



ரோட்டரியின் தனிச்சிறப்பை விளக்க தன் கலிஃபோர்னியா அனுபவத்தைப் பகிர்ந்தார். 2004-ல் ஷெல்லில் பணிபுரிந்த போது திடீரென பல் வலி ஏற்பட்டது. ரோட்டேரியன் நண்பரைத் தொடர்பு கொண்டு பல் மருத்துவரைச் சந்திக்க வேண்டும் என்றார். நண்பரும் மனைவியும் ஹோட்டலுக்கு வந்தனர்; அங்கு நேரம் பெறுவதற்கே ஐந்து அல்லது ஆறு நாட்கள் ஆகும் என்றனர். ஆனால் நண்பர், ரோட்டேரியன் பல் மருத்துவரை அழைத்தார்; ஒரு மணி நேரத்தில் வருமாறு அவர் கூறினார்.

அமெரிக்காவில் காப்பீடு இல்லாததால், சிகிச்சைக்கு ஆயிரக்கணக்கான டாலர்கள் செலவாகுமோ என்ற பயத்தில் பாபலோலாவின் இதயம் துடித்தது. வலி காரணமாக வேறு வழியில்லை. சிகிச்சை முடிந்து வலி குறைந்தது; ஆனால் பணம் குறித்த பயம் அதிகரித்தது. கட்டணம் பற்றி கேட்ட போது, பாபலோலா தன் நாட்டில் ரோட்டரிக்காகச் செய்யும் பணியை அமெரிக்க ரோட்டேரியன் கூறியதாக மருத்துவர் சொன்னார். “சிகிச்சை இலவசம்.” இதுவே ரோட்டரி அளித்த மதிப்பு என்றார்.

27 வயது ரோட்ராக்டராக இருந்தபோது ரோட்டரியில் இணைய விரும்பி ஒரு சங்கக் கூட்டத்துக்குச் சென்றதையும் நினைவுகூர்ந்தார். சங்கத் தலைவர், “இந்த முறை என்ன வேண்டும்?” என்று கேட்டார். ரோட்டரியில் சேர வந்ததாகச் சொன்னபோது, “என்ன துணிச்சல்! அழைப்பின் மூலமாக மட்டுமே நீங்கள் ரோட்டரியில் இணைய முடியும்,” என்றார். அவர் விலகி லயன்ஸ் போன்ற வேறு அமைப்பில் சேர்ந்திருக்கலாம். ஆனால், பெற்றோர் வீட்டுக்குச் செல்ல குழந்தைக்கு அழைப்பு தேவையா என்று பதிலளித்தார். அப்போது ஒரு ரோட்டேரியன் எழுந்து, “யின்கா, இந்தச் சங்கத்துக்கு நான் உன் ஆதரவாளராக இருப்பேன்,” என்றார். அப்படித்தான் ரோட்டேரியனானார்.

ரோட்ராக்டரிலிருந்து RI தலைவராக உயர்ந்திருந்தாலும், இது பரிசல்ல; ஆண்டுகளாக ரோட்டரி தன்னில் செய்த முதலீட்டைத் திருப்பிச் செலுத்தும் நேரம் என்று கூறினார். “ரோட்டேரியன்களே, நீங்கள் யாருக்கு வழிகாட்டுகிறீர்கள்? அமைப்பின் எதிர்காலத் தலைவர்களான உங்கள் ரோட்ராக்டர்களுக்காக என்ன செய்கிறீர்கள்?” என்றார்.

நைஜீரிய காவல் துறைத் தலைவரின் கூற்றையும் நினைவு படுத்தினார்: ரோட்டேரியனால் வழிகாட்டப்படும் ஒவ்வொரு இளைஞரும் எதிர்காலத்தில் கைது செய்ய வேண்டியவர்களின் எண்ணிக்கையில் ஒருவர் குறைவு.

DG உதய் பிலானி அறிவித்தபடி, RID 3150 உலகிலேயே முதல் முறையாக 100 சதவீத EREY

*இங்கே ஹைதராபாத்திலேயே தகுதியும் திறமையும் வளமும் நிறைந்த, ரோட்டேரியன்களாகத் தகுதியானவர்கள் உள்ளனர். நீங்கள் அவர்களை அழைக்காவிட்டால், RI தலைவர் தனது நிகழ்ச்சியைத் திட்டமிடும்போது ஹைதராபாத் பட்டியலில் இருக்காது.*

பங்களிப்பை அளித்ததற்குப் பாராட்டு தெரிவித்தார். மாவட்டத்தின் 4,172 ரோட்டேரியன்கள் TRF-க்கு தலா ரூ.3,500 வழங்கி, மொத்தம் 153,705 டாலர் அளித்தனர்.

மே 2027-க்கு முன் இந்திய ரோட்ராக்டர்களின் எண்ணிக்கையை 50,000-லிருந்து ஒரு லட்சமாக உயர்த்தும் இரு RI இயக்குநர்களின் இலக்கைப் பற்றியும் அவர் பேசினார். “அது நடக்கும்போது எனக்கு அழைப்பு அனுப்புங்கள். நான் அர்ஜென்டினா செல்லும் வழியிலிருந்தாலும், இந்தியாவில் எங்காவது உங்களைச் சந்திப்பேன். இது வாக்குறுதி,” என்றார்.

RI துணைத்தலைவர் M முருகானந்தம், TRF நிதியின் மூலம் ரோட்டேரியன்கள் செய்யும் சமூகச் சேவை வியப்பூட்டுவதாகக் கூறினார். கல்வி, நோய்த் தடுப்பு, உள்ளூர் பொருளாதார மேம்பாடு, தாய்மார் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு, தூய நீர், அமைதி மேம்பாடு என ரோட்டரியின் அனைத்து கவனப் பகுதிகளையும் அது உள்ளடக்குகிறது என்றார்.

15 வயதிலிருந்தே TRF-க்கு நன்கொடை வழங்கத் தொடங்கியதாக அவர் தெரிவித்தார். “இன்றுவரை தனிப்பட்ட முறையிலும் என் நிறுவனத்தின் CSR முயற்சிகள் மூலமாகவும், ரோட்டரிக்காக

ரூ.20 கோடி முதல் ரூ.40 கோடி வரை பல்வேறு திட்டங்களில் பங்களித்துள்ளேன் அல்லது செலவிட்டுள்ளேன்,” என்றார்.

அவரது எக்செல் குழுமம் ரூ.120 கோடி செலவில் புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனையை அமைத்து வருகிறது. இதில் 80:20 என்ற விகிதத்தில் சேவை வழங்கப்படும்; பெரும்பாலான பயனாளிகள் ஏழை, வசதி குறைந்த மக்கள். இந்த மருத்துவமனை உருவாகுவதற்கான தூண்டுதலை TRF-க்கே அவர் வழங்கினார்.

இந்திய ரோட்டரி உண்மையிலேயே துடிப்புடன் இருப்பதாகக் கூறிய அவர், உறுப்பினர் வளர்ச்சியில் உலகின் முதலிடத்திலும் TRF பங்களிப்பில் இரண்டாம் இடத்திலும் இந்தியா உள்ளதாகத் தெரிவித்தார். TRF பங்களிப்பில் RID 3141 உலகின் முதலிடத்தையும், இரண்டாம் நிலை நகரமான திருப்பூரை உள்ளடக்கிய RID 3203 உலகின் இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் TRF நன்கொடை 20 மில்லியன் டாலரிலிருந்து கடந்த ஆண்டு 45 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. மண்டலங்களின் தற்போதைய வளர்ச்சி தொடர்ந்தால், அது இறுதியில் 100 மில்லியன் டாலரை எட்டும் என்றார்.

16 வயதில் ரோட்ராக்டராக இருந்தபோதே, இந்தியக் குழந்தைகளுக்கு மிகவும் முக்கியமான தேசிய தடுப்பூசி நாட்களைக் கவனித்து வந்ததாக முருகானந்தம் கூறினார்.

> ரோட்டரி மற்றவர்களுக்கு ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றியே பேசுகிறோம்; ரோட்டரி நம்மை எவ்வாறு மாற்றுகிறது என்பதைச் சிந்திப்பதில்லை. அதைச் சிந்தியுங்கள்.

TRF-க்கு நன்கொடை அளிக்க ரோட்டேரியன்களை ஊக்குவித்த அவர், அந்த நிதி போலியோவை முழுமையாக ஒழிப்பதற்கும் உலகில் ஏராளமான நன்மைகளைச் செய்வதற்கும் பயன்படுகிறது என்றார். TRF-ல் முழுமையான பொறுப்புக்கூறலும் கடுமையான நிதிப் பாதுகாப்பும் உள்ளதால், ஒவ்வொரு டாலரும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

அடுத்த ஆண்டு அல்லது ஐந்து, பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, “ஒரு குழந்தை சுதந்திரமாக நடந்து ஓடுவது, ஒரு சிறுமி கல்வி பெறுவது, ஒரு கிராமம் தூய குடிநீர் பெறுவது, உள்ளூர் சமூகம் வலுப்பெறுவது, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவது” ஆகியவற்றைப் பார்க்கும்போது பெருமிதம் கொள்ளலாம் என்றார்.

RI இயக்குநர் K P நாகேஷ், இந்திய ரோட்டேரியன்கள் பல ஆண்டுகளாகத் தங்கள் சொந்த நிதியால் திட்டங்களை மேற்கொண்டு வந்ததாகக்



கூறினார். தற்போது CSR துறையில் நுழைந்ததால், பெரும் நிதி கிடைத்து அதிகமான, நீடித்த திட்டங்களைச் செய்ய முடிகிறது. ஆண்டுதோறும் சுமார் ரூ.48,000 கோடி CSR நிதி கிடைப்பதாக மதிப்பிடப்படுகிறது. அரசு 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக உயர்த்தினால் கிடைக்கும் நிதியை நினைத்துப் பாருங்கள் என்றார்.

அதிக CSR நிதியைப் பெற ரோட்டேரியன்கள் முயன்று வருவதாகவும், கோவிட் காலம் வசதி குறைந்தோருக்காக அதிகமாக வழங்க பலருக்குக் கற்றுத்தந்ததாகவும் கூறினார்.

இந்தியாவில் TRF நன்கொடை பெரிதும் உயர்ந்து, அதிக AKS



*இடமிருந்து: அறங்காவலர் வெங்கடேஷ், இயக்குநர் நாகேஷ், தலைவர் பாபலோலா, ப்ரெஸி மற்றும் RI துணைத் தலைவர் முருகானந்தம்.*




*தலைவர் பாபலோலா, RC கோயம்புத்தூர் ஆக்ருதி உறுப்பினர் லீமா ரோஸ் மார்ட்டினை வரவேற்கிறார். இடமிருந்து: அறங்காவலர் வெங்கடேஷ், RI துணைத் தலைவர் முருகானந்தம், இயக்குநர் நாகேஷ், RID 3206 DG R S மாருதி மற்றும் RID 3150 DG பிலானி ஆகியோரும் உள்ளனர்.*

உறுப்பினர்கள் உருவாகி வருவதாக அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். இந்த ஆண்டின் இலக்கு 75 AKS உறுப்பினர்கள். ஆண்டிறுதியில் அறங்காவலர் தலைவர் இந்தியா வரும்போது மும்பையில் நடைபெறும் பெரிய நிகழ்வில் இது கொண்டாடப்படும். இந்த ஆண்டுக்கான TRF நன்கொடை இலக்கு 60 மில்லியன் டாலர் என்றும் அவர் அறிவித்தார்.

TRF அறங்காவலர் A S வெங்கடேஷ், தன் முன் இருந்த கூட்டத்திடம் அறக்கட்டளைக்கு ஏன் நன்கொடை அளிக்க வேண்டும் என்று கூறத் தேவையில்லை; அது ஏற்கெனவே நம்பிக்கை கொண்டவர்களுக்குப் போதிப்பதுபோல் இருக்கும் என்றார். அறக்கட்டளையின் செயல்பாடுகளையும் அதன் திறனையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

ஆனால் சமூகங்களைச் சுற்றியுள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் TRF தரும் மதிப்பையும், ரோட்டேரியன் தன்னார்வலர்கள் வழங்கும் மதிப்பிட முடியாத மனித நேரத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்த விரும்புவதாகக் கூறினார். DG உதய் பிலானி கூறியபடி, அவர்களின் சேவையை வாங்க முடியாது; அது வாங்கக்கூடியதல்ல, என்றார்.

TRF திட்டம் ஒவ்வொன்றிலும் பல துறைகள், தொழில்களைச் சேர்ந்த ரோட்டேரியன்களின் அபூர்வமான திறமை, தொழில்நுட்ப நிபுணத்துவம், மனித நேரம் இடம்பெறுகிறது. இதை டாலர் மதிப்பில் கணக்கிட முடியாது. CSR நிதியுடன் ரோட்டேரியன்கள் சமூகங்களை மாற்ற முடியும்; ஏனெனில் வழங்கப்படும் நிதியின் பெரும்பகுதி நேரடியாகச் சேவைத் திட்டத்துக்கே செல்கிறது.

ரெட் கிராஸ் கணக்கறிக்கையில், ஒரு திட்டத்துக்காக வழங்கப்பட்ட நிதியில் 34 சதவீதம் நிர்வாகப் பணிகளுக்குச் செலவானதைப் பார்த்ததாக வெங்கடேஷ் குறிப்பிட்டார். ரோட்டரியில் அது ஒற்றை இலக்க சதவீதத்தில்தான் உள்ளது; எனவே பயனாளிகளுக்கு உண்மையில் கிடைப்பது மிக அதிகம். பிற அரசு சாரா அமைப்புகள் பெரும்பாலும் ஊதியம் பெறும் ஊழியர்கள் மூலம் தொண்டுப் பணிகளைச் செய்கின்றன; இங்கே ரோட்டேரியன்கள் நம்பிக்கையால் செய்கிறார்கள். அதுவே பெரும் வித்தியாசம் என்றார்.

RID 3150 DG உதய் பிலானி, தான் மூன்றாம் தலைமுறை ரோட்டேரியன்; மகள் நான்காம் தலைமுறை என்றார். ரோட்டரி வாழ்க்கைக்கு அளித்த பெரும் மதிப்பு, பொறுப்பான குடிமக்களாகவும் சிறந்த மனிதர்களாகவும் மாற்றியதால்தான் குடும்பம் இதில் இருப்பதாகக் கூறினார். “வங்கிக் கணக்கில் எத்தனை பூஜ்ஜியங்கள் உள்ளன என்பது முக்கியமல்ல; எத்தனை வாழ்வுகளைத் தொடுகிறோம் என்பதே முக்கியம்,” என்றார்.

RID 3150 நான்கு தாக்கமிக்க திட்டங்களைச் செய்கிறது. சீரழிந்த 2,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நகர்ப்புற நிலத்தைப் புனரமைக்க தெலங்கானா அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஹைதராபாத் முழுவதும் 14 அரசு மருத்துவமனைகளில் பிறந்த குழந்தை பராமரிப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன; எந்த மருத்துவமனைக்குச் சென்றாலும் கர்ப்பிணித் தாய்க்கு எதுவும் குறையாமல் இருக்க வேண்டும் என்பதே நோக்கம்.

தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் முழுவதும் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் எட்டாம் முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் சிறுமிகளுக்கு 8,000 மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. தன்னம்பிக்கையுடன் பள்ளிக்குச் சென்று, வகுப்புகளில் தொடர்ந்து பங்கேற்று, எதிர்காலத்தை உருவாக்க அவர்கள் உதவுவார்கள். சமூகத்துக்கு சேவை வழங்க தொழில் துறையுடனும் அரசுடனும் இணைவதற்கும் மாவட்ட ரோட்டேரியன்கள் தீவிரமாக முயன்று வருகிறார்கள்.

AKS உறுப்பினரும் RC கோயம்புத்தூர் ஆக்ருதியின் உறுப்பினருமான லீமா மார்டின், ரூ.3 கோடி நன்கொடை அறிவித்தார். RC ஜூபிலி ஹில்ஸைச் சேர்ந்த டண்டோலு P ரெட்டி, ஜான்சி பிரேமானந்த் ஆகியோர் TRF-க்கு தலா 25,000 டாலர் வழங்கினர்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

(அடுத்த இதழில்: பாபலோலாவின் தொப்பி 31,000 டாலர்களுக்கு ஏலம் போனது!)

# பூடானில் ரோட்ராக்டர்களின் மறக்கமுடியாத பயணம்

ரஷீதா பகத்

குழு உறவை வலுப்படுத்தும் தனித்துவமான முயற்சியாக, RID 3240-ஐ சேர்ந்த 20-க்கும் மேற்பட்ட சங்கங்களின் சுமார் 80 ரோட்ராக்டர்கள், அசாமிலிருந்து பூடானின் கெலேஃபு பகுதிக்கு அண்மையில் ஒருநாள் பயணம் மேற்கொண்டனர். குறுகிய காலம் பூடானுக்குச் செல்லும் இந்தியர்களுக்கான சிறப்புப் பயண விதிகளை அவர்கள் பயன்படுத்தினர்.

அசாமின் போங்காய்கானிலிருந்து பூடானின் கெலேஃபுவுக்கு இந்தப் பயணத்தை ஏற்பாடு செய்த RID 3240 IPDRR குமார் சிவம் தாஸ், வெறும் 45 நிமிட கார் பயணமான இது அனைவருக்கும் மறக்கமுடியாத அனுபவமாக அமைந்தது என்கிறார்.

இந்தியப் பயணிகள், கெலேஃபு நகரப்பகுதியின் 10 கி.மீ. சுற்றளவுக்குள் செல்ல பூடான் அரசு அனுமதிக்கிறது. மலைகள், நீர்வீழ்ச்சிகள், பசுமை, வெந்நீரூற்றுகள் நிறைந்த அழகிய பகுதி இது. அசாம் எல்லையில் அமைந்துள்ள இங்கு, இந்தியர்கள் பூடானுக்குள் நுழைவு அனுமதிச்சீட்டு இல்லாமல் சுமார் 8–10 கி.மீ. தொலைவில் 24 மணிநேரம் தங்கலாம். குடியேற்றச் சாவடியில் அடையாள அட்டையுடன் பதிவு செய்தால் போதும்.

“மாவட்டம் 3240 ரோட்ராக்டர்களின் முதல் சர்வதேசப் பயணம்” என உற்சாகமாகக் கூறும் தாஸ், 2025–26 ரோட்ராக்ட் மாவட்டக் குழு இப்பயணத்தை நடத்தியதாகச் சொல்கிறார். அசாமின் ரோட்ராக்ட் சங்கம் போங்காய்கான் பெருமளவு களப்பணியை மேற்கொண்டது. பூடானில் நடந்த RID 3240 ரோட்ராக்டர்களுக்கான விருது வழங்கும் விழாவே இதை சாத்தியமாக்கியது. சுமார் 130 பேர் அந்த விழாவில் பங்கேற்றனர்; மாவட்டத்தில் சுமார் 850 ரோட்ராக்டர்கள் உள்ளனர்.

“மலைகள், கலாசாரம், ஆன்மிகம், மறக்கமுடியாத நட்புறவு நிறைந்த பயணமாக இது அமைந்தது. கெலேஃபுவின் அமைதியான அழகு, மற்ற ரோட்ராக்டர்களும் இத்தகைய பயணத்தில் இவ்விடத்தை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது,” என்கிறார் அவர்.

செலவு மிகக் குறைவு; பதிவுக் கட்டணம் ரூ.749 மட்டுமே. ஆனால் அனுபவம் அளவிட முடியாதது. அமைதியான மலைகளில் பிரார்த்தனை எதிரொலித்த யக்யஸ்வர் சிவ் மந்திரின் தெய்வீக அமைதியிலிருந்து, ஷெர்ஜோங் கெவோக்கின் மனதைக் கவரும் இயற்கை வரை, கெலேஃபுவின் ஒவ்வோர் இடமும் எளிமை, ஒற்றுமையின் கதையைப் பேசியது எனத் தாஸ் கூறுகிறார்.

அசாம் அரசின் உணவுப் பாதுகாப்புத் துறையில் பணிபுரியும்



கெலேபுவில் உள்ள யக்யேஸ்வர் மகாதேவ் சிவாலயக் கோயிலில் ரோட்டராக்டர்கள்.




*ஷெர்ஜோங் கெவோக் பாலம்.*

தாஸ், இது வெறும் பயணமல்ல; எப்போதும் மனதுக்கு நெருக்கமாக இருக்கும் தருணங்களின் தொகுப்பு என்கிறார். 80 பேரில் 60-க்கும் அதிகமானோருக்கு இதுவே முதல் சர்வதேசப் பயணம். கெலேஃபு சந்தையின் துடிப்பான தெருக்கள், பூடானிய கலாசாரத்தின் அன்பான வரவேற்பு, உள்ளூர்வாசிகளின் புன்னகை, வண்ணமயமான மரபுகள் ஆகியவை ஒவ்வொரு கணத்தையும் உயிர்ப்புடன் ஆக்கின. சுற்றிப்பார்ப்பதைத் தாண்டி, இந்தப் பயணம் நட்பு, ஒற்றுமை, ரோட்ராக்ட் பிரதிபலிக்கும் தோழமை உணர்வின் கொண்டாட்ட மானது.



PDRR *குமார் சிவம் தாஸ் (இடமிருந்து இரண்டாவதாக) மற்றும் ரோட்டராக்டர்கள் கெலேபுவில் உள்ள தாலி மடாலயத்துக்குள்.*

குழுவில் தெற்காசிய MDIO-வின் தலைவர் நியமனரும் பொதுச் செயலரும் இடம்பெற்றனர். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ரோட்டரி மாவட்டங்களைக் கொண்ட பிராந்திய அமைப்பே MDIO; சங்கங்கள் செய்திகளைப் பகிரவும் தகவல் தொடர்பை வளர்க்கவும் இது உதவுகிறது.

விருது வழங்கும் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் பயணத்தின் நடைமுறைச் சாத்தியத்தை உறுதி செய்தன. ரோட்ராக்ட் மாவட்டக் குழுவும் போங்காய்கான் சங்கமும் இணைந்து பதிவு, போக்குவரத்து, உணவு ஏற்பாடுகளை கவனித்தன. எல்லையைக் கடக்கும் எளிய நடைமுறை, குறுகிய பயண நேரம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட செலவு காரணமாக, பலருக்கு இது எளிதில் அணுகக்கூடிய முதல் வெளிநாட்டு அனுபவமாக அமைந்தது.

கெலேஃபுவில் இயற்கைக் காட்சிகளை ரசித்ததோடு, குழுவினர் பூடானிய வாழ்க்கைமுறை, அங்குள்ள மக்கள், உள்ளூர் கலாசாரத்தின் அமைதியான தன்மை ஆகியவற்றையும் நெருக்கமாக உணர்ந்தனர்.

தனது மாவட்டத் தலைமைப் பொறுப்பில், உறுப்பினர்களை எண்ணிக்கையாக மட்டுமல்லாமல், ஒருவரையொருவர் ஆதரிக்கும் சமூகமாகப் பார்க்க வேண்டும் என்பதை தாஸ் வலியுறுத்துகிறார். பயணங்கள், உரையாடல்கள், வேலைவாய்ப்பு முயற்சிகள் ஆகியவை உறுப்பினர் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் துணைபுரியும் என்று அவர் நம்புகிறார். புதிய சங்கங்களை உருவாக்குதல், பல்கலைக்கழக மற்றும் சமூகச் சங்கங்களை இணைத்தல், உறுப்பினர்களுக்கான நடைமுறை வாய்ப்புகளை ஏற்படுத்துதல்

ஆகியவை இந்தக் கண்ணோட்டத்தின் பகுதிகளாகும். எதிர்காலப் பயணங்களும் இதே கூட்டுறவு உணர்வை மேலும் வலுப்படுத்தும்.

RC நார்த்ஈஸ்ட் கேட்டலிஸ்டில் இணைந்து ஏற்கெனவே ரோட்டேரியனாகியுள்ள தாஸ், 20-க்கும் மேற்பட்ட ரோட்ராக்ட் சங்க உறுப்பினர்கள் தொடர்புகொண்டு, பிணைப்பை வளர்த்து, அர்த்தமுள்ள உரையாடல்கள் நடத்தி இனிய நினைவுகளை உருவாக்கிய வாய்ப்பில் மகிழ்கிறார். “நம் நாட்டுக்கு மிக அருகில் இவ்வளவு அழகிய இடம் இருக்கும்போது கண்டிப்பாகச் செல்ல வேண்டும். நமது மாவட்டத்திற்கு நெருக்கமான இப்பகுதியை ரோட்ராக்டர்கள் இதுவரை ஆராயவில்லை. பூடான் மிக அழகான நாடு.”

இளைஞர்கள் தீவிரமான உரையாடல்களில் ஆர்வம் காட்டுகிறார்களா எனக் கேட்டபோது, “நிச்சயமாக,” என்கிறார் தாஸ். இளைஞர்கள் கோயில்களுக்குச் செல்ல விரும்பமாட்டார்கள் என்று பொதுவாகக் கருதினாலும், யக்ஸஸ்வர் சிவ் மந்திர் வருகையை குழுவினர் மிகவும் விரும்பினர். வயது எதுவாயினும், நாளின் இறுதியில் அனைவருக்கும் அமைதி தேவை என்கிறார் அவர்.

28 வயதான தாஸ், DRR-ஆக இருந்த ஆண்டிலிருந்து பெற்ற பாடத்தைத் தத்துவார்த்தமாகப் பகிர்கிறார்: “365 நாள் பயணத்தில் ஓடி நிறைவுக்கோட்டை அடைவதே என் நோக்கமல்ல. என் ரோட்ராக்டர்கள், சகபயணிகள், மூத்தோர், இளையோர் அனைவருடனும் நடக்க விரும்பினேன். மக்களைச் சந்தித்து, இறுதியில் ஒன்றாக நிறைவுக்கோட்டில் கூட வேண்டும். தனியாக யாரும் பெரிதாகச் சாதிக்க முடியாது; அனைவரையும் இணைத்துக்கொள்ள வேண்டும்.”

பூடான் பயணத்தில் சென்ற 80 பேரில் 25 பேர் ஏற்கெனவே ரோட்டரியில் இணைந்துள்ளனர். மாவட்டத்தில் 56 ரோட்ராக்ட் சங்கங்கள் உள்ளன; தனது DRR பதவிக்காலத்தில் 17 புதிய சங்கங்கள் சேர்க்கப்பட்டதாக தாஸ் பெருமையுடன் கூறுகிறார்.

இளைஞர்களுக்கான பயிற்சிப் பணியிடங்கள், வேலைவாய்ப்புகள் குறித்து மாவட்டத் தலைமை நிறுவனங்களுடன் பேசி வருகிறது. உறுப்பினர்களுக்கு இத்தகைய வாய்ப்புகளை அளித்தால்தான் உறுப்பினர் எண்ணிக்கை நீடிக்கும் அல்லது வளரும் என்பதை தலைமை உணர்கிறது. இதற்கான DPR, விரிவான திட்ட அறிக்கை, தயாராகிறது.

பூடான் போன்ற பயணங்கள் மீண்டும் நடத்தப்படுமா என்ற கேள்விக்கு தாஸ் புன்னகையுடன் தலையசைக்கிறார். இந்தப் பயணத்தில் தெற்காசிய MDIO பிரதிநிதிகள் பங்கேற்றதால், அண்மையில் பெங்களூருவில் நடந்த ரோட்ராக்ட் விருது நிகழ்வில், 45 தெற்காசிய ரோட்ராக்ட் மாவட்டங்கள் பங்கேற்றபோது, MDIO தலைவர்-தேர்ந்தெடுக்கப்பட்டவர் கெலேஃபு அனுபவத்தை அனைவருடனும் பகிர்ந்தார். இத்தகைய அழகிய பயணங்கள் ரோட்ராக்டர்களுக்கு மதிப்புமிக்க பிணைப்பு வாய்ப்புகளை வழங்குகின்றன என்றார்.

பூடான் பயணம் மே மாதம் நடந்தது. அண்மையில், மாவட்டத்தின் ஐந்து மண்டலங்களில் நான்காவது மண்டலத்தில் உள்ள அருணாச்சலப் பிரதேசத்துக்கும் மற்றொரு குழு சென்றது. பல்வகை மக்களைக் கொண்ட இம்மாவட்டத்தின் அந்த மண்டலத்தில் இரண்டு சங்கங்களே உள்ளதால், அங்குள்ள உறுப்பினர்களுடன் நம்சாய் பகுதிக்கு மற்றொரு நினைவுகூரத்தக்க பயணமாகத் தாஸ் சென்றார்.■



*கெலேபுவில் உள்ள யக்யேஸ்வர் மகாதேவ் சிவாலயக் கோயில்.*

# PRIP சாபூ பெயரில் சண்டிகர் பள்ளி

ரோட்டரி நியூஸ் குழு

PRIP ராஜேந்திர சாபூவின் 92-வது பிறந்தநாளான ஆகஸ்ட் 11 அன்று, நியூ சண்டிகரில் உள்ள பவன் வித்யாலயா பள்ளிக்கு பவன்ஸ் R K சாபூ வித்யாலயா எனப் பெயரிடப்பட்டது. 1996 முதல் சண்டிகர் கேந்திராவின் பாரதிய வித்யா பவன் பள்ளித் தொகுப்பின் தலைவராகச் செயல்படும் சாபூ, 1977 முதல் இக்கல்வி நிறுவனத்துடன் இணைந்துள்ளார்.

1,350 மாணவர்களைக் கொண்ட இப்புதிய பள்ளி, சண்டிகரில் பவன் பள்ளித் தொகுப்பின் மூன்றாவது பள்ளியாகும். அழகாக அமைக்கப்பட்ட ஐந்து ஏக்கர் வளாகத்தில், இந்தியா மற்றும் வெளிநாடுகளின் சிறந்த பள்ளிகளுக்கு இணையான நவீன வசதிகளும் உபகரணங்களும் உள்ளன.




PRIP *ராஜேந்திர சாபூ தனது* 91-*வது பிறந்தநாளில் பவன் வித்யாலயா மாணவர்களுடன்.*

சண்டிகரின் பவன் பள்ளிகள் பல தசாப்தங்களாக இந்தியாவின் சிறந்த பள்ளிகளில் ஒன்றாகப் பாராட்டப்படுகின்றன. நகரின் முதல் பவன் பள்ளி 1983-ல் தொடங்கப் பட்டது என்கிறார் அதன் செயலர் PDG மதுகர் மல்ஹோத்ரா. அவர் சாபூவுடன் 48 ஆண்டுகளாகவும், பவன் சண்டிகருடன் செயலராக 14 ஆண்டுகளாகவும் இணைந்துள்ளார்.

சாபூவின் பிறந்தநாளில் பள்ளி வெளியிட்ட காணொலியில், குழந்தைகள் ஒன்றாக அவருக்கு அன்புடன் வாழ்த்துத் தெரிவித்தனர். "சாபூ சார், நீங்கள் எங்களுக்கு வழங்கிய தொலைநோக்கிற்கும் மதிப்பீடு களுக்கும் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். பள்ளியை மட்டும் அல்ல, ஒரு பாரம்பரியத்தையே எங்களுக்கு அளித்துள்ளீர்கள்," என அந்தக் காணொலி நிறைவடைந்தது.■



# PRID பரத் பாண்டியா 2028–29 RI தலைவராகப் பரிந்துரை

RID 3141-ஐச் சேர்ந்த RC போரிவிலி உறுப்பினரான பரத் பாண்டியா, 2028–29க்கான RI தலைவர் வேட்பாளராக நியமன குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். எதிர்ப்பு இல்லையெனில், செப்டம்பர் 15 அன்று அவர் அதிகாரப்பூர்வமாக RI President Nominee ஆவார்.

பாண்டியா 2019–21ல் RI இயக்குநராகவும், 2020–21ல் RI பொருளாளராகவும், 2022–26ல் TRF அறங்காவலராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது RI திட்டங்கள் குழுவின் தலைவரும், TRF திட்டங்கள் குழுவின் துணைத் தலைவருமாவார். 2011–15ல் இந்திய போலியோப்ளஸ் குழுவில் பணியாற்றினார்; அக்காலகட்டத்தில் இந்தியா போலியோ இல்லா நாடாக சான்றளிக்கப்பட்டது. 2006–07ல் DG-ஆக இருந்தபோது, RID 3140 TRF-க்கு $2 மில்லியனுக்கும் அதிகமாக பங்களித்து, TRF வரலாற்றில் முதன்முறையாக ஓர் இந்திய மாவட்டம் (D 3140) TRF பங்களிப்பில் உலகில் முதலிடம் பெற்றது.

பாண்டியாவும் அவரது மனைவி, இன்னர் வீல் மாவட்டம் 314-ன் முன்னாள் மாவட்டத் தலைவரான மாதவியும், மேஜர் டோனர்களும் பெனிஃபாக்டர்களும் ஆவர். பாண்டியா பொது மற்றும் லேபராஸ்கோபிக் அறுவை சிகிச்சை நிபுணர்; மாதவி மகப்பேறு மருத்துவர்.■

# குணமளிக்கும் ஒரு ரோட்டரி நட்பு அமைப்பு

ரஷீதா பகத்




*தைய்பேய் மாநாட்டில், ரோட்டரி ஹிப்னாசிஸ் மற்றும் ஹீலிங் நட்புறவுச் சங்கத்தின் அரங்கில், பார்வையாளர் ஒருவருக்கு ஹார்லீன் கவுர் டாரட் அட்டை வாசிப்பு வழங்குகிறார்.*

தைவான் மாநாட்டில் மனதைத் தொட்ட காட்சிகளில் ஒன்று, RID 3080-ல் ரோட்டேரியன்களால் தொடங்கப்பட்ட Rotary Fellowship of Hypnosis and Healing (RFHH) அமைப்பினரின் அரங்கு. இமாசலப் பிரதேசத்தின் பாவோந்தா சாஹிப்பைச் சேர்ந்த (சண்டிகர் நகரிலிருந்து சுமார் 120 கி.மீ.) ஒவ்வாமை நோய் நிபுணரான டாக்டர் ஹர்சிம்ரன் சிங் சவுத்ரி இந்த அமைப்பைத் தொடங்கியவர். “தைபே மாநாட்டில் ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ட்ஷிப்பில் எங்கள் ஹீலிங் அண்ட் ஹிப்னாசிஸ் அரங்கை அமைத்தபோது, முதல் நாள் காலையில் அரங்குக்குள் நுழையும்போது யாராவது எங்கள் அரங்கில் நிற்பார்களா என்று யோசித்தேன்,” என்கிறார் அவர்.



அதிர்ஷ்டவசமாக பலர் வந்தனர் என நினைவுகூர்ந்து சிரிக்கிறார் டாக்டர் சிங். “அடுத்த சில நாட்களில், உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் ரோட்டேரியன்கள் வந்தனர்-அமைப்பைப் பற்றி விசாரிக்க மட்டுமல்ல, மன அழுத்தம், உணர்வுநிலை நலம், குணப்படுத்துதல், தங்கள் சொந்த சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் பேச.” மாநாடு முடிவடையும் வேளையில் சுமார் 25 புதிய உறுப்பினர்கள் RFHH-ல் இணைந்திருந்தது அவருக்கு மகிழ்ச்சி அளித்தது. “புதிதாகத் தொடங்கிய ஒரு அமைப்புக்கு, இது மிகவும் ஊக்கமளிக்கும் விஷயம்.”

RFHH-ன் நிறுவனரும் நிர்வாகச் செயலாளருமான டாக்டர் சிங், குழந்தை மருத்துவரும் ஒவ்வாமை/ஆஸ்துமா நிபுணருமாவார். தன் சொந்த ஊரில் 12 ஆண்டுகளாகத் தனியார் மருத்துவம் செய்து வருகிறார். இரட்டை PhD பட்டம் பெற்ற மாற்று சிகிச்சை நிபுணரான ஹர்லீன் கவுரை மணந்துள்ளார்; அவர் 23 ஆண்டுகளாகத் தன் சொந்த மையத்தை நடத்தி வருகிறார். 18 வயதிலேயே மாற்று சிகிச்சைகளைப் பயிற்சி செய்யத் தொடங்கிய ஹர்லீன், ரெய்கி கிராண்ட்மாஸ்டரும், புகழ்பெற்ற டரோட் அட்டை வாசிப்பாளருமாவார்; தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அடிக்கடி அழைக்கப்படுபவர். வெளிநாட்டு இளைஞர்கள் உட்பட சுமார் 5,000 மாணவர்களைப் பயிற்றுவித்துள்ளார்.

இருவரும் RID 3080-ல் உள்ள RC சண்டிகர் ராயேல் சங்கத்தின் உறுப்பினர்கள்; டாக்டர் சிங் TRF-ன் உலகளாவிய சுகாதாரத்திற்கான Cadre உறுப்பினரும் ஆவார் (2026–31). “ரோட்டரியில் இணைந்தபோது, எங்கள் திறமைகளை சக ரோட்டேரியன் களுக்கும் வழங்கி உதவலாமே என நினைத்தோம்,” என்கிறார். குழந்தை மருத்துவரும் ஒவ்வாமை நிபுணருமான டாக்டர் சிங், கடந்த 2–3 ஆண்டுகளாக ஹிப்னோதெரபியும் பயிற்சி செய்து வருகிறார். “ஹிப்னோதெரபியில் நாம் ஆழ்மனத்துடன் பணியாற்றுகிறோம். ஹர்லீனுடன் சேர்ந்து எனது பகுதியில் உள்ள போதைப்பழக்க நீக்க மையங்களுக்குச் சென்று, அங்குள்ளவர்களுக்கு ஹிப்னோதெரபி அளிக்கிறேன்.”

தங்கள் அறிவை ரோட்டேரியன் களுடன் பகிர்ந்துகொள்ள முடிவெடுத்தபோது, Fellowship அந்தஸ்துக்கு விண்ணப்பித்தனர். ஆனால் இது எளிதான காரியமாக இருக்கவில்லை என ஒப்புக்கொள்கிறார் டாக்டர் சிங். “உலகம் முழுவதும் சுமார் 100 Fellowship-கள் உள்ளன (இந்த இதழின் ஆகஸ்ட் இதழில் மோட்டார்சைக்கிள் ஓட்டுநர்கள் அமைப்பு பற்றி வெளியிடப்பட்டது); RI Fellowships-ன் தலைவரை சம்மதிக்க வைக்க எனக்கு சுமார் ஆறு மாதங்கள் ஆனது. நிறைய முயற்சிக்குப் பின்னரே ஒப்புதல் கிடைத்தது.”

RID 3080-ல் இது முதல் Fellowship எனப் பெருமையுடன் கூறும் அவர், இது 2026 பிப்ரவரியில் அங்கீகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார். தைவான் மாநாட்டில் கிடைத்த 25 புதிய உறுப்பினர்களுடன் சேர்த்து, இப்போது 70 உறுப்பினர்கள் உள்ளனர். உலகம் முழுவதிலுமிருந்து குணப்படுத்துபவர்களும் சிகிச்சையாளர்களும் இதில் அடங்குவர்; இவர்கள் மாதம் ஒருமுறை ஆன்லைனில் சந்திக்கின்றனர். இச்சந்திப்புகளில் ஆழ்மனத்தை எப்படிப் பயன் படுத்துவது எனப் ஹர்லீன் பயிற்று விக்கிறார். மாற்று சிகிச்சைகள், குணப்படுத்தும் முறைகள், ஆன்மீக அறிவியல் ஆகியவற்றில் சக ரோட்டேரியன்களைப் பயிற்றுவிப்பதே இத்தம்பதியரின் திட்டம்.

டாக்டர் சிங்கும் ஹர்லீனும் திட்டமிடும் ஒரு முன்னோடித் திட்டம், நாஹன் மத்திய சிறையில் உள்ளவர்களுக்கு மனச்சோர்வு மற்றும் பிற மனநல பிரச்சினைகளுக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பானது. “இதற்கு அனுமதி தேவை; இமாசலப் பிரதேச சிறைகளின் இயக்குநர் ஜெனரல் அபிஷேக் திரிவேதியைத்

தொடர்பு கொண்டுள்ளோம். விரைவில் கைதிகளுடன் பேசி ஆலோசனை வழங்கும் இந்த முன்னோடித் திட்டத்தைத் தொடங்குவோம்.”

இத்திட்டத்தைத் தொடங்க சிறையைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் விளக்குகையில், போதைப் பழக்க நீக்க மையங்களுடன் பணியாற்றி வரும்போது, சிறையில் தண்டனை அனுபவிப்பவர்களை குணப்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்துபவர்கள் மிகக் குறைவு என்பதைக் கண்டதாகக் கூறுகிறார். “அவர்களிடம் பேச ஆர்வமுள்ளவர்கள் இல்லை; அவர்களது சூழ்நிலையால் இக்கைதிகள் அதிக மனச் சுமையை எதிர்கொள்கிறார்கள், பல்வேறு மனநோய்களால் பாதிக்கப்படுகிறார்கள், குடும்பங்களை இழந்து சிறையில் இருப்பதால் ஏற்கெனவே மனச் சோர்வில் உள்ளனர்.”

போதைப்பழக்க நீக்க மையங்களில் செய்வது போலவே, இங்கும் ஹிப்னோதெரபி, ரெய்கி, மற்ற மாற்று சிகிச்சைகள், தியானம், ஆரா மற்றும் சக்கரா சுத்திகரிப்பு போன்ற முறைகள் மூலம் குணப்படுத்தல் நடைபெறும் என விளக்குகிறார். “சிறை கைதிகளிடையே பொதுவாகக் காணப்படும் போதைப் பழக்கங்களை விட்டுவிட அவர்களது ஆழ்மனதை நாம் திட்டமிடலாம்.” கைதிகளைச் சந்தித்து, “நேர்மறையான விஷயங்களைச் சொல்லி, அவர்கள் நலம் உணர இந்த முறைகளில் சிலவற்றைக் கற்பிப்பதே” நோக்கம்.

தைபே மாநாட்டு அரங்கிற்குத் திரும்பி, சில தருணங்கள் நீண்ட காலம் நினைவில் நிற்கும் எனக் கூறுகிறார் டாக்டர் சிங். RI தலைவர் ஃபிரான்செஸ்கோ அரெஸ்ஸோவும் அவரது மனைவி அன்னா மரியாவும் தங்கள் அரங்கிற்கு வந்து சிறிது நேரம் செலவிட்டது அத்தகைய ஒரு தருணம். “புதிதாகத் தொடங்கிய ஒரு அமைப்புக்கு, அந்த சைகை சொல்லில் அடங்காத அர்த்தமுள்ளதாக இருந்தது.”

மற்றொரு மறக்கமுடியாத பார்வையாளர், ரோட்டரியில் இணைய நீதிமன்றப் போராட்டம் நடத்தி, ரோட்டரி சங்கத்தின் முதல் பெண் தலைவராகவும் ஆன சில்வியா விட்லாக். “அவர் சக்கர நாற்காலியில் எங்கள் அரங்குக்கு வந்தார். ஹர்லீன் அவருக்கு டரோட் வாசிப்பு வழங்கினார்; உரையாடலின்போது தானும் டரோட் அட்டைகள் வாசிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளதாக புன்னகையுடன் கூறினார். நாங்கள் எதிர்பார்க்காத ஒரு அனுபவம் இது; பண்பாடுகளையும் தலைமுறைகளையும் தாண்டி ரோட்டரி உருவாக்கும் நட்பை பிரதிபலிக்கும் அன்பான, மறக்கமுடியாத பரிமாற்றமாக அது மாறியது.”

சில வாரங்களுக்கு முன்பே முதுகுத்தண்டு காயம் அடைந்த ஒரு ரோட்டேரியன், மின்சார சக்கர நாற்காலியில் மாநாட்டிற்கு வந்து அரங்கைப் பார்வையிட்டது இன்னொரு மறக்கமுடியாத தருணம். “அவர் நடக்கக்கூட முடியாத நிலையிலும்,




*இந்த நட்புறவுச் சங்கத்தைத் தொடங்கிய ஹர்சிம்ரன் சிங் சௌத்ரியும் ஹார்லீனும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பார்வையாளர்களுடன் அரங்கில்.*

மாநாட்டிற்கு வந்து எங்கள் அரங்கைப் பார்வையிட நேரம் ஒதுக்கினார். அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்; ரோட்டரி சேவையை மட்டுமல்ல, மீள்திறனையும் அடிப்படையாகக் கொண்டது என்பதை அந்தச் சந்திப்பு எனக்கு நினைவூட்டியது," என்கிறார்.

மாநாட்டில் கிடைத்த 25 புதிய உறுப்பினர்களில் 10 பேர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள்; மற்றவர்கள் ஆஸ்திரேலியா, ஜெர்மனி, நைஜீரியா, இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். சிகிச்சை அமர்வுகளுக்கு நேரம் இல்லாவிட்டாலும், அரங்கிற்கு வந்த அனைவருக்கும் இலவசமாகச் சில டரோட் வாசிப்புகள் செய்யப்பட்டன.

தங்கள் இறுதி இலக்கு குறித்துக் கூறும் டாக்டர் சிங், "ரோட்டரியில் இணையும் பெரும்பாலானோர் பொருளாதார ரீதியாக செல்வந்தர்கள்; ஆனால் இன்று பலரும் மனநோயால் பாதிக்கப்படுகின்றனர். மனநல பிரச்சினைகள் இன்னும் அதிகரிக்கும் என்றே சொல்வேன். ஒன்பது, பத்து வயது சிறு குழந்தைகளிடம் பேசும்போது, தாங்கள் மனச்சோர்வில் இருப்பதாகச் சொல்கிறார்கள். சிறு குழந்தைகளே மன அழுத்தம், மனச்சோர்வு, பதற்றம் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதை நினைத்துப் பாருங்கள்," என்கிறார். வாழ்வில் நன்கு நிலைபெற்றிருந்தாலும் பல ரோட்டேரியன்களும் மனரீதியான சவால்களை எதிர்கொள்கின்றனர்; இத்தகைய முதல் Fellowship-ன் நோக்கம் அவர்களுக்கு உதவுவதே. "முன்பு மனநோய் தொடர்பான விஷயங்களுக்கு களங்கம் இருந்தது போலல்லாமல், இன்று மக்கள் மனநோய்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் உள்ளனர்; பலரும் ஏற்கெனவே வெவ்வேறு ஆலோசகர்களின் உதவியை நாடுகின்றனர்," என்கிறார் டாக்டர் சிங்.



*ஹார்லீனுடன் PRIP ஃபிரான்செஸ்கோ அரெஸ்ஸோ.*



*இடது: டாக்டர் சிங்கும் ஹார்லீனும், ரோட்டரி சங்கத்தின் முதல் பெண் தலைவரான சில்வியா விட்லாக்குடன்.*

விழிப்புணர்வும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையும் அதிகரிக்கும்போது, மனநல பிரச்சினைகளால் அவதிப்படும் பல ரோட்டேரியன்களை ஈடுபடுத்தி உதவ முடியும் என இத்தம்பதியர் நம்புகின்றனர். "அடுத்த பார்சிலோனா மாநாட்டில், எங்கள் Fellowship-ல் 100-க்கும் மேற்பட்ட புதிய உறுப்பினர்களைப் பெற இலக்கு வைத்துள்ளோம்," என்கிறார் அவர் உற்சாகமாக. ■

# தலைவர் பதவிக்குப் பின்னால்

**V K மாதவ் மோகன்**

*நான்கு தசாப்தங்களாக ரோட்டரியில் இருந்து வருகிறேன். இக்காலகட்டத்தில் நீண்ட வரிசையில் பல RI தலைவர்கள் வந்து, பணியாற்றி, விலகிச் சென்றதை பார்த்திருக்கிறேன். சிலரை நெரிசலான அரங்கிலிருந்து தொலைவில் நின்று கவனித்தேன்; சிலரை விருந்து மேசையில் நெருக்கமாக அறிந்துகொண்டேன். இக்கட்டுரையில் நான் கண்டதை மட்டுமே பகிர்கிறேன்.*

### கணக்கின்றி வழங்குகிறார்கள்

முதலில் கண்ணில்படுவது அவர்களது முதலீடு. நேரம், சக்தி, பணம் ஆகியவற்றை தாராளமாக வழங்குகிறார்கள். ரோட்டரி தொடர்பான எதிலும் முதலீடு செய்யத் தயங்கியதேயில்லை.

அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதைக் கவனித்தாலே அவர்களைப் புரிந்துகொள்ளலாம். பதவிக் காலத்தில் அவர்கள் தொடர்ந்து பயணிக்கிறார்கள். ஆனால் குறைவாக அறியப்பட்டது என்னவெனில், அதற்கு வெகு காலம் முன்பே, பல ஆண்டுகளாக, பெரும்பாலும் சொந்தச் செலவில் அவர்கள் பயணித்திருக்கிறார்கள் என்பதே. தலைவர் பதவி என்பது பதவிச் சங்கிலியுடன் தொடங்குவதில்லை; யாரும் பதிவு செய்யாத, அமைதியாகக் குவிந்த பயணங்களுடனேயே அது வெகு காலத்திற்கு முன்பே தொடங்குகிறது.

### வாய்ப்பைக் காண்கிறார்கள்

அவர்களுக்கு சரியானவரை அழைக்கத் தெரியும். அவர்கள் கனவு காண்பவர்கள் அல்ல; செயல்படுத்துவோரும், ஒழுங்கமைப்பாளர்களும் ஆவர். அவர்களுக்கு ஒரு தனித்துவமான பார்வை உண்டு. ஒரு சமூகத்திற்குள் நுழைந்தவுடன், எங்கே பங்களிப்பு செய்யலாம் என்பதை விரைவாகக் கண்டறிவார்கள். எப்படி செயல்படுத்துவது, யாரிடம் வளங்களைப் பெறுவது என்பதை சரியாக அறிவார்கள்.

இரண்டாவது பகுதிதான் அரிய திறமை. திட்டமிடுவது எல்லோராலும் முடியும்; ஆனால் தொலைபேசியை எடுத்து, எந்த மூவர் அதை நிச்சயமாக நிறைவேற்றுவார்கள் என்று உறுதியாகத் தெரிந்துகொள்வது சிலருக்கே சாத்தியம்.

### கேட்கிறார்கள், வேறுபாட்டை அறிவார்கள்

அவர்கள் நன்றாகக் கேட்பவர்களும் கூட. இது ஒரு சாதாரண குணமாகத் தோன்றலாம், ஆனால் அப்படியில்லை. ஒவ்வொரு அறையும் யோசனைகளால் நிறைந்திருக்கும். சில நல்லவை; பல வெறும் சத்தமானவை. இரண்டையும் அமைதியாகக் கேட்டு, பயனுள்ளதை பிரித்தறியும் திறனே இந்தத் தலைவர்களை தனித்துக் காட்டுகிறது. உற்சாகத்தை பயனுள்ள தன்மையாக அவர்கள் தவறாக எடுத்துக் கொள்வதில்லை.

### நற்பெயர் மெல்ல மெல்ல கட்டப்படுகிறது

இதை பணத்தால் வாங்க முடியாது. வருகை தருவதன் மூலமும், வாக்குறுதிகளைக் காப்பதன் மூலமும், உண்மையாக இருப்பதன் மூலமும் தசாப்தங்களாக அவர்கள் தங்கள் நற்பெயரைக் கட்டியெழுப்பியுள்ளனர்.

### இப்போது குறைவாக பேசப்படும் பகுதி

ரோட்டரியில் ஈடுபட்டதற்காக அவர்கள் ஒரு விலையைச் செலுத்தியிருக்கிறார்கள்.

### தொழில் மங்குகிறது

பலர் தங்கள் தொழில் வாழ்க்கையையும் ரோட்டரி வாழ்க்கையையும் சமநிலைப் படுத்த போராடியிருக்கிறார்கள். வழக்கமாக ரோட்டரியே வெல்கிறது. மெல்ல மெல்ல வணிகமோ, தொழிற்பயிற்சியோ, தொழிலோ இரண்டாம் இடத்திற்குச் செல்கிறது. அது உடைந்துவிடாது; ஆனால் மங்கிவிடும். வேறு எங்கோ பெரிய தொன்றைக் கட்டியிருக்கக்கூடிய நபர், அதற்குப் பதிலாக ரோட்டரியைக் கட்டியெழுப்பினார்.

### நட்புகள் தேய்கின்றன

சிலர் நட்புகளை இழந்திருக்கிறார்கள். சண்டையால் அல்ல, எதிர்பார்ப்பால். நண்பர்களாகக் கருதியவர்கள் ஏதோ ஒரு பதவியையோ, சலுகையையோ, அங்கீகாரத்தையோ எதிர்பார்த்தார்கள்; அது கிடைக்காதபோது நட்பு அந்த ஏமாற்றத்தைத் தாங்கவில்லை.

### உடலும் விலை செலுத்துகிறது

பயணமும் அதன் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒரு RI தலைவர் நேரமாற்றத்தால் (jet lag) மிகவும் குழம்பி, குளியலறைக்குப் பதிலாக அலமாரிக்குள் நுழைந்த சம்பவமும் உண்டு. வருடக்கணக்கான உடைந்த தூக்கம், அறிமுகமில்லாத உணவு, மாறும் நேர மண்டலங்கள், தொடர்ச்சியான தகவமைப்பு-இவை ஆரோக்கியத்தில் தடயம் விட்டுச் செல்கின்றன. இவை எதுவும் இலவசமாக வருவதில்லை.

### ஈடுசெய்ய முடியாத பங்களிப்பு

நான் விவரித்த ஒவ்வொரு தலைவருக்குப் பின்னாலும் ஒரு துணைவர் நிற்கிறார். அவர்களது பங்களிப்பு ஈடுசெய்ய முடியாதது. இந்த வார்த்தையை நான் கவனமாகவும் துல்லியமாகவும் பயன்படுத்துகிறேன்.

அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையையும், உடலையும், லட்சியங்களையும் பணயம் வைத்தனர். தொழில் உச்சத்தில் இருக்கும்போதே அதை ஒதுக்கி வைத்தனர். லட்சியங்களை அமைதியாக மடித்து வைத்து, மீண்டும் அவற்றைப் பற்றி பேசவேயில்லை. உடல் ஓய்வை மட்டுமே விரும்பும் தாமதமான நேரங்களிலும், அதே கடினமான பயணத் திட்டங்களில், அதே விமானங்களில், அதே விழாக்களில் புன்னகைத்தபடி இருந்தனர். இவை



PRIP நிதீஷ் லஹரி




PRIP ராஜேந்திர சாபூ




PRIP கல்யாண் பானர்ஜி



PRIP K R ரவீந்திரன்



PRID சுஷில் குப்தா



PRIP சேகர் மேத்தா

அனைத்தையும் அவர்கள் செய்தது இரண்டு விஷயங்கள் வெல்ல வேண்டும் என்பதற்காகவே-தங்கள் துணைவரும், ரோட்டரியும்.

மீதமுள்ள குடும்பமும் குறைவாகப் பங்களிக்கவில்லை. பெற்றோர் அடிக்கடி வேறு இடத்தில் இருக்க வளர்ந்த குழந்தைகள். மாதக்கணக்கில் தனியாக நடத்தப்பட்ட வீடுகள். அனைவரும் அறையில் இருக்க வேண்டும் என விரும்பிய ஒருவர் இல்லாமலேயே கொண்டாடப்பட்ட குடும்ப நிகழ்வுகள்.

இந்தக் குடும்பங்களுக்குள் உறவுகள் நீட்டி, சில நேரங்களில் கசங்கியிருக்கின்றன. நான் அதை நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால் நான் மிக நெருக்கமாக அறிந்த குடும்பங்களில் அவை ஒருபோதும் உடைந்ததில்லை.

கணக்கு பற்றி நேர்மையாக இருக்க வேண்டும். பதவிச் சங்கிலியை ஒருவர் மட்டுமே அணிகிறார். ஆனால் விலையை முழு குடும்பமும் செலுத்துகிறது.

## அறையை விட வளர்கிறார்கள்

வழியில் இன்னொன்றும் நிகழ்கிறது. அவர்கள் தங்கள் சொந்த சங்கத்தையும் மாவட்டத்தையும் தாண்டி வளர்ந்திருக்கிறார்கள். இது பெரும்பாலும் அகந்தையாகத் தவறாகக் கருதப்படுகிறது. நான் அப்படி நம்பவில்லை. 50 நாடுகளில் அமர்ந்து, ஒரே பிரச்சினைக்கு 50 வெவ்வேறு தீர்வுகளைக் கேட்டவர், இயல்பாகவே ஒரு பரந்த பார்வையைக் கொண்டிருப்பார். அவர் யாரையும் தாழ்வாகப் பார்க்கவில்லை; தொலைவிலிருந்து பார்க்கிறார். ஆனால் இது எளிதில் தவறாகப் புரிந்துகொள்ளப்படலாம், தனிமையாகவும் இருக்கலாம்.

## அவர்களைத் தாங்கி நிற்பது

அவர்களைத் தாங்கி நிற்பது அவர்களது மனோபாவம்- மீள்திறன், விட்டுக்கொடுக்காத மனப்பான்மை, வளம் கண்டறியும் திறன். இடர்கள் அவர்களிடம் நீண்ட நேரம் தங்குவதில்லை. அவர்கள் அதிகாரம் எப்படி இயங்குகிறது, எங்கு தங்குகிறது, எப்படிப் பயன்படுத்தப்படலாம் என்பதையும் புரிந்துகொள்கிறார்கள். நல்லவர்கள் அந்தப் புரிதலைத் தங்களை நோக்கி அல்ல, ரோட்டரியின் பணிக்காகவே திருப்புகிறார்கள்.

## அனைவரும் கற்கும் பாடம்

கடைசியாகக் கண்டது, எல்லா வற்றிலும் முக்கியமானது. அவர்கள் கலாச்சாரங்கள் மீதான தீர்ப்பை நிறுத்தி வைத்து, வேறுபட்ட எண்ணங்களை ஏற்றுக்கொள்ளக் கற்கிறார்கள். தங்கள் வழியே தரமான வழி என்ற எண்ணத்தை விட்டு விட்டு, வேறுபாட்டைத் தவறாக அல்ல, தகவலாகக் கருதத் தொடங்குகிறார்கள்.

இறுதியில் அவர்கள் ஒரு வாக்கியத்தை உணர்கிறார்கள், அது அவர்கள் தலைமை தாங்கும் விதத்தையே மாற்றுகிறது: இது என் யோசனையும் அல்ல, உன் யோசனையும் அல்ல, சிறந்த யோசனையே முக்கியம். இதைச் சொல்வது எளிது; ஆனால் வாழ்வது மிகக் கடினம். இது உங்கள் அதிகாரத்தை விட்டுவிடச் சொல்கிறது, மற்றொருவர் சரியானவராக இருக்கும்போது உண்மையிலேயே மகிழ்ச்சியடையச் சொல்கிறது.

பயணமும், வழங்கலும், அவர்களும் அவர்களைத் தாங்கிய குடும்பங்களும் அமைதியாகச் செலுத்திய விலையும்-இவை அனைத்தும் ஒரே நோக்கத்திற்காகவே: சிறந்த யோசனை எங்கிருந்து வந்தாலும் அதைக் கண்டறிந்து, பின் அதற்கு வழிவிட்டுக் கொடுக்கும் பண்பிற்காகவே.

*இவை நான்கு தசாப்த ரோட்டரி அனுபவத்திலிருந்து பெறப்பட்ட எனது சொந்தக் கருத்துக்கள். எந்தத் தனிநபரோ குடும்பமோ பெயரிடப் படவில்லை; எந்த நிகழ்வும் யாருக்கும் உரிமையாக்கப்படவில்லை-இது வேண்டுமென்றே செய்யப்பட்டது.*

*எழுத்தாளர் RI மூலோபாயத் திட்டமிடல் குழுவின் (2011–2015) முன்னாள் உறுப்பினரும், CEO-களுக்கு வழிகாட்டியுமாவார்.*

Rotary PEOPLE OF ACTION

# சிறிய இதயங்களைக் குணப்படுத்துதல்

ரஷீதா பகத்

ஒரு சிறிய இதயத்தை ஒவ்வொரு முறையும் பொறுமையுடனும் அன்புடனும் குணப்படுத்தி, RID 3141-ல் உள்ள RC பாம்பே ஏர்போர்ட்டின் Gift of Life திட்டம், பிறவி இதய நோய்களுடன் பிறந்த 625-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு முக்கியமான, உயிர்காக்கும் இதய அறுவை சிகிச்சைகளை மொத்தம் ரூ.10 கோடிக்கும் மேற்பட்ட செலவில் வழங்கியுள்ளது. இந்த ரோட்டரி ஆண்டு முடிவடையும் வேளையில், ஆறு உலகளாவிய மானியங்கள் (GG) மூலம் மொத்தம் 825 குழந்தைகளுக்கு உதவியிருக்கும் இத்திட்டம், மொத்த நிதி ரூ.14 கோடியை எட்டும்.

இரு ரோட்டேரியன்களின் ஆர்வமும் அர்ப்பணிப்புமே இத்திட்டத்தை ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தி வருகின்றன. மும்பையைச் சேர்ந்த திட்ட இயக்குநரும் RC பாம்பே ஏர்போர்ட் முன்னாள் தலைவருமான நிதின் மேத்தா, மற்றும் அமெரிக்காவின் இண்டியானா மாநிலம் ஃபோர்ட் வேனைச் சேர்ந்த புற்றுநோய் நிபுணரும் RID 6540-ல் உள்ள RC ஃபோர்ட் வேன் உறுப்பினருமான டாக்டர் பிரவீன் கொல்லிபாரா.

இத்திட்டத்தின் தோற்றம் குறித்து நினைவுகூரும், Arch Klumph Society உறுப்பினருமான மேத்தா, கோவிட் காலத்தில் நவி மும்பையில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனை, பிறவி இதய பிரச்சினையுள்ள குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய உதவி கோரியதிலிருந்தே இது தொடங்கியதாகக் கூறுகிறார். நிதி திரட்ட உதவுமாறு மருத்துவமனை கேட்டதோடு, குறைந்த வசதி படைத்த குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்ய விரும்பிய டாக்டர் கொல்லிபாராவையும் அவர் சந்தித்தார். "அவர் தன் மாவட்டத்தில் முக்கியமான சில ரோட்டரி சங்கங்களை அணுகியிருந்தார், ஆனால் இது சாத்தியமில்லை என்று சொல்லப்பட்டது. என்னிடம் பேசுமாறு யாரோ அவருக்குச் சொன்னார்கள்; அவர் என்னைத் தொடர்பு கொண்டு இதைச் செய்ய முடியுமா எனக் கேட்டார்."

24 மணி நேரம் யோசிக்க நேரம் கேட்ட மேத்தா, விரிவாக ஆராய்ந்த பின், இது சாத்தியமே என பதிலளித்தார். இது 2020-21ல், அவர் தன் சங்கத்தின் தலைவராக இருந்த காலம். "நான் ஒப்புக்கொண்டதும் அவர், 'நிதின்பாய், நான் ஒரு வாக்குறுதி கொடுத்த பின், நீங்கள் செய்ய முடியாது என்று



சொல்லக்கூடாது,' என்றார். நான் உறுதியளித்தேன்; முதல் ஆண்டு செயல்பாட்டைக் கண்டு அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, 'நீங்கள் நிறுத்தும் வரை நான் இந்த திட்டத்தை நிறுத்த மாட்டேன்; அதேவேளையில் வேறு எந்த ரோட்டரி சங்கத்திற்கும் ஆதரவளிக்க மாட்டேன்,' என உறுதியாகச் சொன்னார்."

அன்று முதல் அவர்கள் திரும்பிப் பார்க்கவே இல்லை; ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆறு GG-கள் மூலம் ரூ.10 கோடி செலவழிக்கப்பட்டு 600-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இருவரும் நேரில் சந்தித்திராவிட்டாலும், இந்த ஒரே சர்வதேசப் பங்காளர் மூலமே அனைத்து GG-களும் நடைபெற்றுள்ளன; டாக்டர் கொல்லிபாரா தொடர்ந்து இத்திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

தன் சங்கத்தின் Gift of Life திட்டம் "நிச்சயமற்ற எதிர்காலம் கொண்டிருந்த குழந்தைகளுக்குப் புதிய வாழ்வை வழங்குகிறது" என்பதில் மேத்தா பெருமிதம் கொள்கிறார். "ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரோக்கியமான இதயமும், தன் கனவுகளை நிறைவேற்றும் வாய்ப்பும் உரிமையானது. அறுவை சிகிச்சைக்குப் பின் ஒரு குழந்தை புன்னகைப்பதைக் காணும்போது, நாங்கள் வழங்கியது வெறும் கவனிப்பு அல்ல, நம்பிக்கை என்பதை உணர்கிறேன். இது தர்மம் அல்ல; இது மனிதநேயம்."

கடந்த ஆண்டு கிரிக்கெட் புகழ்பெற்ற சுனில் காவாஸ்கர் மருத்துவ மனைக்கு வந்து குழந்தைகளுடனும் அவர்களது குடும்பங்களுடனும் நேரம் செலவிட்டபோது சங்க உறுப்பினர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக அவர் கூறுகிறார். "இந்தத் துணிச்சலான குழந்தைகளைச் சந்திப்பது உண்மையிலேயே நெகிழ்ச்சி அளிக்கிறது. அவர்களது தைரியமும் மருத்துவர்கள் மற்றும் ரோட்டேரியன்களின் அர்ப்பணிப்பும் உத்வேகம் அளிக்கின்றன. சரியான நேரத்தில் எடுக்கப்படும் நடவடிக்கையும் அன்புள்ள இதயமும் என்ன சாதிக்க முடியும் என்பது அற்புதம்," என்று காவாஸ்கர் கூறியதாகவும் தெரிவிக்கிறார்.

சஞ்சீவனி மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் குழந்தை இதய அறுவை சிகிச்சைகள், இதயத்தில் துளை, வால்வு குறைபாடு, அசாதாரண இரத்த நாளங்கள் போன்ற பிரச்சினைகளுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு உயிர்க்கயிறாக அமைகின்றன. இம்மருத்துவ மனையின் மூத்த ஆலோசகரும் குழந்தை இதய அறுவை சிகிச்சைப் பிரிவின் தலைவருமான டாக்டர் பிரபாதா ரஷ்மி, சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படா விட்டால் இக்கோளாறுகள் மூச்சுத்திணறல், தொடர் தொற்று, வளர்ச்சிக் குறைபாடு அல்லது இளம் வயது மரணத்திற்கும் வழிவகுக்கலாம் என விளக்குகிறார்.



"இதயக் குறைபாடு களுடன் பிறக்கும் குழந்தைகள் பலவீனமாகத் தோன்றி, நீல நிறமாக மாறி, மூச்சுவிடவும் உணவு உண்ணவும் சிரமப்படுவார்கள். இந்த அறிகுறிகளைக் கவனக்குறைவாக எடுத்துக்கொள்ளக் கூடாது. சரியான நேரத்தில் திரையிடலும் நோயறிதலும் மிக முக்கியம். சரியான நேரத்தில் சிகிச்சை பெற்றால், மற்ற குழந்தைகளைப் போலவே இவர்களும் முழுமையான, சுறுசுறுப்பான வாழ்க்கை வாழலாம். தாமதம் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும்," என்கிறார்.

இத்திட்டத்தின் வெற்றியில் GG-கள் மூலம் கிடைத்த ஆதரவு முக்கிய பங்கு வகித்தது; "இது ரோட்டரியின் உலகளாவிய நட்பு உணர்வை உண்மையிலேயே பிரதிபலிக்கிறது. சர்வதேசப் பங்காண்மையும் மூலோபாய நிதியும் மூலம் உள்ளூர் நடவடிக்கையை பெருக்குவதே GG-யின் அற்புதம். TRF, சங்க பங்களிப்பு, மாவட்ட நிதி ஆகியவற்றை இணைப்பதன் மூலம் இப்படிப்பட்ட பெரிய அளவிலான, நிலைத்த திட்டங்கள் சாத்தியமாகின்றன. இந்த தனித்துவமான பங்காண்மை, சில தனிப்பட்ட கருணைச் செயல்களாக இருக்கக்கூடியதை, அளவிடக்கூடிய நீண்டகால பலன்களைத் தரும் தாக்கமிக்க மனிதநேய முயற்சியாக மாற்றியுள்ளது. பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய சமூகங்களுக்கு மேம்பட்ட இதயப் பராமரிப்பை இத்திட்டம் எட்டியிருப்பது பாராட்டத்தக்கது."

கடந்த ஆறு ஆண்டுகளில் சங்கத் தலைமை மாறிக்கொண்டே இருந்தாலும் இத்திட்டம் தொடர்ந்து வெற்றியடைந்து வருவது குறித்து மேத்தா கூறுகையில், "முதல் GG முதலே, என் பங்குதாரர்களை நான் ஒருபோதும் புறக்கணித்ததில்லை; திட்டத்தின் விவரங்களை எப்போதும் அவர்களுக்குத் தெரிவித்து வந்தேன். $5,000 அல்லது $50,000 நன்கொடையளித்தவர் என எவராயினும், அனைவருக்கும் ஒரே தகவலும் முன்னேற்ற அறிக்கையும் வழங்கப்பட்டு, ஒவ்வொரு காசுக்கும் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டது. ஒவ்வொரு வாரமும் ஃபவுண்டேஷனிலிருந்து எவ்வளவு பெற்றோம், எவ்வளவு செலவழிக்கப்பட்டது, மீதி எவ்வளவு என அறிக்கை அனுப்புவேன்!"

இந்த ரோட்டரி ஆண்டு முடிவடையும் வேளையில்

சுமார் $1.5 மில்லியன், "825 குழந்தைகளுக்கு அவர்களது குழந்தைப் பருவத்தைத் திரும்பக் கொடுக்க" செலவிடப்பட்டிருக்கும் என மேத்தா குறிப்பிடுகிறார். வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளும் மருத்துவமனையால் அடையாளம் காணப்பட்டு கவனமாகத் திரையிடப்படுகின்றனர். பின்னர் திட்டக் குழுவிடம் அனுப்பப்பட்டு, பெற்றோரின் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு, நிதி உதவி தேவையா என முடிவு செய்யப்பட்டு, மருத்துவமனைக்கு பச்சைக் கொடி காட்டப்படுகிறது. அவர்களது இளைய நோயாளிக்கு 36 மணி நேரம், மூத்த நோயாளிக்கு 16 வயது.

தனியார் மருத்துவமனையில் இத்தகைய அறுவை சிகிச்சைக்கு ரூ.3-5 லட்சம் வரை செலவாகும் என்றும், ஆனால் சஞ்சீவனியில்












RC Bombay Airport-ன் ஆதரவுடன் இதய அறுவை சிகிச்சை பெற்ற குழந்தைகளும் அவர்களது பெற்றோரும்.




ரூ.1.5–2.5 லட்சம் மட்டுமே எனவும் மேத்தா தெரிவிக்கிறார். ஆறு ஆண்டுகளாக எந்தத் தடங்கலுமின்றி இத்திட்டம் நடைபெறுவதற்கு, தனக்குப் பின் வந்த அனைத்துச் சங்கத் தலைவர்களுக்கும் மேத்தா பெருமையுடன் நன்றி தெரிவிக்கிறார். "சங்கத்தலைமை மாறும்போது பழைய திட்டங்கள் பெரும்பாலும் மறக்கப்படும் அல்லது புறக்கணிக்கப்படும் என்பது உண்மைதான். ஆனால் என் தலைவர்கள், நன்கொடையாளர்கள், தொடர்ந்து நன்கொடையளிக்கும் மற்ற சங்க உறுப்பினர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். ஆண்டு தொடங்குவதற்கு முன்பே, அவர்கள் வந்து, 'நிதின், எப்போது பணம் செலுத்தலாம்?' எனக் கேட்கிறார்கள். இத்திட்டத்திற்கு பங்களிப்பதில் அவர்கள் மிகவும் உற்சாகமாக இருக்கிறார்கள்."

தன் சொந்த சங்கத்தைத் தவிர, RC பெர்லின் இண்டர்நேஷனல், RC செர்பியா, RC மாண்டெனீக்ரோ, RC சிங்கப்பூர், RC டெல்லி சவுத் உள்ளிட்ட பிற ரோட்டரி சங்கங்களையும், தன் சொந்த மாவட்டமான RID 3141-ஐச் சேர்ந்த அரை டசன் சங்கங்களையும் அணுகியிருப்பதாகவும், அவை தற்போது தொடர்ந்து பங்களித்து வருவதாகவும் மேத்தா கூறுகிறார்.

CSR நிதியும் சிறிதளவு கிடைக்கிறது. "சில குழந்தைகளையும் பெற்றோரையும் நிதியளிக்கும் நிறுவனத்திற்கு அழைத்துச் சென்று, முழு பணியாளர்களுக்கும் அறிமுகப்படுத்துகிறோம்; அவர்கள் நேரடியாகக் கேள்விகள் கேட்டு, தங்கள் நிறுவனம் அளிக்கும் பணத்தால் என்ன நடக்கிறது என்பதை உணர்கிறார்கள்."

பயனாளிக் குழந்தைகளின் எண்ணிக்கையை 825-லிருந்து 1,000 ஆக எவ்வளவு விரைவில் கொண்டு செல்ல முடியும் என்று கேட்டதற்கு, "1,000 என்பது கை எட்டும் தூரத்தில்தான் உள்ளது, அதிக தூரம் இல்லை. தற்போது நாங்கள் ஒரே $1 மில்லியன் GG-யில் பணியாற்றி வருகிறோம்; இது மட்டும் 550-க்கும் மேற்பட்ட குழந்தைகளின் அறுவை சிகிச்சைக்கு உதவும்," என்கிறார் மேத்தா.■

# பலவீனமான பச்சிளம் குழந்தைகளுக்கு பால்

ஜெய்ஸ்ரீ

முன்கூட்டியே பிறந்த அல்லது குறைந்த பிறப்பு எடை கொண்ட குழந்தை, பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவில் (NICU) இருக்கும்போது, தாய்ப்பால் எந்த மருத்துவ சிகிச்சைக்கும் இணையான முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால், ஒரு தாயால் போதுமான பால் வழங்க முடியாத நிலையில், பரிசோதிக்கப்பட்டு பதப்படுத்தப்பட்ட தான மனிதப் பால் கிடைப்பது மிகப்பெரிய உதவியாக அமையும்.

மைசூருவில் உள்ள செலுவெம்பா மருத்துவமனையில், அம்ருத வர்ஷினி ரோட்டரி பால் வங்கி, மிகவும் தேவைப்படும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு இந்த ஆதரவை வழங்குகிறது.

RC மைசூர் மெட்ரோ, RID 3181, மற்றும் RC பெங்களூரு சௌத் பரேட், RID 3191 ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்ட பால் வங்கி, 2025 டிசம்பர் 1 அன்று அப்போதைய DGs P K ராமகிருஷ்ணா மற்றும் B R ஸ்ரீதர் ஆகியோரால் தொடங்கப்பட்டது. ஒரு மாத சோதனை செயல்பாடுகள் மற்றும் மருத்துவமனையின் நுண்ணுயிரியல் துறையுடன் நடைமுறைகளை உருவாக்கிய பின்னர், ஜனவரி 2, 2026 அன்று செயல்படத் தொடங்கியது.

“செயல்முறையை உருவாக்கும் காலத்தில் பால் வீணாகக் கூடாது என்பதால், மிகச் சிறிய அளவிலேயே தொடங்கினோம்,” என்கிறார் இந்த மையத்தின் பொறுப்பாளர் Dr ஹம்சா. தீவிர ஆலோசனைகள் மூலம் விழிப்புணர்வு அதிகரித்ததால், தாய்மார்களின் வரவேற்பு ஊக்கமளிப்பதாக இருந்தது. ஆரம்பத்தில் மாதம் சுமார் 1-1.5 லிட்டர் மட்டுமே சேகரிக்கப்பட்ட நிலையில், ஜூனில் 12 லிட்டர் தாய்ப்பால் சேகரிக்கப்பட்டது. மேலும், மாதந்தோறும் 250-க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்காக தாங்களே பால் பிழிந்து எடுக்க இந்த மையத்திற்கு வருகின்றனர்.

NICU-வில் குழந்தைகள் இருக்கும் தாய்மார்களுக்கு இந்த வசதி மிகவும் முக்கியமானது. முன்கூட்டிப் பிறந்த அல்லது குறைந்த பிறப்பு எடை கொண்ட குழந்தைக்கு ஆரம்பத்தில் சில மில்லிலிட்டர் பால் மட்டுமே தேவைப்படலாம். தாய் தொடர்ந்து பால் பிழிந்து எடுக்காவிட்டால், உடலில் பால் உற்பத்தி படிப்படியாகக் குறையலாம். எனவே, அத்தகைய தாய்மார்கள் தொடர்ந்து பால் பிழிந்து, தற்காலிகமாக தானம் செய்ய பால் வங்கி ஊக்குவிக்கிறது. குழந்தைகள் தாய்ப்பால் அருந்தத் தயாரானதும், தாய்மார்கள் தங்கள் சொந்த பாலை மீண்டும் கொடுக்கலாம்.

தற்போது செலுவெம்பா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ள குழந்தைகளுக்கு மட்டுமே இந்த பால் வங்கி சேவை வழங்குகிறது. மருத்துவமனையில் நான்கு NICU-க்கள் உள்ளன. மாதந்தோறும் சுமார் 300-400 குழந்தைகள் அனுமதிக்கப்படுவதாக துறைத்தலைவர் டாக்டர் N பிரதீப் தெரிவிக்கிறார். இவர்களில் பலர் மைசூரு மற்றும் அருகிலுள்ள குடகு, மண்டியா, சாமராஜ்நகர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

தானமாக பெறப்படும் பால், கடுமையான கட்டுப்பாடுகளுடன் செயல்முறைக்கு உட்படுத்தப்படு கிறது. தானம் வழங்கும் தாயின் மருத்துவ வரலாறு பதிவு செய்யப் பட்டு, தாய்ப்பால் மூலம் பரவக்கூடிய தொற்றுகளுக்குப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒப்புதல் பெற்ற பிறகு, சுகாதார நடைமுறைகள் குறித்து தாய்க்கு விளக்கப்பட்டு, குறிப்பிட்ட இடத்தில் பால் பிழிந்து எடுக்கப்படுகிறது. பதப்படுத்தத் தயாராகும் வரை பால் டீப் ஃப்ரீசரில் சேமிக்கப்படுகிறது.

Laminar flow system-ன் (சீரோட்ட ஓட்ட அமைப்பு) கீழ், பால் சிறிய தொகுதிகளாக ஒன்றுசேர்க்கப்பட்டு, பாஸ்டரைசேஷனுக்குப் (பதப்படுத்துதல்) முன்பும் பின்பும் பரிசோதனைக்காக மாதிரிகள் நுண்ணுயிரியல் துறைக்கு அனுப்பப்படுகின்றன. பாஸ்டரைசேஷன் செயல்முறைக்கு சுமார் 1-1.5 மணி நேரம் ஆகிறது. பாஸ்டரைசேஷனுக்குப் பிந்தைய culture report அதன் பாதுகாப்பை உறுதிசெய்த பின்னரே பால் பயன் பாட்டுக்கு வழங்கப்படுகிறது. தீங்கு விளைவிக்கக்கூடிய பாக்டீரியா மாசுபாடு காணப்படும் பால் நிராகரிக்கப்படுகிறது.

தற்போது வாரத்திற்கு ஒருமுறை பால் பாஸ்டியரைஸ் செய்யப்படுகிறது.



*(இடமிருந்து):* RC *மைசூர் மெட்ரோ சங்கத்தலைவர்* (2025) M P *கோபால் கிருஷ்ணன்,* D *ஸ்ரீனிவாசன்,* RID 3170 *செயலாளர் (நிர்வாகம்) பத்மஜா முரளிதர், சங்கச் செயலாளர் மோகன் குருமூர்த்தி (வலமிருந்து 4வது) ஆகியோர் மைசூருவின் செலுவாம்பா மருத்துவமனையில் உள்ள தாய்ப்பால் வங்கியில். (வலமிருந்து 2வது):* Dr *ஹம்சா, மையப் பொறுப்பாளர், மற்றும் குழந்தைகள் மருத்துவத் துறைத்தலைவர்* Dr N *பிரதீப் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.*



மருத்துவமனையின் NICU-வில் சிகிச்சை பெறும் பச்சிளம் குழந்தை.

தானங்கள் அதிகரிக்கும்போது, மேலும் பல பாஸ்டுரைசேஷன் சுழற்சிகளை நடத்தி, அவ்வப்போது ஏற்படும் பற்றாக்குறையை குறைக்க குழு நம்புகிறது. ஒரே நேரத்தில் அதிகபட்சம் ஒன்று அல்லது இரண்டு தாய்மார்களின் பாலை மட்டுமே ஒன்றுசேர்ப்பதும் வீணாவதை குறைக்க உதவியுள்ளது.

ஜூனில் 54 குழந்தைகள் தானம் அளிக்கப்பட்ட தாய்ப்பால் மூலம் பயனடைந்தனர்; முந்தைய மாதத்தில் இந்த எண்ணிக்கை 46 ஆக இருந்தது என Dr ஹம்ஸா கூறுகிறார். ஒவ்வொரு குழந்தையின் தேவைக்கேற்ப NICU மருத்துவர்கள் பாலை பரிந்துரைக்கின்றனர்; இது இலவசமாக வழங்கப்படுகிறது.

50 உறுப்பினர்களைக் கொண்ட, ஒரு வயது நிறைவடைந்த RC மைசூர் மெட்ரோவின் முதல் பெரிய திட்டம் இந்த பால் வங்கியாகும். “எங்கள் இளம் சங்கம் புதிதாகப் பிறந்த குழந்தைகள் பராமரிப்பில் அர்த்தமுள்ள பங்களிப்பு செய்ய இந்த பால் வங்கி வாய்ப்பளித்துள்ளது. மைசூரில் இது போன்ற முதல் வசதி இதுவாகும்,” என்கிறார் சங்கத்தலைவர் M P கோபாலகிருஷ்ணன்.



பயன்பாட்டிற்காக பதப்படுத்தப்பட்ட தாய்ப்பால் உறைவிப்பானில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

NICU சமீபத்தில் 36 படுக்கைகளிலிருந்து 66-ஆக விரிவுபடுத்தப்பட்டதால், மற்றொரு அவசரத் தேவையை மருத்துவமனை சுட்டிக்காட்டியுள்ளது. அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து, சுவாசக் கருவி (ventilator) ஆதரவு தேவைப்படும் தீவிரநிலை குழந்தைகள் சில நேரங்களில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படுகின்றனர்.

“எங்களுக்கு இரண்டு சுவாசக் கருவி தேவைப்படலாம்,” என்கிறார் Dr ஹம்ஸா. ஒரு அடிப்படை வென்டிலேட்டர் விலை சுமார் ரூ.12 லட்சம்; மேம்பட்ட மாடல்களின் விலை இதைவிட கணிசமாக அதிகமாக இருக்கலாம். எனவே, மருத்துவமனையுடனான கூட்டாண்மையை விரிவுபடுத்தும் போது, வென்டிலேட்டர்களை வழங்கி ஆதரிப்பது சங்கம் பரிசீலிக்கக்கூடிய ஒரு துறையாகும்.■

# RI தலைவர் பாபலோலாவின் இந்தியப் பயணம்



*இந்தியாவின் பல்வேறு மாவட்டத் தலைவர்களுடன் டெல்லியில் RI தலைவர் யின்கா பாபலோலா, RI துணைத் தலைவர் M முருகானந்தம் (இடமிருந்து 2வது), RI இயக்குநர் K P நாகேஷ் (வலமிருந்து 2வது).*




*வலப்புறம்: ஹைதராபாத்தில் (இடமிருந்து) ரூபால் பிலானி, இயக்குநர் நாகேஷ், ப்ரெஸி, தலைவர் பாபலோலா, RI துணைத்தலைவர் முருகானந்தம், RID 3150 DG உதய் S பிலானி, PDG ரவி வட்லமாணி, மாவட்ட பொது பிம்பத் தலைவர் சேஷா சாய்குமார் உள்ளிட்டோர்.*



கொல்கத்தாவில் நடைபெற்ற சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வில் தலைவர் பாபலோலா, அவரது மனைவி ப்ரெஸி, RI துணைத்தலைவர் முருகானந்தம் மற்றும் RID 3291 DG தபஸ் பட்டாச்சார்யா (வலமிருந்து 3வது).



தலைவர் பாபலோலா மற்றும் இயக்குநர் நாகேஷ்.



அரிந்தம் ராய்சௌதுரி (இடது), DG பட்டாச்சார்யா (வலது) முன்னிலையில், தலைவர் பாபலோலாவும் ப்ரெஸியும் ஒரு பெண்ணுக்கு சக்கர நாற்காலி வழங்குகின்றனர்.

ஜெய்ஸ்ரீ



கோவாவில் தலைவர் பாபலோலா, ப்ரெஸி, இயக்குநர் நாகேஷ், RID 3170 செயலாளர் ஃப்ளோரி பெர்னாண்டஸ் மற்றும் DG லென்னி டா கோஸ்டா.





டெல்லியில் RI துணைத்தலைவர் முருகானந்தம், தலைவர் பாபலோலா மற்றும் அவரது மனைவி ப்ரெஸி.

வலப்புறம்: டெல்லியில் உள்ள RI தெற்காசிய அலுவலகத்தில் தலைவர் பாபலோலா, RI துணைத்தலைவர் முருகானந்தம், RID நாகேஷ் ஆகியோருடன் RISAO தலைவர் ராஜேஷ் ஆனந்த் (வலது) மற்றும் அலுவலகப் பணியாளர்கள்.





RID 3132 DG ஜயேஷ் படேல், தலைவர் பாபலோலாவின் கைத்தறி உருவப்படத்தை அவருக்கு வழங்குகிறார். இயக்குநர் நாகேஷ், ப்ரெஸி மற்றும் TRF அறங்காவலர் A S வெங்கடேஷ் உடனிருக்கின்றனர்.





DG பிலானியுடன் தலைவர் பாபலோலா.




வாரணாசியில் RID 3120 DG பூனம் (வலமிருந்து 3வது) மற்றும் பெண் ரோட்டேரியன்களுடன் ப்ரெஸி மற்றும் சுமதி.






*இடப்புறம்:* RID 3120 DG *பூனம் குலாட்டி (வலமிருந்து 2வது), தலைவர் பாபலோலா மற்றும் ப்ரெஸிக்கு நினைவுப்பரிசு வழங்குகிறார்.*

*இடமிருந்து:* RIDE *பாசு தேவ் கோல்யான்,* PDG *சத்பால் குலாட்டி,* RI *துணைத்தலைவர் முருகானந்தம் மற்றும் அவரது மனைவி சுமதி.*



*வாரணாசியில் நடைபெற்ற சந்திப்பில் தலைவர் பாபலோலாவும் துணைத் தலைவர் முருகானந்தமும் ஆப்பிரிக்க முரசுகளை இசைக்கின்றனர். சுமதி முருகானந்தம் (இடது), ப்ரெஸி பாபலோலா (வலது) உடனிருக்கின்றனர்.*



*ஹைதராபாத்தில் ரூபால் பிலானி மற்றும் ப்ரெஸி பாபலோலா.*




*இடப்புறம்: கோவாவில்* RID *நாகேஷ், ப்ரெஸி, தலைவர் பாபலோலா,* RID 3170 DG *டா கோஸ்டா மற்றும் அவரது மனைவி நிட்டா ஆகியோர் ரோட்டராக்ட் தலைவர்களுடன். ப்ரெஸி பாபலோலாவுக்குப் பின்னால்* PDG *தீபக் புரோஹித்.*

*வடிவமைப்பு:*
N *கிருஷ்ணமூர்த்தி*



Rotary
PEOPLE OF ACTION

# சக்கரங்களில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

**V முத்துக்குமரன்**

‘ஸ்பிரெடிங் விங்ஸ்’ என்பது, சாகசப் பயணங்களை மேற்கொள்ளும் இந்தத் துணிச்சலான பெண்கள் குழுவின் கார் பயணம். RID 3233-ஐ சேர்ந்த, பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக உள்ள RC சென்னை மெராக்கி சங்கத்தைச் சேர்ந்த இக்குழு, கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா முழுவதும் பயணித்து, 42 RI மாவட்டங்களையும் சென்றடைந்துள்ளது. “மக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே எங்களின் நோக்கம். எங்களின் அடையாள நிகழ்வான தனிக் கார் பேரணி மூலம் மரக்கன்றுகள் நடுதல் உள்ளிட்ட உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, பூமியைக் காப்போம் என்ற செய்தியைப் பரப்புகிறோம்,” என்கிறார் குழுத் தலைவர் சிவபாலா ராஜேந்திரன்.

மே 25 முதல் 29 வரை நடைபெற்ற அவர்களின் ஒன்பதாவது, ஐந்து நாள் பேரணியில், சிவபாலா தலைமையிலான நால்வர் குழு தமிழகத்தின் ஒன்பது RI மாவட்டங்களுக்கும் சென்று, ‘காலநிலை நடவடிக்கை’ குறித்து ரோட்டேரியன்கள், மாவட்ட ஆட்சியர்கள், வன அலுவலர்கள் (DFO) மற்றும் பிற அரசு அதிகாரிகளுடன் கலந்துரையாடியது. இந்தியா முழுவதும் பயணித்த பின்னர், “2025 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் எங்களின் எட்டாவது பேரணிக்காக நேபாளத்தில் 20 நாட்கள் பயணம் செய்து, அங்குள்ள ரோட்டேரியன்கள் மற்றும் பொதுமக்களிடம் எங்களின் சுற்றுச்சூழல் நோக்கத்தைப் பரப்பினோம்,” என்கிறார் அவர். “இலங்கைக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தோம். ஆனால், ஏப்ரல்-மே காலகட்டத்தில் இந்தியாவே உலகின் மிக வெப்பமான இடமாக இருக்கும் என ஐ.நா. ஆய்வும், உலக வானிலை அமைப்புகளின் அறிக்கைகளும் சுட்டிக்காட்டியதால் திட்டத்தை மாற்றினோம்.” எனவே, “காலநிலை நடவடிக்கையை முனைப்புடன் மேற்கொள்வதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்” என்பதற்காக தங்கள் கவனத்தை தமிழகத்தின் மீது திருப்பினர்.

ஒவ்வொரு RI மாவட்ட மையத்திலும் பேரணிக் குழுவினர் மாவட்ட ஆளுநர்களிடம் தங்களின் ‘உறுதிமொழிக் கடிதங்கள்’ குறித்து விளக்கினர். பின்னர், மாவட்ட ஆளுநர்கள், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் மற்றும் வரவிருக்கும் தலைவர்களுடன் சென்று அவற்றை மாவட்ட ஆட்சியர்களிடம் வழங்கினர். “இயன்ற இடங்களில் DFO-க்கள் மற்றும் அரசு அதிகாரிகளையும் சந்தித்து, அந்தக் கடிதங்களை வழங்கினோம். ரோட்டேரியன்களையும் ரோட்டரி சங்கங்களையும் அரசின் பசுமை முயற்சிகளில் பயன்படுத்திக்கொள்ள



RC சென்னை மெராக்கி நிறுவனத் தலைவரும் திட்டத் தலைவருமான சிவபாலா ராஜேந்திரன் (இடமிருந்து 3வது), கொத்தங்கி சுசித்ரா, முன்னாள் தலைவர் அபிராமி செந்தில், AKS உறுப்பினர் K ஸ்ரீனிவாசன், சரவண செல்வி மற்றும் கம்யூனிட்ரீ நிறுவனர் ஹபீஸ் கான்.

வேண்டும் என்பதே அதன் சுருக்கமான வேண்டுகோள்." பசுமைப் பரப்பை அதிகரிக்க மாநில அரசும் இந்திய அரசும் பல திட்டங்களை செயல்படுத்துவதால், "உலகளவில் நற்பெயர் பெற்ற அரசு சாரா அமைப்பான ரோட்டரி, பூமியைப் பாதுகாக்கும் இந்த முயற்சிகளில் பங்கெடுக்க முடியும்," என்கிறார் சிவபாலா. பயணத்தின்போது ஏழு மாவட்ட ஆட்சியர்கள், ஐந்து DFO-க்கள் மற்றும் ஒன்பது மாவட்ட ஆளுநர்களை குழு சந்தித்தது.

"மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் எங்களுக்கு அன்பான வரவேற்பு கிடைத்தது. தங்கள் பகுதிகளில் ரோட்டரி சங்கங்கள் மேற்கொள்ளும் மரக்கன்று நடும் பணிகளில் ஈடுபட பல அரசு அதிகாரிகள் விருப்பம் தெரிவித்தனர்." மாநிலம் முழுவதும் 70 சங்கங்களைச் சேர்ந்த சுமார் 350–400 ரோட்டேரியன்களையும் குழு சந்தித்தது. "நின்ற இடங்களில் அவர்களை ஊக்குவித்து, காலநிலை நடவடிக்கைப் பிரசாரங்களின் தன்னார்வலர்களாக மாறுமாறு கேட்டுக்கொண்டோம்."

பெண்கள் குழுவை சிவபாலா வழிநடத்திய நிலையில், கடந்த பத்தாண்டு கார் பேரணிகளில் பெரிய சிக்கல்கள் இன்றி குழுவை முன்னெடுத்துச் சென்றது ஓட்டுநர் கொத்தங்கி சுசித்ராவின் திறமையே. குழுவில் 2025–26 சங்கத் தலைவர் ஸ்ரீ அபிராமி மற்றும் ஈஸ்வர பிரியாவும் இடம்பெற்றனர். "எங்களின் எல்லா கார் பேரணிகளிலும் இறைவன் எங்களுக்கு அருளாக இருந்தார். ஒரு முறை டயர் பஞ்சரானதைத் தவிர, இதுவரை பயணம் சுமுகமாக இருந்தது. நல்ல உடல் வலிமையும் சகிப்புத்தன்மையும் இருப்பதால் கடினமான நிலப்பரப்புகளிலும் மோசமான வானிலையிலும் என்னால் வாகனம் ஓட்ட முடிந்தது," என்கிறார் சுசித்ரா.



RID 3206 IPDG செல்ல ராகவேந்திரன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் பவன்குமாரிடம் 'உறுதிமொழிக் கடிதத்தை' வழங்குகிறார். மையத்தில் DG R S மாருதி மற்றும் கார் பேரணிக் குழுவினரும் காணப்படுகின்றனர்.

### ரோட்டரி அடர்ந்த காடு

உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5 அன்று, மெட்ராஸ் பல்கலைக் கழகத்தின் தரமணி வளாகத்தில் உள்ள வறண்ட நிலப்பரப்பில் 3,233 மரக்கன்றுகளை குழுவினர் நட்டனர். IPDG D தேவேந்திரன், பேரணி ஆதரவாளர் மற்றும் ஜவுளித் தொழிலதிபர் நல்லி குப்புசுவாமி செட்டி, கம்யூனிட்ரீ நிறுவனர் ஹபீஸ் கான், முன்னாள் அரசு அதிகாரி V இறையன்பு மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் ரீட்டா ஜான் ஆகியோர் முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்த ரோட்டரி ஆண்டின் இறுதிக்குள் வளாகத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நட்டு 'ரோட்டரி அடர்ந்த காடு' உருவாக்குவதே அவர்களின் இலக்கு.

RC சென்னை மெராக்கி குழுவின் அடுத்த இலக்கு இலங்கை. "2026 டிசம்பரில் யாழ்ப்பாணத்தில் தொடங்கி ஒரு வாரப் பயணம் மேற்கொள்வோம். நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து படகு மூலம் சென்று, RID 3220 உடன் இணைந்து சங்கங்களைச் சந்திப்போம். ரோட்டேரியன்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை நடவடிக்கையின் அவசியம் குறித்த எங்கள் செய்தியைப் பரப்புவோம்," என்கிறார் சிவபாலா. ■

# எல்லைகள், பாதுகாப்பு, குரல் கொடுத்தல் குறித்த பாடம்

கிரண் ஜெஹ்ரா

RID 3142-ஐ சேர்ந்த RC உள்ஹாஸ்நகர், 1 முதல் 5-ம் வகுப்பு வரையிலான 495 மாணவர்களுக்கு ஸ்பர்ஷ் ஏக் எஹ்சாஸ் (தொடுதல் மற்றும் விழிப்புணர்வு) எனும் தனிநபர் பாதுகாப்பு விழிப்புணர்வுத் திட்டத்தை நடத்தியது. வயதுக்கேற்ற படங்கள், செயல்விளக்கங்கள், ஊடாடும் நடவடிக்கைகள் மூலம் சிறு குழந்தைகளுடன் இந்தக் கடினமான உரையாடலைத் தொடங்கியது.

இன்னர் வீல் உள்ஹாஸ்நகர் சங்கத்தைச் சேர்ந்த சான்றளிக்கப்பட்ட மூன்று பயிற்சியாளர்களான ரச்னா தலால், லதா ரங்கா, டிம்பிள் ஷா ஆகியோர் இச்சந்திப்புகளை நடத்தினர். வழக்கமான விரிவுரைக்குப் பதிலாக, பாதுகாப்பற்ற அல்லது அசௌகரிய இடையீடுகளை அடையாளம் காணவும், தாங்கள் என்ன செய்யலாம் என்பதைத் தீர்மானிக்கவும் குழந்தைகளுக்கு உதவும் வகையில், சித்திரப்படுத்தப்பட்ட சூழல்களைப் பயிற்சியாளர்கள் பயன்படுத்தினர்.

1, 2-ம் வகுப்புகளுக்கு, "விரும்பாத விளையாட்டு விளையாடச் சொல்லப் படுதல் அல்லது பாதுகாப்பற்ற ரகசியத்தை வைத்திருக்க அழைக்கப் படுதல் போன்ற சூழல்களை செயல்விளக்கங்கள் கையாண்டன. மறுக்கவும், விலகிச் செல்லவும், உதவி தேடவும் முடியும் என்பதைப் புரிந்துகொள்ள குழந்தைகள் ஊக்குவிக்கப்பட்டனர்," என்கிறார் சங்கத் தலைவர் ரூதா கோல்வேகர். தனிப்பட்ட உடல் பாகங்கள் தனிப்பட்டவை என்றும், அசௌகரியம் ஏற்படும்போது உதவும் பெரியவரிடம் பேச வேண்டும் என்றும் கற்பித்தல் பொருள் வலியுறுத்தியது.

3 முதல் 5-ம் வகுப்புகளுக்கு, உடல் எல்லைகள், தனிப்பட்ட உடல் பாகங்கள், தனிநபர் பாதுகாப்பு, குரல் கொடுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கி உரையாடல்கள் இன்னும் ஆழமாகச் சென்றன. ஒரு அமர்வு பாடங்களை எட்டு எளிய விதிகளாகச் சுருக்கியது: எது தனிப்பட்டது எனப் புரிந்துகொள்ளுதல், பாதுகாப்பான, பாதுகாப்பற்ற சூழல்களை அடையாளம் காணுதல், இல்லை எனச் சொல்லுதல், விலகிச் செல்லுதல், "நம்பகமான பெரியவரிடம் சொல்லுதல், உதவி வரும் வரை சொல்லிக்கொண்டே இருத்தல்-இது குழந்தையின் தவறு அல்ல என நினைவில் கொள்ளுதல்," என்கிறார் ரூதா.

பள்ளி நிர்வாகம் இந்த விழிப்









*மேலே: அங்குஷ் கம்லகாந்த் (இடது) மற்றும் சங்கத் தலைவர் ருதா கோல்வேகர் (வலமிருந்து 2வது) மாணவர்களுடன்.*

*இடப்புறம்: ருதா (இடது) மற்றும் பயிற்சியாளர் லதா ரங்கா மாணவர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.*

புணர்வு அமர்வை ஆண்டுக்கு இருமுறை நடத்தக் கோரியிருப்பதால், “இத்திட்டம் பள்ளியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது” எனக் கூறும் ரூதா மகிழ்ச்சியடைகிறார். “இந்த ஆண்டு பிற்பகுதியில் தொடர் அமர்வு நடத்த திட்டமிட்டுள்ளோம்.”

சங்கத் தலைவரின் கணவரும், இம்முயற்சியுடன் தொடர்புடைய சங்க உறுப்பினருமான PDG சந்திரசேகர் கோல்வேகர், இவ்வுரையாடலை வகுப்பறையைத் தாண்டி எடுத்துச் செல்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். “பல ஆண்டுகளாக குழந்தை துஷ்பிரயோக வழக்குகள் அதிகரித்துள்ளன. வீட்டிலும் வெளியிலும் உள்ளவர்களை அப்பாவித்தனத்தில் நம்புவதன் அபாயங்களை குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டும். செய்யக் கூடியவை, செய்யக்கூடாதவை பற்றி அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும், அப்போதுதான் அவர்கள் தங்கள் பாதுகாப்புக்காக விழிப்புடன் நடவடிக்கை எடுக்க முடியும்,” என்கிறார்.

ரோட்டரிக்கும் இன்னர் வீலுக்கும் இடையேயான கூட்டிணைவு, “ஸ்பர்ஷ் ஏக் எஹ்சாஸ்-க்கு நிலைத்திருக்கக்கூடிய ஒரு மாதிரியையும் தருகிறது: வயதுக்கேற்ற பொருட்களுடன் பயிற்சி பெற்ற தன்னார்வலர்கள், முக்கியமான ஆனால் உணர்திறன் வாய்ந்த இந்த உரையாடலைப் பள்ளிகளுக்குள் கொண்டு செல்ல முடியும்; இது பாதுகாப்பற்ற சூழல்களை அடையாளம் காணும் மொழியையும், உதவி தேடும் நம்பிக்கையையும் குழந்தைகளுக்கு அளிக்கிறது,” என்கிறார் ரூதா.

இத்திட்டத்தை ரூதா, சங்கச் செயலாளர் முஸ்கான் ஷஹதாத்பூரி, திட்ட ஒருங்கிணைப்பாளர் அங்குஷ் கம்லகாந்த் ஆகியோர் நிர்வகித்தனர். ■

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## புதுப்பிறவி, டயாலிசிஸ் பிரிவுகள் மருத்துவமனைகளில்

இந்த ரோட்டரி ஆண்டு (2026–27) RID 3170க்கு கடைசி ஆண்டாகும்; இதற்குப் பிறகு இது RID 3171, RID 3172 என இரு புதிய மாவட்டங்களாகப் பிரிக்கப்படும். “வரவிருக்கும் புதிய மாவட்டங்களுக்கு ஒரு வலுவான அடித்தளத்தை உருவாக்க விரும்புவதால், உறுப்பினர்களை பல்வகைப்படுத்த அனைத்து வடிவங்களிலும் 30–40 புதிய சங்கங்கள் உருவாக்கப்படும்” என்று லெனி டா கோஸ்டா தெரிவிக்கிறார். ரோட்டராக்ட் சங்கங்களின் எண்ணிக்கை 200ஆக இரட்டிப்பாக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

ஜூலை 1 நிலவரப்படி 6,750 உறுப்பினர்களைக் கொண்ட 146 ரோட்டரி சங்கங்களுடன், “ ரூ.100 கோடி மதிப்பிலான சேவைத் திட்டங்கள் மூலம் 10 லட்சம் பேரின் வாழ்க்கையைத் தொடுவோம்.” நைஜீரிய மருத்துவமனையில் ஒரு புதுப்பிறவி தீவிரப் பராமரிப்பு பிரிவை (GG: $90,000) அமைப்பதைத் தவிர, மாவட்டத்தில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் இதுபோன்ற 4–5 NICU-களையும் (ஒவ்வொன்றும் GG: $40,000-$50,000) டா கோஸ்டா அமைப்பார். “எங்கள் சங்கங்கள் சுமார் 30-32 GG திட்டங்களைச் செய்யும், இதில் 30 டயாலிசிஸ் மையங்களும் (ஒவ்வொன்றும் $50,000) அடங்கும்.”

அரசு/நிதியுதவி பெறும் பள்ளிகளில் சுமார் 2,000 ஸ்மார்ட் வகுப்பறைகள் நிறுவப்படும் (CSR மானியங்கள்: தலா ரூ.1 லட்சம்); மாணவர்களுக்கான 20 STEM ஆய்வகங்கள் இரண்டு GGக்களுடன் அமைக்கப்படும். “CSR மானியங்கள் மூலம் ஐந்து ஹேப்பி ஸ்கூல்களைச் செய்கிறோம்,” என்று டா கோஸ்டா கூறுகிறார். TRF நன்கொடைக்கு அவரது இலக்கு $30 லட்சம்.

அவர் 2008-ல் ரோட்டரியில் சேர்ந்தார்.



**லெனி டா கோஸ்டா**
முதியோர் நல மருத்துவர்
RC மார்காவ் மிட் டவுன்
RID 3170

## கழிவு மேலாண்மையில் கவனம்



**R S மாருதி**
பாடநூல் வெளியீட்டாளர்,
RC கோயம்புத்தூர் டெக்ஸ்ஸிட்டி, RID 3206

புதிய சங்கங்களைச் சேர்ப்பதற்குப் பதிலாக, “20–25 உறுப்பினர்களைக் கொண்ட பல சிறிய சங்கங்கள் இருப்பதால், ரோட்டேரியன்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் என் கவனம் உள்ளது, அவை வலுப்படுத்தப்படும். என் பதவிக்காலத்தில் சுமார் 1,000 புதிய ரோட்டேரியன்களைச் சேர்ப்பதே என் இலக்கு” என்று மாருதி கூறுகிறார். ஜூலை நிலவரப்படி, மாவட்டத்தில் 3,500 ரோட்டேரியன்களைக் கொண்ட 77 சங்கங்கள் உள்ளன.

கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள தொண்டாமுத்தூர் பஞ்சாயத்தில் ஒரு திடக்கழிவு மேலாண்மை ஆலை (GG: ரூ.1 கோடி) அமைக்கப்படும். “ மேலும், அதே கிராமத்திற்கு அருகில் ஒரு பயோசார் ஆலையை நிறுவுவோம், அதன் GG மதிப்பை நிர்ணயிக்க கணக்கெடுப்பு நடந்துகொண்டிருக்கிறது” என்று அவர் கூறுகிறார். தமிழ்நாடு முழுவதும் ஒரு பெரிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை ஏற்பாடு செய்வதில் மாவட்டத்தின் அனைத்து சங்கங்களும் ஈடுபடும். “ரூ.1.5 கோடி மதிப்பிலான சாலை பாதுகாப்பு பிரச்சாரம் தனியார் நிதியுதவியாளர்கள் மற்றும் நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்படும்.”

CSR மானியங்கள் மூலம் (ஒவ்வொரு கிராமத்திற்கும்: ரூ.30 லட்சம்) 100 தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்களும் அணுகல் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். “பல நிகழ்வுகள் மூலம், நமது பல்லுயிர் வளத்தைப் பாதுகாக்கும் சுற்றுச்சூழல் நட்பு வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ளும்படி கிராமப்புற மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவோம்.” TRF-க்காக $14 லட்சம் திரட்ட மாருதி நம்பிக்கையுடன் உள்ளார். 2004-ல் ரோட்டேரியனான அவர், “பயனாளிகளின் புன்னகையைப் பார்க்கும்போது நான் ஊக்கமடைகிறேன்” என்கிறார். “என் வாழ்நாள் முழுவதும் தேவைப்படுவோருக்கு சேவை செய்யும் அடிமட்ட ரோட்டேரியனாக இருப்பதே” அவரது நீண்டகால இலக்கு என்று அவர் மேலும் கூறுகிறார்.

## 100 அரசுப்பள்ளிகள் தத்தெடுக்கப்படுகின்றன

கிழக்கு உ.பி.யில் உள்ள ஒரு அரசுப் பள்ளியை மாவட்டத்தின் ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் தத்தெடுத்து, பல கல்விச் செயல்பாடுகளை மேற்கொள்ளும். "பல பள்ளித் திட்டங்களில் பணியாற்றி வருகிறோம், அவை வரைவு நிலையில் உள்ளன. குறைந்தது 100 அரசுப் பள்ளிகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகள் இருக்கும் (CSR மானியங்கள் + சங்க நன்கொடைகள்: தலா ரூ.3–5 லட்சம். மேலும், குறைந்தது 5,000 குழந்தைகளுக்குப் பயனளிக்கும் வகையில், ரூ.25 லட்சம் செலவில், CSR மானியங்கள் மற்றும் உறுப்பினர் நன்கொடைகள் மூலம், டெஸ்க்-பெஞ்சுகள் பள்ளிகளுக்கு வழங்கப்படும்" என்று பூனம் குலாட்டி கூறுகிறார்.

ஜூலை 1 நிலவரப்படி RID 3120-ல் 4,265 ரோட்டேரியன்களைக் கொண்ட 100 சங்கங்கள் இருந்தன, தனது பதவிக்காலத்தில் 10–12 புதிய சங்கங்களை உருவாக்கி, குறைந்தது 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதே பூனமின் இலக்கு. கோரக்பூரில் உள்ள ஒரு அரசு மருத்துவமனையில் ஒரு ரோட்டரி இரத்த வங்கி திறக்கப்படும் (GG: ரூ.45 லட்சம்), அதேசமயம் அவரது சங்கத்தால் தொடங்கப்படும் ஒரு மேமோகிராஃபி வேன் (GG: ரூ.65 லட்சம்) மார்பகம் மற்றும் கருப்பை வாய்ப் புற்றுநோய்க்காக 20,000 கிராமப்புற பெண்களை பரிசோதிக்கும்.

ஜூலை முதல் வாரத்தில், பிரயாக்ராஜில் உள்ள 110 காய்கறி விற்பனையாளர்களுக்கு தள்ளுவண்டிகள் (தலா ரூ. 9,000) வழங்கப்பட்டன, "ஆகஸ்டில் வாரணாசியில் 1,000 பள்ளி சிறுவர் சிறுமிகளுக்கு சைக்கிள்களை நன்கொடையாக வழங்கினோம்." மேலும் முக்கிய நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் 10,000க்கும் மேற்பட்ட செடிகள் நடப்படும்.

TRFக்காக பூனம் $6 லட்சம் திரட்டுவார். 2013-ல் ரோட்டரியில் இணைந்த அவர், "இது நல்ல எண்ணங்களை ஒழுங்கமைக்கப்பட்ட, நடைமுறை செயலாக மாற்றி, தன்னலமற்ற சேவைக்கு உத்வேகம் அளிக்கிறது" என்று புன்னகைக்கிறார்.



**பூனம் குலாட்டி**
கல்வியாளர்
RC அலகாபாத் ராயல்ஸ்
RID 3120



**அமித் சிங்லா**
பட்டைய கணக்காளர்
RC சமனா, RID 3090

## சமனாவில் ஒரு ரோட்டரி மருத்துவமனை

1996-ல் ரோட்டரியில் இணைந்ததிலிருந்து, "நண்பர்கள் மற்றும் ஒத்த எண்ணம் கொண்ட நிபுணர்களுடனான தொடர்பு, அமைப்பின் பொது நற்பெயரை உயர்த்த முயற்சி எடுப்பது ஆகியவை எனக்கு திருப்திகரமான அனுபவமாக இருந்துள்ளன" என்று அவர் கூறுகிறார். 600 நிகர உறுப்பினர் வளர்ச்சியுடன் 25 புதிய சங்கங்களைத் தொடங்குவதே அவரது இலக்கு, இதன் மூலம் அடுத்த ஜூன் மாதத்திற்குள் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை 3,600ஆக அதிகரிப்பது.

GG (ரூ.2–3 கோடி) மற்றும் நன்கொடையாளர்கள், உலகளாவிய பங்குதாரர்கள், CSR மானியங்கள் (மொத்தம் ரூ.6 கோடி மதிப்பு) ஆகியவற்றின் கலவையின் மூலம் மூன்று ஆண்டுகளில் சமனாவில் ஒரு பல்துறை மருத்துவமனை கட்டப்படும். "இந்தப் பெரும் திட்டத்தின் முறைகளில் இன்னும் பணியாற்றி வருகிறோம், என் பதவிக்காலத்தில் ரூ.4 கோடி முதலீடு செய்யப்படும்" என்று சிங்லா கூறுகிறார். அடுத்தபடியாக, சுனாமில் ஒரு பாத் லேப் உடன் கூடிய பல் மருத்துவமனை (GG: ரூ.1 கோடி) கட்டப்படும். துரியில் உள்ள அரசு சிவில் மருத்துவமனையில் 4-5 இயந்திரங்களுடன் ஒரு டயாலிசிஸ் மையம் (GG: ரூ.1 கோடி) அமைக்கப்படும்; ராஜஸ்தானின் ஸ்ரீ கங்காநகரில் ஒரு குருடர்-ஊமையர் பள்ளியில் சூரிய மின் ஆலை (GG: ரூ.50 லட்சம்) நிறுவப்படும்.

பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா முழுவதும் 100க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 10,000 கிராமப்புற பயனாளிகளை சென்றடையும். TRF நன்கொடைக்காக, சங்கங்களிடமிருந்து $1.2 மில்லியன் திரட்டுவதே அவரது இலக்கு. ரோட்டரியில் தனது மூன்று தசாப்த பயணத்தைப் பற்றி அவர் கூறுகையில், "என் மாநிலத்தின் வருவாய் மாவட்டங்கள் முழுவதும், அதற்கு அப்பாலும் புதிய நட்புகளை ஏற்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்" என்கிறார்.■

# பார்சிலோனாவில் மயங்கிய மனம்

டயானா ஷோபெர்க்



சில அடிகளிலேயே பார்சிலோனாவின் 2,000 ஆண்டுகால வரலாற்றைக் கடந்து செல்கிறோம்-ரோமானியக் கோயிலின் இடிபாடுகள்; நகரின் தியாகி பாதுகாவலரான புனித எவுலாலியாவின் புனிதச் சின்னங்களைப் பாதுகாக்கும் இடைக்கால தேவாலயம்; மொசைக் அலங்காரங்களால் சிறப்பிக்கப்பட்ட நவீன கலைநயமிக்க இசை அரங்கம். திரும்பும் ஒவ்வொரு மூலையிலும் பழமையான கட்டிடங்கள், பசுமை நிறைந்த அமைதியான முற்றங்கள், நீரூற்றுகள், கலைப்படைப்புகள் என புதிய காட்சிகள் காத்திருக்கின்றன.

2027-ம் ஆண்டு ஜூன் 26 முதல் 30 வரை நடைபெறவிருக்கும் ரோட்டரி சர்வதேச மாநாட்டை நடத்தவிருக்கும் பார்சிலோனாவின் ஈர்ப்புகளை நேரில் அனுபவிக்க சில மணி நேரங்களுக்கு முன்புதான் நான் இங்கு வந்தேன். விமானப் பயணத்திலிருந்து மீண்டபோது, RC பார்சிலோனா ஆல்பா உறுப்பினர் டோராஸும், RC சான் கூகாட் டெல் வல்லெஸ் உறுப்பினர் மான்ட்சே மோரலும் கிரான் ஓட்டல் ஹவானாவில் என்னைச் சந்தித்தனர். 1882-ல் கட்டப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆடம்பர விடுதியே ஆர்சி பார்சிலோனாவின் தளமாகவும், அடுத்த சில நாட்களுக்கு எனது தங்குமிடமாகவும் உள்ளது.

பார்சிலோனாவின் கோத்திக் காலாண்டை நோக்கி நடந்தபடி, பார்சிலோனாவும் அதன் பிராந்தியமான கட்டலோனியாவும் கடந்து வந்த வரலாற்றை டோராஸ் விளக்கினார். கி.மு. முதல் நூற்றாண்டின் இறுதியில் ரோமானியர்கள் இந்த நகரை நிறுவி பார்சினோ என்று அழைத்தனர். 12-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கட்டலோனியா அரகோன் அரச மரபின் கீழ் வந்தது. பின்னர் வலென்சியா, சிசிலி, சார்டினியா, நேபிள்ஸ், ஏதென்ஸ் உள்ளிட்ட மேற்கு மத்தியதரைக் கடலின் பல பகுதிகள் அதன் ஆட்சிக்குள் வந்தன. “12 முதல் 14-ம் நூற்றாண்டுகள் வரை மத்தியதரைக் கடல் பகுதியில் இது மிக முக்கியமான நாடாக இருந்தது,” என்கிறார் டோராஸ்.

கோத்திக் காலாண்டின் நுழை வாயிலில் நாங்கள் நிற்கிறோம். பார்சிலோனா வலிமை மிக்க மத்தியதரைக் கடல் சக்தியாக இருந்த காலத்திலேயே இந்தப் பகுதி வளர்ந்தது. அலங்கரிக்கப்பட்ட பார்சிலோனா பேராலயம் புனித எவுலாலியாவுக்கு அர்ப்பணிக்கப் பட்டது. ரோமானியப் பேரரசில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான துன்புறுத்தல் நடைபெற்ற 4-ம் நூற்றாண்டில், 13 வயதிலேயே அவர் தியாகியாக்கப்பட்டார்.

பேராலயம் அமைந்துள்ள பகுதி பழைய ரோமானிய நகரத்தின் எல்லைக்குள் இருந்தது. அருகிலுள்ள கட்டிடங்களின் அடிப்பகுதியில் காணப்படும் பெரிய கற்கள் அசல் ரோமானியச் சுவர்களின் பகுதிகள்; மேலே உள்ள சிறிய செங்கற்கள் பின்னர் சேர்க்கப்பட்டவை என்று டோராஸ் சுட்டிக்காட்டுகிறார்.

தேவாலயத்தை ஒட்டிய குறுகிய தெருவில் தொடர்ந்து செல்லும்போது, கிரீடம் போன்ற கோபுரத்தைக் கொண்ட பழைய அரச அரண்மனையையும், யுனெஸ்கோ அங்கீகரித்த பல ஆவணங்களைப் பாதுகாத்து வரும் அரகோன் அரச மரபின் ஆவணக் காப்பகத்தையும் கடந்து செல்கிறோம்.

1469-ல் அரகோனின் இரண்டாம் பெர்டினாண்ட், அருகிலிருந்த காஸ்டீலின் இசபெல்லாவை மணந்தார். இது ஸ்பெயின் ஒன்றிணைவதற்கான அடித்தளத்தை அமைத்தது. 1492-ல் அவர்கள் கிறிஸ்டோபர் கொலம்பஸின் புதிய உலகப் பயணங்களுக்கு ஆதரவளித்தனர்; இதன் மூலம் ஸ்பெயின் உலகளாவிய சக்தியாக உருவெடுக்கத் தொடங்கியது. கொலம்பஸின் பயணங்கள் தொடர்பான வரலாற்று ஆவணங்கள் அரகோன் ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

அமெரிக்காவில் செல்வம் ஈட்டிய கட்டலோனிய வணிகர்களே பார்சிலோனாவின் புகழ்பெற்ற நவீனக் கலை இயக்கத்தின் வளர்ச்சிக்குக் காரணமானவர்கள்.

கோத்திக் காலாண்டுக்கு வெளியே அமைந்துள்ள கட்டலோனிய இசை அரண்மனையில் இந்தக் கட்டலோனிய நவீனக் கட்டிடக்கலையை முதன் முதலாகக் காண்கிறேன். மலர் வடிவ மொசைக் தூண்களும் புகழ்பெற்ற இசையமைப்பாளர்களின் உருவச்சிலைகளும் கொண்ட இந்த யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளம் என் பயணக் களைப்பிலும் கவனத்தை ஈர்க்கிறது. உள்ளே செல்ல நேரமில்லையெனில், அருகிலுள்ள முதல் மாடிக் கஃபேயில் காபி அருந்தியபடி பீங்கான் மலர்களையும் வண்ணக் கண்ணாடி அலங்காரங்களையும் ரசிக்கலாம்.

அடுத்த நாளில் இன்னும் பல நவீனக் கட்டிடங்களைப் பார்க்கலாம் என்று என் ரோட்டரி நண்பர்கள் கூறுகின்றனர். ஆனால் இப்போது மழை பெய்யத் தொடங்கியதால் நாங்கள் காபிக்காக உள்ளே செல்கிறோம். மழை குறைந்ததும் நகரமே ஒளிர்வது போல் தெரிகிறது. டோராஸிடம் விடைபெற்று, மோரலுடன் பார்சிலோனாவின் புகழ்பெற்ற நடைபாதையான லா ராம்ப்லாவில் நடக்கிறேன். வழக்கமாக பரபரப்பாக இருக்கும் இந்தத் தெரு அன்று மழையால் அமைதியாக இருந்தது.

நாங்கள் ரியல் சதுக்கத்துக்குள் திரும்பியதும் மோரல் கைகளை விரித்து, “ரசியுங்கள்,” என்கிறார். வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்ட இந்தச் சதுக்கம், பனைமரங்களால் நகரத்தின் நடுவே ஒரு சோலை போலத் தெரிகிறது. பாரம்பரிய பாணிக் கட்டிடங்களில் உணவகங்களும் இரவு நேரக் கேளிக்கை மையங்களும் அமைந்துள்ளன.

அந்தோனி கவுடி என்றாலே பார்சிலோனா நினைவுக்கு வருகிறது. அவரது கற்பனை வளம் மிக்க படைப்புகளில் சிலவற்றை மட்டுமே காண எனக்கு சில மணி நேரங்களே

இருந்தன. ஒவ்வொரு கட்டிடத்தையும் பார்த்தாலும், அவர் உருவாக்கிய கனவுலகக் கட்டிடங்களையும் பூங்காவையும் விவரிக்க வார்த்தைகள் போதவில்லை.

ரோட்டராக்ட் கிளப் டெல் வல்லெஸ் உறுப்பினர் அலெக்ஸ் மார்ட்டோரெலுடன் உலகின் உயரமான தேவாலயமான சாக்ரடா ஃபமிலியா பேராலயத்தைப் பார்க்கும்போது, “ஒரு மணி நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும், இதுவரை கவனிக்காத புதிய விஷயங்கள் இருப்பதை உணரலாம்,” என்கிறார்.

கவுடி 1883-ல் இந்தப் பேராலயப் பணியைத் தொடங்கினார்; அதன் கட்டுமானம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு ஜூன் 10-ம் தேதி, கவுடி மறைந்ததன் 100-ம் ஆண்டு நினைவு நாளில், போப் லியோ 14-ம் ஜூன் தேவாலகத்தின் சமீபத்தில் நிறைவடைந்த உயரமான கோபுரத்தை ஆசீர்வதித்தார். உள்ளே சென்று மரங்களைப் போன்ற பிரம்மாண்டத் தூண்களையும் காட்டு விதானத்தைப் போன்ற கூரையையும் காண விரும்பினால் முன்பதிவு செய்வது சிறந்தது. அடுத்த ஜூன் மாநாட்டிற்காகத் திரும்பும்போது அதைச் செய்ய நான் திட்டமிட்டுள்ளேன்.

பிரம்மாண்டமான கட்டிடத்தைச் சுற்றிப் பார்க்கும்போது, ரோட்டராக்ட் கிளப் ஆஃப் பார்சிலோனா -டியாகோனல் உறுப்பினர் தோமாஸ் மாசுச்சியுடன் பேசுகிறேன். அவரது பெற்றோரும் ரோட்டராக்டர்களாக இருந்தபோது சந்தித்தவர்கள். 20 வயதான அவர் இரண்டு ஆண்டுகளாக ரோட்டராக்டராக உள்ளார்; பேராலயத்திலிருந்து சுமார் 15 நிமிட நடைதூரத்தில் வசிக்கிறார்.

“நகரத்தை அறிந்துகொள்வது மிகவும் முக்கியம். தெருக்களில் நடந்து செல்லுங்கள்; இங்குள்ள மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள். சாக்ரடா ஃபமிலியா போன்ற உலகின் வேறு பகுதிகளில் காண முடியாத கட்டிடங்களும், பல நவீனக் கட்டிடங்களும் இங்கே உள்ளன. இது கட்டலோனியாவில் மட்டுமே நமக்குக் கிடைக்கும் தனித்துவம்,” என்கிறார் அவர்.

19-ம் நூற்றாண்டில் பார்சிலோனாவில் தொழிலும் செல்வமும் பெருகியபோது, ஸ்பெயினின் பிற பகுதிகள் பொருளாதாரச் சிரமங்களை எதிர்கொண்டன. இதனால் கட்டலோனிய மக்களிடையே பிராந்தியப் பெருமை அதிகரித்தது; நவீனக் கலை இயக்கம் அதற்கான கலை வெளிப்பாடாக உருவானது. செல்வந்தர்கள் கட்டலோனிய கட்டிடக் கலைஞர்களை நியமித்து ஆடம்பரமான கட்டிடங்களை உருவாக்கினர். 1900களின் தொடக்கத்தில் இயக்கம் மங்கத் தொடங்கினாலும், இன்று நகரில் நவீனக் கலை அம்சங்களைக் கொண்ட நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் உள்ளன; அவற்றில் ஒன்பது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நவீனக் கலை இயக்கத்தின் மையமாக விளங்கிய அழகிய பாசெய்க் டெ கிராசியாவுக்குச் செல்கிறோம். இங்கு கவுடி வடிவமைத்த அலைபோன்ற காசா மிலா மற்றும் டிராகனின் முதுகைப் போன்ற கூரையைக் கொண்ட காசா பட்லோ ஆகியவற்றைக் காணலாம். மொசைக் பதிக்கப்பட்ட இருக்கைகளுடன் கூடிய அலங்கார விளக்குத் தூண்களையும், ‘பனோட்’ எனப்படும் நடைபாதை ஓடுகளையும் ரசித்தபடி நடக்கலாம். இங்கு கார்ட்டியே, பிராடா, சேனல் உள்ளிட்ட ஆடம்பரக் கடைகளும் உள்ளன.

*வலப்புறம்: பார்சிலோனாவின் தென் மேற்கில் உள்ள கடலோர நகரமான சிட்ஜெஸில் தயாரிக்கப்பட்ட பேயெல்லா.*

*கீழே: பார்க் குவெல் காட்சியின் ஒரு பகுதி.*



செர்ஜியோ அரகோனும் ஜூலியோ சொர்ஹூஸும் பார்சிலோனாவின் ரெயல் கிளப் மாரிட்டிம் கடல்சார் சங்கத்தின் மாடியில் அமர்ந்திருக்கிறார்கள். மேசையில் பல வண்ண ஆலிவ் பழங்கள்.



*பார்சிலோனா கடற்கரை.*





PRID ஜூலியோ சொர்ஜஸ் (இடது) மற்றும் மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் செர்ஜோ அரகோன், பார்சிலோனா ரியல் கிளப் மாரிட்டிமில்.



தபாஸ் உணவு வகைகள் நிறைந்த மேசை.

நூற்றாண்டு பழமையான இந்தப் படகு சங்கத்தின் துறைமுகத்தில் பாய்மரப் படகுகளின் கொடிகள் மென்மையான காற்றில் அசைகின்றன. கடலுக்கு மேலே கேபிள் கார்கள் செல்கின்றன. தொலைவில் அலைபோன்ற மரப்பாலமான ராம்ப்லா டெ மார், புகழ்பெற்ற நடைபாதையை நீரின் குறுக்கே நீட்டி வரலாற்றுச் சிறப்புமிக்க போர்ட் வெல்லுடன் இணைக்கிறது.

பார்சிலோனா கடற்கரை நகரமாக இருந்தாலும், அதன் வரலாற்றில் பெரும்பகுதி காலம் கடலைப் புறக்கணித்தே வாழ்ந்தது என்று அரகோன் விளக்குகிறார். நகரம் முதலில் கோத்திக் காலாண்டுக்குள் வளர்ந்தது; 19-ம் நூற்றாண்டில் பழைய நகரச் சுவர்கள் இடிக்கப்பட்டபோது விரிவடைந்தது. இந்தப் புதிய பகுதிக்கு ‘லெய்ஷாம்ப்ளா’ என்று பெயர்; அதற்கு ‘விரிவாக்கம்’ என்று பொருள். ஆனால் கடற்கரைப் பகுதி கனரகத் தொழில்களுக்குப் பயன்படுத்தப்பட்டதால் உள்ளூர்வாசிகள் அங்கு செல்வது அரிதாக இருந்தது.

1992 பார்சிலோனா ஒலிம்பிக் போட்டிகளுடன் அனைத்தும் மாறின. “நகரில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டது. அந்த மாற்றம் பெற்ற பகுதிகளில் கடற்கரையும் ஒன்று,” என்கிறார் மாநாட்டின் வரவேற்பு அமைப்புக் குழுத் தலைவரான அரகோன். இன்று போர்ட் ஒலிம்பிக் பகுதியில் விடுதிகள், கடைகள், உணவகங்கள், இரவு நேரக் கேளிக்கைகள் மற்றும் கடற்கரைகள் உள்ளன.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது ஸ்பெயினின் புகழ்பெற்ற சிறு பகிர்வு உணவுகளான ‘தபாஸ்’ வகைகள் வரிசையாக வருகின்றன– வறுத்த கூனைப்பூக்கள், கணவாய், சிப்பிகள், கத்தரிக்காய் விழுது, எலுமிச்சைச் சுவை கொண்ட பச்சை மீன் உணவு. நகரத்தைப் பற்றிய உரையாடல் காட்டுப் பன்றிகள் முதல் காபி கலாசாரம் வரை செல்கிறது. “உலகிலேயே சிறந்த காபி கிடைக்கும் இரண்டு நாடுகள் இத்தாலியும் ஸ்பெயினும்தான்,” என்கிறார் அரகோன்.

முன்னாள் ரோட்டரி சர்வதேச இயக்குநரும், 2002-ம் ஆண்டு வரவேற்பு அமைப்புக் குழுத் தலைவருமான சொர்ஹூஸ், என் சொந்த ஊரான மில்வாக்கியின் கலை அருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ள புகழ்பெற்ற அரங்கத்தை வடிவமைத்த ஸ்பானியக் கட்டிடக் கலைஞர் சாண்டியாகோ கலத்ராவாவைப் பற்றி என்னிடம் கேட்கிறார்.

“உணவு, கலாசாரம், நட்பு– இவை அனைத்தையும் ஜூன் மாதத்தில் நடைபெறும் மாநாட்டிற்கு

வருபவர்களுடன் பார்சிலோனாவின் ரோட்டரி உறுப்பினர்கள் பகிர்ந்துகொள்வார்கள்,” என்கிறார் அரகோன். “பார்சிலோனா மிகவும் கவர்ச்சியான நகரம். இது பல கலாசாரங்கள் கலந்த நகரம். மக்கள் நட்பானவர்கள்; வாழ்க்கை அமைதியானது. மத்தியதரைக் கடல் சூழலும் இயற்கை அமைப்பும் இதை மிகவும் கவர்ச்சிகரமான இடமாக்குகின்றன.”

அரகோன் தனது முதல் ரோட்டரி மாநாட்டில் 1990ல் அமெரிக்காவின் ஓரிகன் மாநில போர்ட்லாண்டில் பங்கேற்றார். ரோட்டரியின் பிரம்மாண்டத்தை நேரில் காணவும் புதிய தொடர்புகளை உருவாக்கவும் கிடைத்த வாய்ப்பு அவரை ஈர்த்தது. “அப்போது தொடங்கும் நட்புகள் பல ஆண்டுகள் நீடிக்கும்,” என்கிறார் அவர்.

ஸ்பெயினின் பிற்பகல் சிற்றுறக்கத்தை அனுபவித்துவிட்டு, மாலை நேரத்தில் மீண்டும் கடற்கரைக்குச் செல்கிறேன். பார்சிலோனெட்டா கடற்கரையை ஒட்டிய நடைபாதையில் பனைமரங்கள் நிற்கின்றன. சிலர் கடற்கரையில் காட்சியை ரசிக்கின்றனர்; மற்றவர்கள் கைப்பந்து அல்லது தன்னிச்சையான கால்பந்து ஆட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

ஸ்பெயினில் காளைச் சண்டை சட்டரீதியாகப் பாதுகாக்கப்படும் கலாசார பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக உள்ளது; ஆனால் அதற்கு எதிரான எதிர்ப்பும் அதிகரித்து வருகிறது. பார்சிலோனாவில் கடைசி காளைச் சண்டை 2011-ல் நடைபெற்றது. மாநாடு நடைபெறும் இடத்திலிருந்து சில மெட்ரோ நிறுத்தங்களிலேயே உள்ள லாஸ் அரெனாஸ் டெ பார்சிலோனாவுக்குச் சென்று அந்த வரலாற்றின் ஒரு பகுதியை அறியலாம்.

1900-ல் திறக்கப்பட்ட இந்த அரங்கில் 1977-ல் கடைசி போட்டி நடைபெற்றது. பின்னர் பல ஆண்டுகள் பயன்பாடின்றி இருந்த அது புதுப்பிக்கப்பட்டு வணிக வளாகமாக மாற்றப்பட்டது. இன்று இங்கு கடைகள், திரையரங்கம், உணவு மற்றும் பானங்களை ரசிக்கும் இடங்கள் உள்ளன.

“இப்போது காளைச் சண்டை அரங்கையும் காளைகளையும் நாம் விரும்பாமல் இருக்கலாம். ஆனால் அது நமது கலாசாரமும் வரலாறும்,” என்கிறார் பார்சிலோனா ரோட்டரி சங்க உறுப்பினரும், புதுப்பிப்புப் பணியில் ஈடுபட்ட கட்டிடக் கலைஞருமான லையா மரீன்.


ஜூன் மாத ரோட்டரி மாநாட்டில் பிற பாரம்பரியங்களையும் அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக மரீன் கூறுகிறார். “மிகவும் கலாசாரச் சிறப்புமிக்க மாநாட்டைத் திட்டமிட்டு வருகிறோம். ரோட்டரியர்கள் இங்கு வரும்போது கட்டலோனிய கலாசாரத்தை எளிதாக அனுபவிக்க முடியும்,” என்கிறார்.

2013-ல் ரோட்டரி சங்கத்தில் இணைந்த மரீன், அதற்கு முன்பு ரோட்டராக்டராக இருந்தார். 2019-ல் ஜெர்மனியின் ஹாம்பர்க்கில் நடைபெற்ற தனது முதல் ரோட்டரி மாநாட்டில் பங்கேற்றார். தன் சங்கத்தைத் தாண்டி ரோட்டரியில் நடைபெறும் செயல்பாடுகளை அறிந்துகொண்டது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. “சர்வதேச மாநாட்டில் இருக்கும்போது, எது சிறப்பாகச் செயல்படுகிறது என்பதைப் பார்க்க முடியும்,” என்கிறார்.

மரீன் என்னை அரங்கின் கூரைத்தளத்திற்கு அழைத்துச் செல்கிறார். அங்கிருந்து நகரின் பரந்த காட்சியைக் காணலாம். வருகை தரும் ரோட்டரியர்களை

*20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நவீனத்துவக் கட்டிடக் கலை இயக்கமான ‘மொடர்னிஸ்மே’-வின் மையமாகத் திகழ்ந்த பசெய்ஜ் டி கிராசியா.*







*சாக்ரடா ஃபமிலியா பேராலயம்.*







ஆர்க் டி ட்ரையம்ப் அருகே காணப்படும் துறவி கிளிகள்.



பார்க் குவெல்லில் கௌடியால் வடிவமைக்கப்பட்ட கட்டிடம்; தற்போது பூங்காவின் நினைவுப் பொருள் விற்பனைக் கடையாக உள்ளது.

இரவு உணவிற்கு அழைத்துவர இது தமக்குப் பிடித்த இடம் என்கிறார். "இங்கிருந்து சூரிய அஸ்தமனத்தையும், மொன்ட்ஜுயிக்கையும் பார்க்கலாம்," என்கிறார்.

அடுத்ததாக நாங்கள் செல்ல விருப்பது மொன்ட்ஜுயிக்-'யூதர்களின் மலை' என்று பொருள்படும் பெயர். இடைக்காலத்தில் இந்த மலையில் யூதர்களின் கல்லறை இருந்ததால் இப்பெயர் ஏற்பட்டது. 1929 சர்வதேசக் கண்காட்சிக்காக உருவாக்கப்பட்டு, பின்னர் 1992 ஒலிம்பிக் போட்டி களுக்காகப் புதுப்பிக்கப்பட்ட பிரம்மாண்டமான மரங்கள் நிறைந்த நகர்ப்புறப் பூங்காவும் இங்கு உள்ளது. இன்று அதன் பாதைகளில் விளையாட்டு அரங்குகள், அருங்காட்சியகங்கள், தோட்டங்கள், மொன்ட்ஜுயிக் கோட்டை ஆகிய வற்றைக் காணலாம்.

லாஸ் அரெனாஸிலிருந்து பிளாசா எஸ்பான்யாவைக் கடந்து, நீரூற்றுகள் அமைந்துள்ள தெருவில் நடந்து ஃபோன்ட் மாஜிகா டெ மொன்ட்ஜுயிக்கை அடைகிறோம். இது மிகப்பெரிய 'மாய நீரூற்று'; குறிப்பிட்ட மாலை நேரங்களில் ஒளிக் காட்சிகளை இங்கு காணலாம். பகலில்கூட நீர்த்திவலைகளும் நிழல் தரும் மரங்களும் கோடைக்கால வெயிலிலிருந்து ஓய்வை அளிக்கின்றன.

நகரும் படிக்கட்டில் ஏறி, கட்டலோனிய தேசியக் கலை அருங் காட்சியகத்தின் மாடித்தளத்தை அடைகிறோம். 1929 கண்காட்சிக்காகக் கட்டப்பட்ட தேசிய அரண்மனையாக இருந்த இந்தக் கட்டிடத்தின் முன் புறத்திலிருந்து நகரின் பரந்த காட்சியை ரசிக்கலாம்.

இங்குதான் கவுடியின் சாக்ரடா ஃபமிலியா எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை உணர்கிறேன். கீழே விரிந்திருக்கும் கட்டிடங்களின் நடுவிலிருந்து அது வேறொரு உலகத்தைச் சேர்ந்ததுபோல் உயர்ந்து நிற்கிறது. இந்த தேவாலயம் மொன்ட்ஜுயிக்கைவிடச் சற்றுக்குறைவான உயரத்தில் இருக்குமாறு வடிவமைக்கப்பட்டது; பார்சிலோனாவில் உள்ள வேறு எந்தக் கட்டிடமும் இதைவிட உயரமானதல்ல.

பூங்கா வழியாகத் தொடர்ந்து நடந்து, பார்சிலோனா ஒலிம்பிக் போட்டிகளுக்காக அமைக்கப்பட்ட நீச்சல் குதிப்பு குளங்களை அடைகிறோம். அப்போது பின்னணியில் நகரக் காட்சியுடன் இங்கிருந்து குதிக்கும் ஒலிம்பிக் வீரர்களின் புகைப்படங்கள் ஏராளமாக வெளியானது. இன்று இந்த இடம் திறந்தவெளி உணவகமாக மாற்றப் பட்டுள்ளது. எங்கள் மேசையிலிருந்து நகரின் மேலும் பல கண்கவர் காட்சிகளை ரசிக்கிறோம்.

எனக்கு கோத்திக் காலாண்டைச் சுற்றிக் காட்டிய ஆல்பர்ட் டோராஸ், தான் ஏற்பாடு செய்ய உதவிய புகைப் படக் கண்காட்சியின் தொடக்கத்திற்குத் தயாராக எங்களுடன் இணைகிறார். மற்றொரு ஸ்பானிய பாரம்பரியமான 'லா ஓரா டெல் வெர்முத்', அதாவது உணவுக்கு முன் நடைபெறும் 'வெர்முத் நேரத்தை' அனுபவிக்கிறோம்.

வெர்முத் என்பது வலுவூட்டப்பட்ட மதுபானம். எனக்கு அது பெரும்பாலும் கலப்புப் பானத்தில் சேர்க்கப்படும் ஒன்றாகத்தான் தெரியும். ஆனால் ஸ்பெயினில் அது தனிப்பானமாகவும் பரிமாறப்படுகிறது-பனிக்கட்டிகளுடன், வெள்ளையாகவோ சிவப்பாகவோ-உணவுக்கு முன் சிறு தின்பண்டங்களுடன். “மதிய உணவுக்கு முன், இரவு உணவுக்கு முன், அல்லது நீங்கள் விழித்தெழுந்ததும்,” என்று நகைச்சுவையாகச் சொல்கிறார் டோராஸ். “எப்போது வேண்டுமானாலும்.”

என் விடுதிக்குத் திரும்பி சிறிது ஓய்வெடுத்த பிறகு, முந்தைய நாள் எனக்கு அறிமுகமான ரோட்டராக்ட் நண்பர் அலெக்ஸ் மார்ட்டோரெலை மீண்டும் சந்திக்கிறேன். இம்முறை நாங்கள் கவுடி வடிவமைத்த பொதுப் பூங்காவான பார்க் குவெல்லுக்குச் செல்கிறோம். அங்கிருந்து நகரின் மேலும் பல பரந்த காட்சிகளைக் காணலாம்.

கவுடியின் நீண்டகால ஆதரவாளரான யூசேபி குவெல், செல்வந்தக் குடும்பங்களுக்கான குடியிருப்புப் பகுதியை வடிவமைக்க அவரை நியமித்தார். ஆனால் திட்டம் நடைமுறைக்கு ஏற்றதாக அமையவில்லை; திட்டமிடப்பட்ட 60 வீடுகளில் இரண்டு மட்டுமே கட்டப்பட்டன. கவுடி தனது தந்தையுடனும் மருமகளுடனும் மாதிரி வீட்டில் வசித்தார். குவெல் இறந்த பிறகு, நகர நிர்வாகம் இந்தப் பூங்காவை வாங்கியது.

இன்று எஞ்சியிருப்பவை டிஸ்னி திரைப்படத்திலிருந்து வந்தவை போலத் தோன்றுகின்றன. பூங்காவின் அதிகம் புகைப்படம் எடுக்கப்படும் அடையாளம் ‘எல் ட்ராக்’ எனப்படும் மொசைக் அலங்காரப் பல்லி. கட்டலோனிய மொழியில் அதற்கு ‘டிராகன்’ என்று பொருள். பிரதான நுழைவாயிலில் உள்ள இரட்டை படிக்கட்டின் நடுப்பகுதியில் அது அமைந்துள்ளது.

ஆனால் எனக்கு மிகவும் பிடித்தது மேலே உள்ள மாடித் தளத்தில் காணப்படும் கடற்பாம்பு வடிவிலான வண்ணமயமான மொசைக் இருக்கை. உடைந்த பீங்கான் அல்லது கண்ணாடித் துண்டுகளால் உருவாக்கப்படும் ‘ட்ரென்கடிஸ்’ எனப்படும் இந்த மொசைக் பாணியை கவுடி பிரபலப்படுத்தினார். இதுவே 2027 ரோட்டரி மாநாட்டின் சின்னத்திற்கும் ஊக்கமளித்துள்ளது.

ஒவ்வொரு திருப்பத்திலும் ஆச்சரியத்துடன் பார்க்கிறேன்-தேவதைக் கதையைப் போன்ற கல் பாலங்கள், இனிப்புலகில் இருப்பதுபோல் தோன்றும் வீடுகள்! பார்சிலோனா மக்கள் கவுடியைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று மார்ட்டோரெலிடம் கேட்கிறேன். அவரது பெயரால் அறியப்படுவதில் அவர்கள் சலித்துவிட்டார்களா? கலை நகரத்தின் அடையாளத்தின் வரவேற்கத்தக்க பகுதியாக இருப்பதாக அவர் உறுதியளிக்கிறார். “மக்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள்,” என்கிறார்.

மாலை இருள் இறங்கத் தொடங்குகிறது. நகரக் காட்சியையும் இரவில் ஒளிரும் டோர்ரே குளோரியஸ் கட்டிடத்தையும் சூரிய அஸ்தமன நேரத்தில் புகைப்படம் எடுக்க வேண்டும் என்ற நோக்கில் டோப்பே கூரைத்தள மதுபானக் கூடத்திற்குச் செல்கிறோம். இசை முழங்குகிறது; விளக்குகளின் வரிசை மேசைகளை ஒளிரச் செய்கிறது.

பார்சிலோனாவில் கழிந்த இன்னொரு நாளுக்காகவும், அற்புதமும் கற்பனையும் நிறைந்த இந்த நகருக்காகவும் நாம் கோப்பைகளை உயர்த்தி வாழ்த்த வேண்டிய நேரம் இது.



*இரவு நேரத்தில் ஒளிரும் மொன்ட்ஜுயிக் மாய நீரூற்று.*

புகைப்படங்கள்: மோனிகா லோஜின்ஸ்கா

## பெண்களுக்கு வாழ்வாதாரப் பயணம்

பெங்களூரு ஊரக மாவட்டத்தைச் சேர்ந்த பின்தங்கிய குடும்பங்களின் நான்கு பெண்களுக்கு, RC பெங்களூரு லேக்சைட், RID 3191 மற்றும் ITC ஃபில்ட்ரோனா செயல்படுத்திய விமென்-ஆன்-வீல்ஸ் (WoW) CSR திட்டத்தின் கீழ் மின் ஆட்டோக்கள் வழங்கப்பட்டன. ரூ.16 லட்சத் திட்டம், நிலையான வாழ்வாதாரம் மூலம் பெண்களின் நிதிச் சுயநிலையை வலுப்படுத்தும்.



*பெண்களிடம் ஆட்டோக்களை ஒப்படைக்கும் ரோட்டேரியன்களும் ITC ஃபில்ட்ரோனா குழுவினரும்.*

## நடமாடும் பல் சிகிச்சை மருத்துவமனை

RC அகர்தலா சிட்டி, RID 3240, தனது முதல் உலகளாவிய மானியமான நடமாடும் பல் மருத்துவமனையை அகர்தலா ராமகிருஷ்ண மிஷனிடம் ஒப்படைத்தது. நேபாள RC பிராட்நகர் டௌன்டவுன், RID 3292, சர்வதேச கூட்டாளியாக இருந்தது. மகாராஜா பீர் பிக்ரம் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட முதல் முகாமில் 65 பேருக்கு இலவச பல் பரிசோதனை அளிக்கப்பட்டது.



*நடமாடும் பல் மருத்துவமனையை மருத்துவமனை நிர்வாகத்திடம் ஒப்படைக்கும் சங்க உறுப்பினர்கள்.*

## பள்ளிக்குப் புதுப்பொலிவு

RC கல்கத்தா கான்குர்காச்சி, RID 3291, ரோட்டரி சங்கம் கல்கத்தா கான்குர்காச்சி வெல்ஃபேர் டிரஸ்ட் மூலம், பாங்குராவில் உள்ள விவேகானந்தா ரோட்டரி சிஷு சிக்ஷாநிகேதன் பள்ளியில் ஞானாலோக் அகாமி (அறிவின் ஒளி) திட்டத்தின் முதல் கட்டத்தை நிறைவு செய்தது. புதுப்பிக்கப்பட்ட வகுப்பறைகள், விளையாட்டு உபகரணங்கள், வளாக அழகுபடுத்தல் செய்யப்பட்டன.



*பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட ஊஞ்சலின் முன் சங்க உறுப்பினர்கள்.*

## பார்வைக் குறைபாடுடையோருக்குத் தொழில்பயிற்சி

RC புணே ஹெரிடேஜ், RID 3131, சம்ருத்தி டெவலப்மென்ட் டிரஸ்ட் உடன் இணைந்து, 15 நாள் பயிற்சியில் 35 பார்வையற்றோருக்கு தொழில்முறை சிகிச்சை மசாஜ் திறன்களை கற்பித்து, ஒவ்வொருவருக்கும் தொடக்கக் கருவித்தொகுப்பு வழங்கியது. இம்முயற்சிக்கான மொத்தச் செலவு ரூ.1.5 லட்சம்.



*நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக ஒரு பயிற்சி அமர்வு.*

நிலைத்திருக்கும் கட்டுமானங்கள்: மும்பையில் ரோட்டரிக்கு 97 ஆண்டுகள்; பிரத்யேக ரோட்டரி மருத்துவமனைகள் பூஜ்யம்.

ரோட்டரி அறக்கட்டளை: 35 மில்லியன் டாலர் மாவட்டத் திட்டங்களில் 10.5 மில்லியன் டாலர்.

CSR இந்தியா: 16 மில்லியன் டாலர், மேலும் 6 மில்லியன் டாலர் ரொக்கம்.

நான்கு மருத்துவமனைகள்: சுமார் 4 மில்லியன் டாலர்; ரூ.36-37 கோடி.

30 புதிய நிறுவனக் கூட்டாளிகள்; முன்பு ரோட்டரியுடன் இல்லாதவர்கள்.

21,000 டாலர் CSR இந்தியா மானியம்; பங்கேற்பு 14-15 சங்கங்களிலிருந்து உயர்ந்தது.

RC பாம்பே: விஜய் ஜாட்டியா மகன்களால் 1.61 மில்லியன் டாலர்.

RC பாம்பே வொர்லி தைசூன் கோரகிவாலா: 200,000 டாலர்.

ஆர்ச் கிளம்ப் சொசைட்டி: 18-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள்.

RC பாம்பே பியர் சுஹித் ஜவேரி: 35 CSR இந்தியா, இரண்டு உலகளாவிய மானியங்கள்.

RY 2025-26: TRF முதல் 30 உலக முதலிடம்.

# RID 3141, 3000 இந்தியாவை உச்சத்துக்குக் கொண்டு சென்றன

நம்ரதா ஸ்ரீவாஸ்தவ்

**மோட்வானி தலைமையிலான RID 3141 உலகுக்கு ஒளியேற்றியது**

IPDG மணிஷ் மோட்வானி தலைமையிலான RID 3141, 45 மில்லியன் டாலர் TRF பங்களிப்புடன் இந்தியா உலகளவில் இரண்டாம் இடம் பெற உதவியது. இந்திய ரோட்டரி பெருமையுடன் நினைவுகூரும் ஆண்டாக இது அமைந்தது. மாவட்டம் நான்கு பிரத்யேக ரோட்டரி மருத்துவமனைகளைக் கட்டியது; TRF வழியாக 10.5 மில்லியன் டாலரைச் செலுத்தி, உலகின் அதிக TRF நன்கொடை வழங்கிய முதல் 30 மாவட்டங்களில் முதலிடம் பெற்றது.

RC பாம்பே பியர் தலைவர் நூபூர் தேசாய், குஷல் தேசாய், சுனில் மேஹ்ரா ஆகியோரின் ஆதரவால் இரண்டு மருத்துவமனைகள், இதய நோய் மற்றும் நோயறிதல் ஆய்வகங்கள் உருவாயின. சுஹித் ஜவேரி, 35 CSR இந்தியா மானியங்களையும் இரண்டு உலகளாவிய மானியங்களையும் செயல்படுத்தி, ஒரே மனித இயந்திரம்போல் இயங்கியதாக மோட்வானி கூறுகிறார்.

RC பாம்பேவைச் சேர்ந்த PDG சந்தீப் அகர்வாலா, விஜய் ஜாட்டியா ஆகியோர், தலைவர் பிமல் மேத்தா தலைமையில் பங்களித்தனர். ஜாட்டியாவும் அவரது மகன்களும் AKS உறுப்பினர்களாக 1.61 மில்லியன் டாலரைக் கடந்தனர்.

இந்தச் சாதனை, சங்கங்களை தங்கள் சௌகரிய வட்டத்திலிருந்து வெளியே வரச் சம்மதிக்க வைத்ததன் மூலம் சாத்தியமானது என்கிறார் மோட்வானி. முன்னதாக வெறும் 14 அல்லது 15 சங்கங்களே CSR இந்தியா மானியத்தைத் தொட்டிருந்தன. இளஞ்சிவப்பு ஆட்டோக்கள், தொழிற்பயிற்சி மையங்கள், பள்ளிப் புதுப்பித்தல், கோசாலைகள் போன்ற மாதிரித் திட்டங்கள் மூலம்



சங்கங்கள் அதிக இலக்குகளை நோக்கி ஊக்குவிக்கப்பட்டன. "சொந்தப் பணத்தைச் செலவிட வேண்டிய தில்லை; நன்கொடை கேட்கும் ஆர்வம் இருந்தால் போதும்," என்றார்.

திட்டமிடலைவிட, தனது நிலையான ஆலோசகரான மனைவி டாக்டர் மஹேக் மோட்வானிதான் தன்னை முன்னெடுத்ததாகச் சொல்கிறார். முதன்முறையாக நன்கொடை இலக்கைக் கடந்தவர்கள், காஷ்மிரா கனத்ரா தலைமையிலான தாய்ச் சங்கம் RC முலுண்ட் ஹில் வியூ இரண்டு மானியங்களை நிறைவு செய்தது போன்ற தருணங்கள் அவருக்கு முக்கியமானவை.

CSR இந்தியா மானியங்கள் 16 மில்லியன் டாலரையும், கூடுதலாக 6 மில்லியன் டாலர் ரொக்கத்தையும் ஈர்த்தன. RC பாம்பே வொர்லியைச் சேர்ந்த தைசூன் கோரகிவாலா அளித்த ஒரு வேண்டுகோள் மட்டும் 200,000 டாலரைப் பெற்றது. இரண்டு இதய மருத்துவமனைகள், புற்றுநோய் மருத்துவமனை, கண் மருத்துவமனை என நான்கு முதன்மைத் திட்டங்கள் ஏறத்தாழ 4 மில்லியன் டாலர் திரட்டின.

RI இயக்குநர் K P நாகேஷ், TRF அறங்காவலர் பரத் பாண்டியா, K K சௌத்ரி, கிஷோர் பரேக், சௌரப் சோனாவாலா, கன்டேர்ப், தீபக் சௌத்ரி, ரவி ஜஸ்வானி, பகவான் பாட்டீல், மோனிகா குரோவர் ஆகியோர் தன் வழிகாட்டும் அணியென மோட்வானி கூறுகிறார்.

பிமல் மேத்தா தலைமையிலான RC பாம்பே உயிரோட்டமுள்ள இயந்திரமாக இருந்தது. நிகுஞ்ச் ஜவேரி தளவாடங்களை நகர்த்தினார்; யோகேஷ் ஜவேரி உறுதிமொழி நன்கொடைகள் தொடர்ந்து வரச் செய்தார். மீனா சௌத்ரி விவரங்களை ஒருங்கிணைத்தார்; தெஹ்மினா, கன்டேர்ப் கந்த்வாலா தளத்தில் பணியாற்றினர். பினா, பரேஷ் தத்தானி, பரத், நீலிமா ஜுன்ஜுன்வாலா, ஸ்மிதா பரேக் ஆகியோர் நன்கொடை அளித்ததோடு நிற்காமல், உறுதிமொழிகளை நிரந்தர மருத்துவமனைகளாக மாற்றினர்.

மும்பை முழுவதும் மற்ற சங்கங்களும் இந்த அலைக்குள் இணைந்தன: டாக்டர் பவுலா கோயல் தலைமையிலான RC பாம்பே வொர்லி, சோனாலி ஷா தலைமையிலான RC பாம்பே பேவியூ, உர்வி மோடி, வித்யா மூர்ஜானி, தீபிகா சர்தா தலைமை யிலான RC மும்பை ராயல்ஸ், அபூர்வா ஷா தலைமையிலான RC குயின்ஸ் நெக்லஸ்; CSR மானியங் களை ஆதரித்த RC பாம்பே குயின் சிட்டியின் சோனல் அகர்வால், RC பாம்பே சென்ட்ரல் மூலம் மிகப்பெரிய பங்களிப்பளித்த ஃபேன்னி மற்றும் ஆஷித் மேத்தா.

ஆஸ்தா பேரியாட்ரிக்ஸில் உடல் எடைக் குறைப்பு அறுவை சிகிச்சை நிபுணராகப் பணியாற்றும் மோட்வானி, "அறுவைச் சிகிச்சை அறையின் ஒழுக்கத்தை ரோட்டரி உட்பட அனைத்திலும் பயன்படுத்துகிறேன்," என்கிறார்.



இடமிருந்து ஏழாவதாக IPDG மணீஷ் மோட்வானி; அவரது இடப்புறத்தில் PRIP ஃபிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, RID 3141-ஐச் சேர்ந்த ரோட்டரியன்களுடன்.

### கார்த்திக் தலைமையிலான RID 3000, உறுப்பினர் வளர்ச்சியில் உலகின் முதலிடம்

ஒரே ரோட்டரி ஆண்டில் 47 புதிய ரோட்டரி சங்கங்கள், 53 ரோட்ராக்ட் சங்கங்கள், 232 இன்டராக்ட் சங்கங்கள், 1,800-க்கும் மேற்பட்ட ரோட்டேரியன்களின் நிகர வளர்ச்சி, 5,000-க்கும் அதிகமான ரோட்ராக்டர்கள் - இச்சாதனைகளால் DG J கார்த்திக் தலைமையிலான RID 3000, 2025–26-ல் உறுப்பினர் வளர்ச்சிக்கான உலகின் முதலிட மாவட்டமாக அறிவிக்கப்பட்டது.

**RID 3000: உறுப்பினர் வளர்ச்சியில் உலக முதலிடம்**

47 புதிய ரோட்டரி சங்கங்கள்; 1,800+ நிகர ரோட்டேரியன்கள்; 53 ரோட்ராக்ட் சங்கங்கள்; 5,000+ ரோட்ராக்டர்கள்; 232 புதிய இன்டராக்ட் சங்கங்கள்; 200+ பெண் ரோட்டேரியன்கள்; ரூ.85 கோடி திட்டங்கள்.
பெரிய பட்டயங்கள்: திருச்சிராப்பள்ளி சக்சஸ் 415; புதுக்கோட்டை பேரரசு 471.

மூன்றாம் தலைமுறை ரோட்டேரி யனான கார்த்திக், RC சென்னை ஐகான்ஸ் பற்றிய ரோட்டரி நியூஸ் கட்டுரையிலிருந்து முதல் ஊக்கம் கிடைத்ததாகக் கூறுகிறார். 225 உறுப் பினர்களுடன் பட்டயம் பெற்ற அந்தச் சங்கத்தின் எண்ணத்தை Rtn விஜயாலயனுடன் பகிர்ந்தார். இருவரும் அதைவிட உயர்ந்த இலக்கை நிர்ணயித்து, 415 உறுப்பினர்களுடன் RC திருச்சிராப்பள்ளி சக்சஸை பட்டயம் பெற்றனர். "சாத்தியமானது குறித்த வழக்கமான எண்ணத்துக்கு அது சவால் விட்டது," என்கிறார்.

1:2:3 என்ற அணுகுமுறையை - ஒவ்வொரு சங்கமும் ஒரு புதிய சங்கம், இரண்டு ரோட்ராக்ட் சங்கங்கள், மூன்று இன்டராக்ட் சங்கங்கள் – கட்டாயமாக விதிக்கவில்லை. 50 அல்லது 100 புதிய சங்கங்கள் என்ற இலக்கு பெரிதாகத் தோன்றலாம். ஆனால் ஒவ்வொரு சங்கமும் ஒன்று அல்லது இரண்டு புதிய சங்கங்களை ஆதரித்தால் இலக்கு அடையக்கூடியதாகிறது, என்கிறார் கார்த்திக்.

இந்த அணுகுமுறை வேகத்தை இழந்த சங்கங்களுக்கும் உதவியது. RC திருச்சி டைனமிக்கில் 24 உறுப்பினர்கள் இருந்தனர்; பின்னர் 12

செயலில் உள்ள உறுப்பினர்களாகக் குறைந்தனர். அந்த 12 பேரே ஒரு புதிய சங்கத்தை ஆதரித்தனர். “மாற்றம் அவர்களின் மனநிலையில் வந்தது. சங்கம் உறுப்பினர்களைச் சேர்க்கும்போது அல்ல; வழிநடத்தும் நம்பிக்கையை மீண்டும் பெறும்போது செழிக்கத் தொடங்குகிறது,” என்றார்.

புதிய சூத்திரம் ஒன்றை உருவாக்கவில்லை. PRIP சேகர் மேத்தாவின் “ஒவ்வொருவரும் ஒருவரை அழையுங்கள்” என்ற திஷா யோசனையே உறுப்பினர் வளர்ச்சி அணுகுமுறையின் மையமாக இருந்தது. RI இயக்குநர்கள் K P நாகேஷ், M முருகானந்தம் வழிகாட்டுதலில், மாவட்டக் கற்றல் ஒருங்கிணைப்பாளர் PDG P கோபாலகிருஷ்ணன், உறுப்பினர் தலைவர் சண்முகவேல், அவரது குழு, பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள், உதவி ஆளுநர்கள் ஆகியோர் உத்தியை வடிவமைத்தனர்.

ஒருவரால் முழுப் பொறுப்பையும் சுமக்க வேண்டியதில்லை என்பதால் இவ்வளவு பெரிய வளர்ச்சி சாத்தியமானது என்கிறார் கார்த்திக். ‘DREAM Dozen+’, ‘RAG பகுப்பாய்வு’, ‘ஒரு AG – ஒரு புதிய சங்கம் - 25 புதிய உறுப்பினர்கள்’ போன்ற முயற்சிகள் இலக்குகளைத் தெளிவான செயல்பாடுகளாக மாற்றின. பெண் உறுப்பினர் எண்ணிக்கை 200-க்கும் மேல் உயர்ந்தது. முருகராஜ் தலைமையில் RC புதுக்கோட்டை பேரரசு 471 உறுப்பினர்களுடன் பட்டயம் பெற்றது.

ஆனால் உறுப்பினர்களைத் தக்கவைப்பதே பெரிய சவால் என்கிறார் கார்த்திக். “மக்களை ரோட்டரிக்கு அழைப்பதுடன் பொறுப்பு முடிவதில்லை; தொடர்ந்து ஈடுபடுவதற்கான காரணங்களையும் வழங்க வேண்டும்.” மாவட்டம் ரூ.85 கோடி மதிப்பிலான திட்டங்களைச் செய்தது; ‘பிசினஸ் RYLA’, பல அறிமுகப் பயிற்சிகளையும் நடத்தியது.

தனக்குப் பின் வருபவருக்கு அவர் தரும் செய்தி எளிமையானது: “அடுத்தவர் போட்டியிட வேண்டிய ஒன்றை அல்ல; அடுத்தவர் மேலும் கட்டியெழுப்ப விரும்பும் ஒன்றை உருவாக்குங்கள்.”



*RC புதுக்கோட்டை பேரரசு தொடங்கப்பட்ட நிகழ்வில், இடமிருந்து மூன்றாவதாக IPDG J கார்த்திக்.*

கட்டுரையாளர், RID 3142-ன் RC ஹிரானந்தனி எஸ்டேட்டின் முன்னாள் தலைவர்.

**2027 மாநாடு**

# எதற்கும் இணையானதல்ல

ரோட்டரி சர்வதேச மாநாடு, நீங்கள் அனுபவித்த எதையும் போல இருக்காது. ஒரே மேடையில் கிராமி விருது பெற்ற பாடகர்களையும் நோபல் பரிசு வென்றவர்களையும் வேறெங்கே காண முடியும்? ஜூன் 26-30-ல் ஸ்பெயினின் பார்சிலோனாவில் நடைபெறும் மாநாட்டில், சிறப்பான நிகழ்ச்சிகளுடன் உலகம் முழுவதிலுமுள்ள செயல்வீரர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

இந்த ஆண்டு தைபேவில் முதன்முறையாகப் பங்கேற்ற விநய் காந்தி பில்லாபட்டி, “நீங்கள் உருவாக்கும் நட்புகள், கண்டறியும் யோசனைகள், பெறும் ஊக்கம் வாழ்நாள் முழுவதும் உங்களுடன் இருக்கும்,” என்கிறார்.

பெரும் வரவேற்பு: வந்த தருணத்திலிருந்தே தன்னார்வலர்கள் அன்புடன் வரவேற்று வழிகாட்டினர்; அவர்களின் விருந்தோம்பல் மறக்கமுடியாதது.

ஊக்கம்: சிறப்பு அமர்வுகள், பொதுக் கூட்டங்கள், நட்புறவு இல்லம், ரோட்டரி அமைதி பூங்கா, ரோட்டரி செயல் குழுக் காட்சிகள் கற்றல், தொடர்பு, ஊக்கத்திற்கான வாய்ப்புகளை அளித்தன.



ரோட்டரி VIPக்கள்: 2024–25 ரோட்டரி தலைவர் ஸ்டெஃபனி அர்ச்சிக்குடன் புகைப்படம் எடுத்த கனவு நனவானது.

தொடர்பு: கொடிகள் அணிவகுப்புடனான தொடக்க விழா ரோட்டரியின் உலகளாவிய உணர்வைப் பிரதிபலித்தது. ரோட்டரி உறுப்பினர்கள் அன்புடன் சந்தித்தனர்; ரோட்டரியே அனைவரையும் இணைத்த பொதுமொழி.


புதிய பார்வை: சேவை, நட்பால் இணைந்த உலகளாவிய குடும்பமே ரோட்டரி என்ற நம்பிக்கையை மாநாடு வலுப்படுத்தியது. அடுத்த மாநாட்டை எதிர்நோக்குகிறேன். இந்த அனுபவம் அனைவரின் மனதிலும் புதிய நீங்கா நினைவுகளைச் சேர்த்தது.


2027 பார்சிலோனா ரோட்டரி சர்வதேச மாநாட்டிற்கான பதிவு செப்டம்பர் 17 முதல் தொடங்கும். விவரங்களுக்கு *convention.rotary.org*-ஐப் பாருங்கள்.

ADVT.

# Purposeful Living and Thoughtful Retirement

## 2 Award-Winning Books for Life After 55 — from a Rotarian, Since 1990 (RI Dist 3131)




**THE TWO BOOK COMBO:** How to Live Life? SBOP Living and Golden Retirement offer a complete perspective on life after 55 — guiding you to **Retire, Rewire, and Refire** with Purpose, Balance, and Fulfillment with **DGL (Doing Good in Life)** at the heart of your life.


**Special Rotary Offer:** Get **15%** off on the already discounted price of **₹ 945** by entering Discount Code **ROTARY**.
(Offer Valid until December15, 2026 on all book combos)
Order your copies online at: **www.drsanjayrunwal.com** or Scan the QR code for direct access.

SANJAY RUNWAL FOUNDATION
Supporting Humanity

Contact us at: **Sanjay Runwal Foundation**, 1st Floor, Shantiprasad Apartment, Above Punarvasu Chikitsalay, Model Colony Road, Pune - 411 016. email: sanjayrunwalfoundation@gmail.com

# தி ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர்கள் 2026–27

*தி ரோட்டரி ஃபவுண்டேஷனின் அறங்காவலர்கள், ரோட்டரியின் தொண்டு அமைப்பான ஃபவுண்டேஷனின் நிர்வாகத்தை கவனிக்கின்றனர். ரோட்டரி சர்வதேசத் தலைவர்-தேர்வாளர் இவர்களை நியமிக்கிறார்; ரோட்டரி சர்வதேச வாரியம் நான்கு ஆண்டு பதவிக்கு தேர்ந்தெடுக்கிறது. நான்கு புதிய அறங்காவலர்கள் ஜூலை 1 முதல் பொறுப்பேற்கின்றனர்.*



**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
*தலைவர்* 2026–27
*அறங்காவலர்* 2023–27
RC *விண்ட்சர்-ரோஸ்லேண்ட், ஒன்டாரியோ*

2022–23ல் RI தலைவராகப் பணியாற்றிய ஜெனிஃபர் ஜோன்ஸ், ரோட்டரி தொடங்கிய 117 ஆண்டுகளில் அந்தப் பதவியை வகித்த முதல் பெண். ஒன்டாரியோவின் விண்ட்சரில் விருது பெற்ற ஊடக நிறுவனமான மீடியா ஸ்ட்ரீட் புரொடக்ஷன்ஸை நிறுவியவர்.

உலகத் தலைவர்கள், பிரபலங்களுடன் இணைந்து நோய் ஒழிப்பு, கல்வி மேம்பாடு, அமைதி, தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரத்துக்காக பெருமளவில் நிதி திரட்டியுள்ளார். தலைவராக இருந்தபோது 'இமேஜின் இம்பாக்ட் டூர்' மூலம் உலகின் நீடித்த, பெரிய அளவிலான ரோட்டரி திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்றார்; அதன் தகவல்கள் 130 கோடிக்கும் அதிகமான மக்களைச் சென்றடைந்தன.

ஜாக் நிக்கலாஸுடன் நடத்திய கோல்ஃப் நிகழ்ச்சி மூலம் ஒரே நாளில் போலியோ ஒழிப்புக்காக 52.5 லட்சம் டாலருக்கும் மேல் திரட்டினார். ஜெனிபர், RI-யின் Service Above Self விருது, TRF-ன் Citation for Meritorious Service மற்றும் Sylvia Whitlock Leadership Award ஆகியவற்றைப் பெற்றுள்ளார். இவர் வின்ட்சர் பல்கலைக்கழகம் மற்றும் குயின்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து சட்டத் துறையில் முனைவர் பட்டங்களைப் பெற்றுள்ளார்.


கணவர் நிக் கிரயாசிச்சுடன் பயணம், மிதிவண்டி ஓட்டுதல், கோல்ஃப் ஆகியவற்றை விரும்புகிறார்.



**கோர்டன் R மெக்கினல்லி**
TRF *தலைவர்-தேர்வாளர்* 2026–27
*அறங்காவலர்* 2024–28
RC *சவுத் க்வீன்ஸ்ஃபெர்ரி, ஸ்காட்லாந்து*

எடின்பரோ ராயல் உயர்நிலைப் பள்ளி, டண்டீ பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவம் பயின்ற மெக்கினல்லி, 2016 வரை எடின்பரோவில் சொந்த பல் மருத்துவ நிலையம் நடத்தினார். 1984ல், 26 வயதில் ரோட்டரியில் இணைந்தார். 2023-24ல் RI தலைவராகவும், ரோட்டரி கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தின் தலைவர், துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

RI இயக்குநராகவும், பல குழுக்களின் தலைவராகவும் இருந்துள்ளார். ருவாண்டாவில் 1994 இனப்படுகொலையில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உதவும் திட்டத்தை முன்னெடுத்தார். மனிதாபிமான உதவி வழங்கும் 'டிரேட்-எய்ட்' அமைப்பின் ஆதரவாளராகவும் உள்ளார். ரக்பி மற்றும் பாரம்பரிய ஸ்காட்லாந்து கைத்தடி தயாரிப்பை விரும்புகிறார். அவரது துணை ஹீதரும் ரோட்டரியில் சிறப்புப் பங்களிப்பாளராக உள்ளார்.



**விக்கி புலிஸ்**
*துணைத் தலைவர்* 2026–27
*அறங்காவலர்* 2025–29
RC *ஸ்பார்க்ஸ், நெவாடா*

உட்டா பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்தல் மற்றும் நிர்வாக மேலாண்மையில் பட்டங்கள் பெற்ற விக்கி புலிஸ், 1984ல் நெவாடா மின்சாரத் தொழில் நிறுவனத்தில் பங்குதாரரானார்; பின்னர் அதை விரிவுபடுத்தி பொதுப் பங்கு நிறுவனத்துடன் இணைத்தார்.

1992ல் ரோட்டரியில் இணைந்த அவர், RI இயக்குநர், பயிற்சி வழிகாட்டி உள்ளிட்ட பல பொறுப்புகளை வகித்துள்ளார். ரோட்டரி அமைதி மையங்கள் குழுவிலும் பணியாற்றுகிறார். கணவர் டிம்முடன் ரெனோவில் வசிக்கும் இவர்களுக்கு ஏழு குழந்தைகள், 12 பேரக்குழந்தைகள் மற்றும் மூன்று ரோட்டரி இளைஞர் பரிமாற்றப் பெண் குழந்தைகள் உள்ளனர்.

அவர்கள் சியரா நெவாடா மலைகளில் வெளிப்புறச் செயல்பாடுகளை விரும்பிச் செய்கிறார்கள். இருவரும் சர்வதேச பறக்கும் ரோட்டேரியன்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள். அவர்கள் AKS, Paul Harris Society, Bequest Society, மற்றும் PolioPlus Society ஆகியவற்றிலும் உறுப்பினர்களாக உள்ளனர்.



**ஃபிரான்செஸ்கோ அரெஸ்ஸோ**
*அறங்காவலர்* 2026–30
*RC ரகூசா, இத்தாலி*


ஃபிரான்செஸ்கோ அரெஸ்ஸோ பல் சீரமைப்பு மருத்துவரும், சிசிலியில் தூய ஆலிவ் எண்ணெய் தயாரிக்கும் விவசாய நிறுவனத்தின் உரிமையாளரும் ஆவார். படுவா மற்றும் காக்லியாரி பல்கலைக்கழகங்களில் பயின்ற அவர், இத்தாலி, ஐரோப்பா, அமெரிக்க பல் சீரமைப்பு மருத்துவச் சங்கங்களில் உறுப்பினராக உள்ளார்.

அவரது குடும்பம் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக ஆலிவ் எண்ணெய் தயாரித்து வருகிறது. மாண்டி

இப்லே (Monti Iblei) பகுதியில் தரமான உற்பத்தியைக் கண்காணிக்கும் நிர்வாகக் குழுவின் துணைத் தலைவராக அரெஸ்ஸோ இருந்தார்; அத்துடன் அங்கு இரண்டு பூட்டிக் (boutique) ஹோட்டல்களையும் அவர் சொந்தமாகக் கொண்டுள்ளார்.

1991ல் ரோட்டரியில் இணைந்த அரெஸ்ஸோ, 2025–26ல் RI தலைவராகப் பணியாற்றினார். மூலோபாயத் திட்டமிடல் குழுவின் துணைத் தலைவர், ரோட்டரி சர்வதேச இயக்குநர், பயிற்சி வழிகாட்டி உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார்.

சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, திக்குவாய் காரணமாக பொதுவில் பேசத் தயங்கினார். ஆனால் சவாலை ஏற்று பின்னர் மாவட்ட ஆளுநராகவும் பணியாற்றினார். அந்த அனுபவம் அவரது வாழ்க்கையில் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தியது. துணை அன்னா மரியா கிரிசியோனேவுடன் இரண்டு மகள்கள், இரண்டு பேரக்குழந்தைகள் உள்ளனர்.



**ஆன்-பிரிட் ஓசிபோல்**


*அறங்காவலர்* 2024–28

RC *ஃபலுன்-கொப்பர்வோகன், ஸ்வீடன்*

ஸ்வீடன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஆன்-பிரிட் ஓசிபோல், 2022ல் ஓய்வு பெற்றார். அதற்கு முன் டலார்னா மாவட்டத்தில் மண்டலக் கவுன்சிலராகப் பணியாற்றினார். அரசியலுக்கு முன் ஆசிரியர், பள்ளித் தலைமை ஆசிரியராக இருந்ததுடன், தனியார் மேல்நிலைப் பள்ளியை நிறுவி அதன் நிர்வாகத் தலைவராகவும் இருந்தார்.

1993ல் தனது சங்கத்தின் முதல் பெண் உறுப்பினராக ரோட்டரியில் இணைந்தார். RI இயக்குநர், பயிற்சி வழிகாட்டி, பிராந்திய உறுப்பினர் ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார். செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் கழிவுநீர் சுரங்கங்களில் வாழ்ந்த இளைஞர்களுக்கான இல்லத் திட்டத்திலும், நேபாள கிராமப்புற மருத்துவமனைக்கு தூய்மையான குடிநீர் வழங்கிய உலகளாவிய மானியத் திட்டத்திலும் பணியாற்றினார்.

பனிச்சறுக்கு, வரலாறு, தோட்டப் பராமரிப்பு, ஐந்து பேரக்குழந்தைகளுடன் நேரம் செலவிடுதல் ஆகியவற்றை விரும்புகிறார்.



**சிந்தியா W கோவிங்டன்**

*அறங்காவலர்* 2026–30

RC *சவுத் ஜாக்சன்வில், ஃபுளோரிடா*

மானுமென்ட் லீசிங் கார்ப்பரேஷனின் தலைமை நிர்வாக அதிகாரியான சிந்தியா கோவிங்டன், 40 ஆண்டுகளுக்கும் மேலான தொழில் மற்றும் நிதித் திட்டமிடல் அனுபவம் கொண்டவர்.

1999ல் ரோட்டரியில் இணைந்த அவர், மூலோபாயத் திட்டமிடல் குழுத் தலைவர், நோய் ஒழிப்பு நிதி பிரதிநிதி, பயிற்சி வழிகாட்டி, 'போலியோவை இப்போதே ஒழிப்போம்' ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார்.

நிகரகுவாவில் உள்ளூர் மக்களுடன் குடிநீர்க் குழாய்களுக்கான பணிகளில் ஈடுபட்டார். ஹெய்தி தேசிய நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சியின் நிறுவனர் குழு உறுப்பினராகவும் உள்ளார். ரோட்டரி ஃபவுண்டேஷனின் சிறப்புச் சேவை விருது உள்ளிட்ட கௌரவங்களைப் பெற்றுள்ளார். கணவர் பாரியும் ரோட்டரியர். இருவரும் பயணம், இயற்கை மற்றும் ரோட்டரி இளைஞர் பரிமாற்ற மாணவர்களை வரவேற்பதை விரும்புகின்றனர்.



**ஃபிராங்க் சிங்-ஹூயி ஹார்ன்**

*அறங்காவலர்* 2024–28

RC *பான்சியாவோ வெஸ்ட், தைவான்*

1988-ல் தொடங்கிய ட்ரோஜன் பல் சீரமைப்பு மருத்துவ நிலையத்தின் தலைவரான ஃபிராங்க் ஹார்ன், தைபே மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பல் அறுவைச் சிகிச்சைப் பட்டமும், தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் முகம் மற்றும் மண்டை வளர்ச்சியியல் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

1993-ல் தனது சங்கத்தின் தொடக்க உறுப்பினராக ரோட்டரியில் இணைந்தார். நியூ தைபே நகர ஆரம்பப் பள்ளிகளுக்கான கல்வி உதவித்திட்டத்தை உருவாக்கினார். ரோட்டரி ஃபவுண்டேஷனின் தொழில்நுட்ப ஆலோசகர்கள் குழு உறுப்பினராக, பாலி-தைவான் மருத்துவ நிபுணர்களை இணைத்தார். மங்கோலியாவில் 360 சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்கிய உலகளாவிய மானியத் திட்டத்தையும் வழிநடத்தினார்.

நடைப்பயிற்சி, கோல்ஃப் ஆகியவற்றை விரும்புகிறார். அவரது துணை ஷூ-யான் சுவாங்கும் ரோட்டரி உறுப்பினர். இருவரும் AKS உறுப்பினர்கள்.



**சுன்-வூக் ஹியூன்**

*அறங்காவலர்* 2023–27


RC *சியோல்-ஹான்சூ, கொரியா*

சியோலைத் தலைமையிடமாகக் கொண்ட கிம் அண்ட் சாங் சட்ட நிறுவனத்தின் மூத்த பங்குதாரரான சுன்-வூக் ஹியூன், 1981 முதல் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புச் சட்டப் பிரிவுக்குத் தலைமை வகித்து வருகிறார். ஜெஜு தீவில் பிறந்த அவர், சியோல் தேசியப் பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டமும் ஹார்வர்ட் சட்டப் பள்ளியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

பல சட்ட இதழ்களில் எழுதியுள்ள அவர், கொரிய நிறுவனங்களுக்கு ஆலோசகராகவும், சியோல் தொழிலாளர் உறவுகள் ஆணையத்தின் ஆணையராகவும், தென் கொரிய வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சகத்தின் சட்ட ஆலோசகராகவும், கொரியா பல்கலைக்கழக சட்டப் பள்ளியின் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

1991 முதல் RC சியோல்-ஹான்சூவின் தொடக்க உறுப்பினராக உள்ள ஹியூன், பயிற்சித் தலைவர் மற்றும்

2016 சியோல் RI மாநாட்டின் வரவேற்பு அமைப்புக் குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார். தற்போது ரோட்டரி ஃபவுண்டேஷன் கொரியாவின் இயக்குநராக உள்ளார்.



### இஜியோமா பேர்ல் ஒகோரோ

*அறங்காவலர்* 2024–28


RC *போர்ட் ஹார்கோர்ட், நைஜீரியா*

இஜியோமா ஒகோரோ காப்பீட்டுத் துறையின் நிர்வாகத்தில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்டவர். நாடகக் கலையில் இளங்கலைப் பட்டமும், நிர்வாகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார்.

மறைந்த தந்தையின் நினைவாக, பெண்களின் முன்னேற்றம் மற்றும் கல்வி வளர்ச்சிக்காக ரோமானஸ் எமியானுரு அறக்கட்டளையை நிறுவினார். லாகோஸ் வணிகப் பள்ளியின் மேம்பட்ட நிர்வாகப் பயிற்சி முன்னாள் மாணவர் பிரிவின் தொடக்கத் தலைவராகவும், எக்பு மகளிர் அமைப்பின் ஆதரவாளராகவும் இருந்துள்ளார்.

1999-ல் ரோட்டரியில் இணைந்தார். RI பயிற்சி வழிகாட்டி, உதவி பிராந்திய ஃபவுண்டேஷன் ஒருங்கிணைப்பாளர், பெருநிதி ஆலோசகர், ‘போலியோவை இப்போதே ஒழிப்போம்’ ஒருங்கிணைப்பாளர், சர்வதேச போலியோபிளஸ் குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார். சிறப்புச் சேவை விருது உள்ளிட்ட கௌரவங்களைப் பெற்றுள்ளார்.

கணவர் கிங்ஸ்லியுடன் இருவரும் பெருநிதி நன்கொடையாளர்கள் மற்றும் உயில் நன்கொடைச் சங்க உறுப்பினர்கள். இவர்களது இரு குழந்தைகளும் பால் ஹாரிஸ் ஃபெலோக்கள்.



### கார்லோஸ் சாண்டோவல்

*அறங்காவலர்* 2023–27

RC *சான் நிக்கோலாஸ் டெ லோஸ் கார்சா, மெக்சிகோ*

மெக்சிகோவின் முன்னணி எரிசக்தி நிறுவனமான ஓர்சான் கார்ப்பரேஷனின் தலைமை நிர்வாக அதிகாரி கார்லோஸ் சாண்டோவல். இந்நிறுவனத்தில் 270-க்கும் மேற்பட்ட சேவை நிலையங்களும் 3,000-க்கும் அதிகமான பணியாளர்களும் உள்ளனர். மெக்சிகோ தேசிய தன்னாட்சிப் பல்கலைக்கழகத்தில் கட்டிடக்கலையும், மான்டெர்ரே தொழில்நுட்பம் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தில் நிர்வாக மேலாண்மையும் பயின்றார்.

1975-ல் ரோட்டரியில் இணைந்தார். ரோட்டரி ஃபவுண்டேஷன் பிராந்திய ஒருங்கிணைப்பாளர், நிதி வளர்ச்சி மற்றும் ரோட்டரி அமைதி மையங்கள் குழு உறுப்பினர், பெருநிதி ஆலோசகர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார். மறைந்த மகன் கார்லோஸின் நினைவாக, மெக்சிகோ, டொமினிகன் குடியரசு, கொலம்பியாவில் பெண்கள் தொழில்முனைவோருக்கு உதவும் திட்டங்களுக்கு நிதியளித்தார். ஆறு மில்லியன் டாலர் நிதி திரட்டும் இரவு விருந்துகளையும் நடத்தியுள்ளார்.

சுகாதார முயற்சிகளை முன்னெடுக்கும் ஓர்சான் அறக்கட்டளையை நிறுவினார். மான்டெர்ரேயில் மூன்று போதை மறுவாழ்வு மையங்களுக்கு ஆதரவளிக்கிறார். மெக்சிகோ செஞ்சிலுவைச் சங்கத்தின் மான்டெர்ரே கிளை மற்றும் நுவோ லியோன் தன்னாட்சிப் பல்கலைக்கழக அறக்கட்டளை ஆகியவற்றின் நிர்வாகக் குழுக்களிலும் உள்ளார்.

மனைவி மார்த்தாவுடன் இருவரும் AKS உறுப்பினர்கள். கார் பந்தயங்களைப் பார்ப்பதையும், தமது மூன்று மகள்கள், 15 பேரக்குழந்தைகள் மற்றும் ஒரு கொள்ளுப்பேத்திக்காக உடல்தகுதியுடன் இருப்பதற்காக ஓடுவதையும் விரும்புகிறார்.



### டென்னிஸ் J ஷோர்


*அறங்காவலர்* 2023–27

RC *ஹாதோர்ன், ஆஸ்திரேலியா*

நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வேதிப் பொறியியலில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்கள் பெற்ற டென்னிஸ் ஷோர், ஆஸ்திரேலிய பேப்பர் மேனுஃபேக்சரர்ஸ் நிறுவனத்தில் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா உள்ளிட்ட பகுதிகளில் மூத்த நிர்வாகியாகப் பணியாற்றினார். பின்னர் சொந்த ஆலோசனை நிறுவனத்தைத் தொடங்கி, 2021-ல் ஓய்வு பெற்றார்.

1980-ல் ரோட்டரியில் இணைந்தார். பெருநிதி ஆலோசகராகவும், ரோட்டரி ஃபவுண்டேஷன் ஆஸ்திரேலியாவின் துணைத் தலைவராகவும் பணியாற்றுகிறார். கிழக்கு திமோர், கம்போடியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் கல்வி உதவித்தொகை, குடிநீர் தொட்டிகள், மருத்துவமனை மற்றும் மனநலத் திட்டங்களுக்கு ஆதரவளித்துள்ளார். 2017-ல் நடத்திய நிதி திரட்டும் இரவு விருந்து மூலம் ஃபவுண்டேஷனுக்காக 35 லட்சம் டாலருக்கும் மேல் திரட்டினார்.

மனைவி லிண்டாவுடன் இருவரும் பெருநிதி நன்கொடையாளர்கள் மற்றும் உயில் நன்கொடைச் சங்க உறுப்பினர்கள். ஃபவுண்டேஷனின் சிறப்புச் சேவை விருது உள்ளிட்ட கௌரவங்களைப் பெற்றுள்ளார்.



### கட்சுஹிகோ தட்சுனோ

*அறங்காவலர்* 2025–29


RC *டோக்கியோ-வெஸ்ட், ஜப்பான்*

டோக்கியோ பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டம் பெற்ற கட்சுஹிகோ தட்சுனோ, தந்தை நிறுவிய தட்சுனோ நிறுவனத்தில் இணைந்து, தற்போது அதன் தலைமை நிர்வாக அதிகாரியாக உள்ளார்.

1982-ல் ரோட்டரியில் இணைந்தார். ரோட்டரி சர்வதேசப் பயிற்சி வழிகாட்டி, உறுப்பினர் குழு மற்றும் தலைவர் பரிந்துரைக் குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தார். 2020–22ல் ரோட்டரி சர்வதேச இயக்குநராக இருந்தார். 2011 தோஹோகு நிலநடுக்கம் மற்றும் சுனாமிக்குப் பிறகு மீட்பு மற்றும் உயிர் பிழைத்தோருக்கான உதவிகளில் ஜப்பான் ரோட்டரி குழுவுடன் பணியாற்றினார்.

2011 மாவட்ட மாநாட்டில், மாவட்ட ஆளுநராக இருந்தபோது, 95 சங்கத்தலைவர்களையும் மேடைக்கு அழைத்து தங்கள் சங்கப் பணிகளைப் பகிரச் செய்தது அவருக்கு மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது. கல்லூரி மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் தட்சுனோ சுற்றுச்சூழல் அறக்கட்டளையை நிறுவியுள்ளார்.

வாழ்நாள் முழுவதும் கோல்ஃப் விளையாடி வரும் அவர், ஜப்பானிய எழுத்துக்கலை 'ஷோதோ'விலும் ஆர்வம் கொண்டவர். AKS உறுப்பினர்.



**ஃபிரான்சிஸ் F துசுபிரா**

*அறங்காவலர்* 2026–30


RC *கம்பாலா-நார்த், உகாண்டா*

பொறியாளரும், நாலெட்ஜ் கன்சல்ட்டிங் நிறுவனத்தின் மூத்த நிறுவனப் பங்குதாரருமான ஃபிரான்சிஸ் துசுபிரா, இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தில் மின்னணுவியலில் முனைவர் பட்டம் பெற்றவர். தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றுகிறார்.

உகாண்டாவின் தேசிய தகவல் தொழில்நுட்ப முகமைக்கு தலைவராகவும், தகவல் தொடர்பு ஆணையம், மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உள்ளிட்ட அமைப்புகளின் நிர்வாகக் குழுக்களிலும் பணியாற்றியுள்ளார்.

1988-ல் ரோட்டரியில் இணைந்தார். உலகளாவிய மானியத் திட்டத்தின் கீழ் 'ந்கோண்டோ கிராமத்தைத் தத்தெடுப்போம்' என்ற திட்டத்தை ஏழு ஆண்டுகள் முன்னெடுத்தார். இதன் மூலம் கல்வி, குடிநீர், மின்சாரம், சுகாதாரம், சிறு நீர்ப்பாசனம், சிறுகடன் மற்றும் திறன் வளர்ப்பு ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டது.

ஃபவுண்டேஷனின் சிறப்புச் சேவை விருது பெற்றுள்ளார். மனைவி டோர்கஸும் ரோட்டரி உறுப்பினர். இருவரும் பெருநிதி நன்கொடையாளர்கள்.



**ஸ்டெஃபனி A உர்சிக்**

*அறங்காவலர்* 2025–29


RC *மெக்மர்ரே, பென்சில்வேனியா*

2024–25ல் RI தலைவராகப் பணியாற்றிய ஸ்டெஃபனி உர்சிக், RI இயக்குநர், ஃபவுண்டேஷன் அறங்காவலர், பயிற்சித் தலைவர், பிராந்திய ஃபவுண்டேஷன் ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட பல பொறுப்புகளை வகித்துள்ளார்.

1991-ல் ரோட்டரியில் இணைந்த அவர், இந்தியா மற்றும் நைஜீரியாவில் போலியோ ஒழிப்பு முகாம்கள், வியட்நாமில் ஆரம்பப் பள்ளி கட்டுமானம், டொமினிகன் குடியரசில் குடிநீர் வடிகட்டி நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு உலகளாவிய சேவைத் திட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

உக்ரைனில் புதிய ரோட்டரி உறுப்பினர்களுக்கு வழிகாட்டியதுடன், போலந்தில் மருத்துவமனைக்கு மார்பகப் புற்றுநோய் பரிசோதனை மற்றும் திசு பரிசோதனை உபகரணங்கள் வழங்கும் ஃபவுண்டேஷன் மானியத் திட்டத்தையும் ஒருங்கிணைத்தார். அமெரிக்க சங்கங்கள் மற்றும் கொசோவோ, ருமேனியா, உக்ரைன் சங்கங்களுக்கு இடையே மனிதாபிமான, கல்விச் சேவைகளுக்கான கூட்டாண்மைகளையும் உருவாக்கினார்.

2025ல் இஸ்தான்புல்லில் 'பிளவுபட்ட உலகில் குணமடைதல்' என்ற கருப்பொருளில் அமைதி மாநாட்டை நடத்தினார்.



**அனந்தநாராயணன் S வெங்கடேஷ்**

*அறங்காவலர்* 2026–30

RC *சென்னை மாம்பலம், இந்தியா*

ஐஐடி மெட்ராஸில் பொறியியல் பட்டமும், ஐஐஎம் அகமதாபாத்தில் நிர்வாக மேலாண்மை முதுகலைப் பட்டமும் பெற்ற S வெங்கடேஷ், 23 வயதில் கட்டுமானத் தொழிலில் நுழைந்தார். தற்போது 1,400-க்கும் மேற்பட்டோர் பணியாற்றும் நிறுவனத்தை வழிநடத்துகிறார்.

1999-ல் நண்பர்களுடன் தொடர்பு வளர்ப்பதற்காக ரோட்டரியில் இணைந்தார். ஒரு பள்ளிக்கு நீண்ட இருக்கைகள் வழங்கும் சேவைத் திட்டத்தின்போது ஒரு மாணவியுடன் நடந்த உரையாடல் அவரது பார்வையை மாற்றியது. "என் வாழ்க்கையில் இதுவே முதல் முறை; தரையில் அல்லாமல் ஒரு இருக்கையில் அமர்கிறேன்" என்று அந்த மாணவி கூறியது அவரை ஆழமாகப் பாதித்தது. அதன்பின் எழுத்தறிவு, சிறுமிகள் மற்றும் பெண்களின் முன்னேற்றத்துக்காக தொடர்ந்து பாடுபட்டார்.

இந்திய எழுத்தறிவு இயக்கத்தில் இணைச் செயலாளராகப் பணியாற்றி, 2,900-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சி மற்றும் எழுத்தறிவுத் திட்டங்களுக்கு ஆதரவளித்தார். 2021–23ல் RI இயக்குநராகவும், உறுப்பினர் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பயிற்சி வழிகாட்டியாகவும் இருந்தார்.

பிரிட்ஜ் விளையாடுவதையும் கடற்கரைப் பகுதிகளுக்குப் பயணம் செய்வதையும் விரும்புகிறார். மனைவி வினிதா RC சென்னை ஆங்கரேஜ் உறுப்பினர். இருவரும் பெருநிதி நன்கொடையாளர்கள்.

**ஜான் ஹெவ்கோ**

*பொதுச் செயலாளர்*

RC *கீவ், உக்ரைன்*

RI வாரிய இயக்குநர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பார்க்கவும். (ரோட்டரி நியூஸ், ஆகஸ்ட் 2026)

©Rotary

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்



## RID 2981

**RC புதுச்சேரி மெரினா**

பேச்சு, செவித்திறன் சவால்கள் மற்றும் உடல் குறைபாடுகளுடன் வாழும் 15 பேருக்கு தையல், பை தயாரிப்பு ஆகிய தொழில்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பயிற்சியை முடித்த அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது.






## RID 3030

**RC பல்லார்பூர்**

உள்ளூர் நகராட்சியால் நடத்தப்படும் யஷ்வந்த்ராவ் சவான் ஆரம்பப் பள்ளி மற்றும் சாய்பாபா ஆரம்பப் பள்ளி ஆகிய இரண்டிற்கும் பாதுகாப்பான குடிநீருக்காக RO நீர் சுத்திகரிப்பு அலகுகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

## RID 3040

**RC ரத்லம் பிரைம்**

வனத்துறையின் மரநடுகை இயக்கத்தில் சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர். 50 ஹெக்டேர் பரப்பளவில் 50,000 மரக்கன்றுகள் நடப்படும் இப்பசுமை இயக்கம், ரோட்டேரியன்களின் ஆதரவுடன் வரும் அக்டோபர் மாதம் வரை தொடரும்.





## RID 3053

**RC ஜோத்பூர் மிட் டவுன்**

ஜோத்பூரிலுள்ள மதுரா தாஸ் மாத்தூர் மருத்துவமனையின் பொது வார்டில் நோயாளிகளின் வசதிக்காக சக்கர நாற்காலிகள், ஸ்ட்ரெச்சர்கள், மெத்தைகள் மற்றும் குளிர்சாதன இயந்திரம் வழங்கப்பட்டன.

## RID 3000

**RC கரூர் யங் ஜென்**

கரூரிலுள்ள CSI பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் 150 மாணவிகளுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க நூலக உறுப்பினர் அட்டைகள் வழங்கப்பட்டன. இம்முயற்சி அவர்களின் அறிவை குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தி, கல்விசார் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் உதவும் எனத் திட்டத் தலைவர் V விக்னேஷ் கூறுகிறார்.






## RID 3110

**RC பான்ஸ் பரேலி**

‘தாய்க்காக ஒரு மரம்’ இயக்கத்தின் பகுதியாக இஸ்கான் கோயில் வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. வளரும் கன்றுகளை தொடர்ந்து பாதுகாப்பதாக ரோட்டேரியன்கள் உறுதிமொழி எடுத்தனர்.

## RID 3070

**RC அமிர்தசர் சிவில் லைன்ஸ்**

கைரோனின் வுட் பிளாசம் பள்ளி, நோஷேரா பன்னுவின் நேஷனல் பப்ளிக் பள்ளி, கைரோன் அரசு பெண்கள் பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட மாணவர் இன்டராக்டர்கள், 30 கிலோ பிளாஸ்டிக் கழிவைப் பயன்படுத்தி ஈகோபிரிக்ஸ் மற்றும் நாற்காலிகள் உருவாக்கினர்.

# Membership and TRF Summary 2026-27

### Top 20 Districts in the world in membership

| Rank | District | Zone | Country | Rotary Clubs | Members |
|---|---|---|---|---|---|
| 1 | 3000 | 5 | India | 212 | 8,798 |
| 2 | 2981 | 5 | India | 162 | 6,981 |
| 3 | 3141 | 4 | India | 122 | 6,859 |
| 4 | 3170 | 7 | India | 142 | 6,432 |
| 5 | 3030 | 6 | India | 124 | 6,268 |
| 6 | 3203 | 5 | India | 120 | 6,042 |
| 7 | 3011 | 4 | India | 147 | 5,712 |
| 8 | 3292 | 6 | Bhutan | 165 | 5,489 |
| 9 | 3211 | 5 | India | 165 | 5,402 |
| 10 | 9213 | 22 | Uganda | 151 | 5,392 |
| 11 | 3060 | 4 | India | 105 | 5,244 |
| 12 | 1910 | 21 | Austria | 112 | 5,231 |
| 13 | 3630 | 11 | Korea | 118 | 5,219 |
| 14 | 3131 | 7 | India | 132 | 4,992 |
| 15 | 9214 | 22 | Tanzania | 150 | 4,810 |
| 16 | 1900 | 15 | Germany | 92 | 4,803 |
| 17 | 3212 | 5 | India | 124 | 4,782 |
| 18 | 3820 | 10 | Philippines | 159 | 4,778 |
| 19 | 9141 | 22 | Nigeria | 191 | 4,738 |
| 20 | 1810 | 15 | Germany | 89 | 4,736 |

### Zonewise ranking - New member addition

| Rank | Zone | Members |
|---|---|---|
| 1 | 5 | 3,552 |
| 2 | 4 | 2,189 |
| 3 | 7 | 1,866 |
| 4 | 6 | 1,359 |
| Total (Net Growth since 1July) | | 8,966 |
| Rest of the World Total (Net Growth since 1July) | | 15,346 |
| World Total (Net Growth since 1July) | | 24,312 |

### Rotaract Interact membership as on July 2026

| Zone | Rotaract | | Interact | RCCs |
|---|---|---|---|---|
| | Clubs | Rotaractors | Clubs | |
| 4 | 657 | 12,000 | 2,073 | 2,091 |
| 5 | 909 | 26,627 | 2,015 | 1,750 |
| 6 | 576 | 9,359 | 2,320 | 2,514 |
| 7 | 685 | 12,207 | 2,321 | 1,589 |

### India Districts - New member addition ranking

| Rank | District | Zone | NewMembers |
|---|---|---|---|
| 1 | 3000 | 5 | 1,081 |
| 2 | 2981 | 5 | 689 |
| 3 | 3141 | 4 | 451 |
| 4 | 3080 | 4 | 424 |
| 5 | 3233 | 5 | 344 |
| 6 | 3191 | 7 | 327 |
| 7 | 3250 | 6 | 266 |
| 8 | 3011 | 4 | 263 |
| 9 | 3120 | 6 | 237 |
| 10 | 3231 | 5 | 227 |
| 11 | 3203 | 5 | 225 |
| 12 | 3150 | 7 | 224 |
| 13 | 3131 | 7 | 223 |
| 14 | 3030 | 6 | 217 |
| 15 | 3170 | 7 | 216 |
| 16 | 3132 | 7 | 213 |
| 17 | 3142 | 4 | 210 |
| 18 | 3192 | 7 | 204 |
| 19 | 3212 | 5 | 198 |
| 20 | 3234 | 5 | 194 |
| 21 | 3060 | 4 | 178 |
| 22 | 3292 | 6 | 157 |
| 23 | 3182 | 7 | 157 |
| 24 | 3012 | 4 | 142 |
| 25 | 3211 | 5 | 140 |
| 26 | 3020 | 7 | 140 |
| 27 | 3181 | 7 | 137 |
| 28 | 3206 | 5 | 126 |
| 29 | 3070 | 4 | 118 |
| 30 | 3204 | 5 | 115 |
| 31 | 3291 | 6 | 113 |
| 32 | 3040 | 4 | 108 |
| 33 | 3055 | 4 | 97 |
| 34 | 3240 | 6 | 95 |
| 35 | 3090 | 4 | 95 |
| 36 | 2982 | 5 | 86 |
| 37 | 3262 | 6 | 78 |
| 38 | 3100 | 6 | 71 |
| 39 | 3110 | 6 | 70 |
| 40 | 3220 | 5 | 65 |
| 41 | 3205 | 5 | 62 |
| 42 | 3056 | 4 | 62 |
| 43 | 3261 | 6 | 55 |
| 44 | 3053 | 4 | 41 |
| 45 | 3160 | 7 | 25 |
| **Total** | | | **8,966** |

## Top 10 Districts - TRF Giving

### Annual Fund

| Rank | Zone | District | Annual Fund ($) |
|---|---|---|---|
| 1 | 7 | 3150 | 195,100 |
| 2 | 4 | 3142 | 93,090 |
| 3 | 7 | 3131 | 82,787 |
| 4 | 4 | 3141 | 81,060 |
| 5 | 6 | 3250 | 75,328 |
| 6 | 7 | 3132 | 69,435 |
| 7 | 6 | 3120 | 65,145 |
| 8 | 6 | 3291 | 51,349 |
| 9 | 6 | 3240 | 29,919 |
| 10 | 4 | 3060 | 24,395 |

### PolioPlus Fund

| Rank | Zone | District | PolioPlus Fund ($) |
|---|---|---|---|
| 1 | 5 | 3234 | 8,302 |
| 2 | 7 | 3020 | 6,965 |
| 3 | 7 | 3150 | 6,700 |
| 4 | 4 | 3141 | 6,233 |
| 5 | 7 | 3170 | 4,592 |
| 6 | 4 | 3142 | 3,931 |
| 7 | 6 | 3291 | 3,519 |
| 8 | 6 | 3240 | 3,094 |
| 9 | 5 | 2981 | 3,078 |
| 10 | 7 | 3181 | 2,165 |

### Endowment Fund

| Rank | Zone | District | Endowment Fund ($) |
|---|---|---|---|
| 1 | 4 | 3053 | 50,000 |
| 2 | 5 | 3233 | 38,706 |
| 3 | 7 | 3150 | 36,221 |
| 4 | 6 | 3120 | 34,425 |
| 5 | 6 | 3291 | 31,604 |
| 6 | 5 | 3212 | 30,000 |
| 7 | 4 | 3141 | 26,263 |
| 8 | 6 | 3250 | 18,798 |
| 9 | 7 | 3020 | 13,589 |
| 10 | 7 | 3131 | 13,263 |

### Zone ranking in implementing 10:20:30 formula for adding new clubs

| Rank | Zone | Rotary | Rotaract | Interact |
|---|---|---|---|---|
| 1 | 5 | 28 | 10 | 20 |
| 2 | 4 | 15 | 15 | 13 |
| 3 | 6 | 9 | 21 | 24 |
| 4 | 7 | 3 | 30 | 21 |
| **Total** | | **55** | **76** | **78** |
| **Target** | | **500** | **1,000** | **1,500** |

### Top 20 Giving Districts in India

| Rank | District | Zone | Total Contributions ($) |
|---|---|---|---|
| 1 | 4 | 3141 | 495,857 |
| 2 | 7 | 3150 | 250,661 |
| 3 | 7 | 3131 | 129,295 |
| 4 | 7 | 3132 | 125,397 |
| 5 | 6 | 3120 | 101,622 |
| 6 | 4 | 3142 | 98,334 |
| 7 | 6 | 3250 | 95,835 |
| 8 | 6 | 3291 | 90,222 |
| 9 | 4 | 3011 | 82,906 |
| 10 | 4 | 3053 | 68,453 |
| 11 | 5 | 3205 | 62,395 |
| 12 | 5 | 3234 | 61,021 |
| 13 | 7 | 3020 | 56,557 |
| 14 | 5 | 3233 | 49,902 |
| 15 | 5 | 3203 | 47,946 |
| 16 | 5 | 3212 | 47,390 |
| 17 | 7 | 3170 | 40,874 |
| 18 | 4 | 3060 | 39,864 |
| 19 | 7 | 3191 | 36,282 |
| 20 | 5 | 2981 | 36,250 |

### Leading Districts with CSR Credits in Zone 4,5,6 & 7

| Rank | Zone | District | CSR ($) |
|---|---|---|---|
| 1 | 7 | 3141 | 288,931.34 |
| 2 | 4 | 3132 | 54,533.68 |
| 3 | 7 | 3191 | 23,750.00 |
| 4 | 4 | 3131 | 22,500.00 |

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

**ரோட்டரி செய்திக்குழு**

## பெண்களுக்கான திறன் மேம்பாடு

RID 3141-ன் RC மும்பை-பாண்டுப் பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்புக்கான தொழில்துறை சார்ந்த திறன்களை வழங்கியுள்ளது. இதுவரை இரண்டு பேட்ச்களில் எண்பது பெண்கள் பயிற்சியை முடித்துள்ளனர். “பயிற்சி பெற்றவர்களுக்கு நிலையான வாழ் வாதாரத்தை உறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம், ஆடை தொழிற்சாலைகள் இவர்களை பணியமர்த்த விருப்பம் தெரிவித்துள்ளன என்று திட்டத் தலைவர் சீமா க்ஷீர்சாகர் தெரிவித்தார்.■



RC *மும்பை-பாண்டுப்* IPP *சீமா க்ஷீர்சாகர் (மையம்) மற்றும் உறுப்பினர்கள் ஒரு பயிற்சியாளருக்கு பயிற்சி சான்றிதழ் வழங்குகின்றனர்.*

## மும்பை மருத்துவமனையில் குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சைகள்

RC டோம்பிவ்லி ஈஸ்ட் 64 குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சைகளுக்கான மானிய பணி உத்தரவை, ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனையிடம் RID 3142 IPDG ஹர்ஷ் மாக்கோல் வழங்கினார். $1,07,000 மதிப்பிலான இந்த GG திட்டத்தில் RC லண்டன், ஒன்டாரியோ, RID 6330, முக்கிய உலகளாவிய பங்குதாரராக உள்ளது. உள்ளூர் சங்கங்களான RC கல்யாண், கல்யாண் ரிவர்சைடு, டோம்பிவ்லி வின்னர்ஸ் மற்றும் உலகளாவிய சங்கங்களான RC செயின்ட் க்ளேர், RID 5810, அமெரிக்கா, மற்றும் RC அஜாக்ஸ், RID 7070, கனடா ஆகியவையும் பங்கேற்றன.

மேலும், RID 3142, 5810, 7070 ஆகியவை உலகளாவிய மானியத்தை சாத்தியமாக்க தங்கள் DDF ஆதரவை வழங்கின.■



RC *டோம்பிவ்லி ஈஸ்ட் திட்டக் குழுவுடன்* IPDG *ஹர்ஷ் மாக்கோல்.*

## மொரிஷியஸில் கண் அறுவை சிகிச்சை முகாம்

RID 3142-ன் RC தானே, மொரிஷியஸின் RID 9220-ன் RC பீனிக்ஸ் உடன் இணைந்து, மொரிஷியஸின் மோகா பகுதியில் உள்ள சுப்ரமணி பாரதி கண் மருத்துவமனையில் நடத்திய ஐந்து நாள் வைட்ரியோரெட்டினல் அறுவை சிகிச்சை முகாமில், 100-க்கும் மேற்பட்ட நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு, அவர்களில் 48 பேர் அறுவை சிகிச்சைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் கரண் குமாரசாமியும் டாக்டர் சுபாங்க் கரேவும், உள்ளூர் மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களின் உதவியுடன் அறுவை சிகிச்சைகளைச் செய்தனர். மொரிஷியஸ் சுகாதார அமைச்சர் அனில் பச்சு மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகள் மற்றும் மருத்துவர்களுடன் உரையாடினார்.■



*அறுவை சிகிச்சை நடைபெறும் காட்சி.*

## கேரள மருத்துவமனைக்கு அதிநவீன உபகரணங்கள்

RID 3205-ன் RC கிரேட்டர் கொச்சின், UK-ன் RID 1210-ன் RC வொல்வர்ஹாம்ப்டன் உடன் இணைந்து, ரூ.28 லட்சம் மதிப்பிலான GG திட்டத்தின் மூலம், புத்தன்வேலிக்காரா அரசு தாலுகா மருத்துவமனையில் பல்வேறு அதிநவீன மருத்துவ உபகரணங்களை நிறுவியது.

கேரள முதலமைச்சர் V D சதீசன் புதிய உபகரணங்களைத் திறந்து வைத்தார். இதற்கு முன்பு, அதே உலகளாவிய பங்குதாரருடன் இணைந்து, சங்கம் 2023-24-ல் ரூ.26 லட்சம் மதிப்பிலான GG திட்டத்தை மேற்கொண்டு, மருத்துவமனைக்கு அல்ட்ராசவுண்ட் ஸ்கேனர், பயோகெமிஸ்ட்ரி அனலைசர், பிசியோதெரபி உபகரணங்களை வழங்கியிருந்தது.■



*புத்தன்வேலிக்காரா அரசு தாலுகா மருத்துவமனையில் ஹார்மோன் அனலைசரை பிளாக் பஞ்சாயத்து தலைவர் சேபா முகமதுஅலி திறந்து வைக்கிறார். RC கிரேட்டர் கொச்சின் IPP பிரசன்னா ராதாகிருஷ்ணன் (வலமிருந்து 4வது), ரோட்டேரியன்கள், ஆகியோரும் காணப்படுகின்றனர்.*

# நகர வெப்பத்தைச் சமாளிப்போம்

ப்ரீதி மேஹரா

*உங்கள் சுற்றுப்புற வெப்பநிலையை நிர்ணயிப்பவை நுண்காலநிலை மண்டலங்கள்.*

வானிலைத் துறை தெரிவிக்கும் அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலைகள் நகரின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு வேறுபடுவது ஏன் என்று எண்ணியிருக்கிறீர்களா? சில இடங்கள் வானிலை அறிக்கையைவிடக் கணிசமாக வெப்பமாகவும், சில இடங்கள் பல டிகிரி குளிர்ச்சியாகவும் உள்ளன.

கடந்த ஆண்டு மும்பை முழுவதும் பதிவான வெப்பநிலைகளை புணேவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆலோசக நிறுவனமான ரெஸ்பையரர் லிவிங் சயின்சஸ் (RLS) ஆய்வு செய்தது. நகருக்குள் நுண்காலநிலை மண்டலங்கள் உருவாகி வருவதை அது சுட்டிக்காட்டியது. வெப்ப அழுத்தத்தைத் தணிக்க உள்ளூர் சார்ந்த அணுகுமுறை தேவை என்பதே ஆய்வின் முடிவு. மும்பைக்கோ, வேறு எந்தப் பெருநகரத்துக்கோ ஒரே தீர்வு பொருந்தாது.

வெப்பநிலை மாறுபாடுகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. கடந்த ஆண்டு மார்ச் 1 முதல் 22 வரை, அடர்த்தியான மக்கள்தொகையுள்ள காட்கோபர் புறநகரில் சராசரி வெப்பநிலை 33.3 டிகிரி செல்சியஸாகப் பதிவானது. அதே காலகட்டத்தில், குறைவான உயர்மாடிக் கட்டடங்கள், குறைந்த மக்கள்தொகை, அதிகப் பசுமை கொண்ட பவாயில் சராசரி வெப்பநிலை 20.4 டிகிரியாக இருந்தது. வித்தியாசம் 13 டிகிரி செல்சியஸ்!

நகருக்குள் உருவாகும் நுண்கால நிலை மண்டலங்களே இத்தகைய வேறுபாடுகளுடன் தொடர்புடையவை என்பதில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஒருமித்துள்ளனர். பரந்த பிராந்தியத்தின் காலநிலையிலிருந்து மாறுபடும் சிறிய, உள்ளூர்மயமான பகுதிகளே இவை. மக்கள்தொகை, வாகனப் போக்குவரத்து அடர்த்தி, தாவரங்களின் இருப்பு அல்லது இல்லாமை, கான்கிரீட் கட்டடங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை உள்ளிட்ட காரணிகள் இவற்றை உருவாக்குகின்றன.

மும்பை போன்ற நகரங்களில் நுண்காலநிலை மண்டலங்கள் உருவாவது புறக்கணிக்க முடியாத உண்மை; அது குறிப்பிட்ட பகுதி மக்களின் உடல்நலத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என RLS தலைமைச் செயல் அதிகாரி ரோனக் சுதாரியா ஊடகங்களிடம் கூறியுள்ளார். நகரத்துக்காகப் பதிவாகும் சராசரி வெப்பநிலையில் இந்த உள்ளூர் வேறுபாடு வெளிப்படாமல் போகலாம்.

சுற்றியுள்ள கிராமப்புறங்களை விட அதிக வெப்பநிலையைக் கொண்ட நகரப் பகுதிகளே நகர்ப்புற வெப்பத் தீவுகள். நம் பணியிடங்களிலும் குடியிருப்புப் பகுதிகளிலும் உள்ள நுண்காலநிலையை உள்ளூர் அளவில் எவ்வாறு மாற்ற முடியும்?

நகர வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவது நம்மால் கட்டுப்படுத்த முடியாத பெரிய அளவிலான செயல்பாடு என்பது இயல்பே. பெரிய கட்டுமானங்கள், தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும்போது நகர வெப்பக் காரணியை நினைவில் கொள்ளுமாறு நகரத் திட்டமிடுபவர்களையும் அரசு அமைப்புகளையும் வலியுறுத்தலாம். கடற்கரையோர அலையாத்திக் காடுகளைப் பாதுகாப்பது, காடுகளைக் காப்பது போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த செயல்களுக்கும் ஆதரவளிக்கலாம்.

முடிந்தவரை அதிகப் பசுமையை வளருங்கள்: வெப்பத்தைத் தடுக்க ஜன்னல்கள், தளமிட்ட பகுதிகளுக்கு அருகில் நிழல் தரும், தாங்குதிறன் மிக்க உள்ளூர் மரங்களை நடலாம்.

அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிப்பவர்கள் தங்கள் பால்கனி, முன்புறத் தாழ்வாரங்களில் தொட்டிச் செடிகள், புதர்கள், சிறிய செடிகளை வளர்க்கலாம். பிறரையும் அதற்கு ஊக்குவிக்கலாம்.

சமூகத்தில் வெப்பநிலையைக் குறைக்கும் மாடித் தோட்டங்கள் அல்லது பசுமைக் கூரைகளை உருவாக்கலாம். வெயில் படும் கட்டடச் சுவர்களில் செங்குத்துப் பசுமைச் சுவர்களையும் அமைக்கலாம்.

மேற்பரப்புகளையும் வீடுகளையும் குளிர்விக்கப் பல வழிகள் உள்ளன. கூரைகள், வெளிப்புறச் சுவர்களுக்கு ஒளியை எதிரொலிக்கும் வெள்ளை அல்லது வெளிர் நிறப் பூச்சு பூசுவது மிகவும் பிரபலமானது. கான்கிரீட் அல்லது கருமை நிற நிலக்கீல் முற்றங்களைப் புல்வெளி, சரளைக் கற்கள், நீர் ஊடுருவும் பதிப்புக் கற்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றால் மாற்றுவதும் நல்லது. காலை அல்லது மாலை நேரங்களில் செடிகளுக்கு நீர் ஊற்றி மண்ணை ஈரமாக வைத்தால் கூடுதல் குளிர்ச்சி கிடைக்கும்.

உள்ளூர் வெப்பத்தையும் மாசுபாட்டையும் குறைக்க நம் பங்கைச் செய்வது கடினமல்ல. காரில் செல்வதற்குப் பதில் நடக்கலாம், மிதிவண்டி ஓட்டலாம் அல்லது பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம்.

பூங்காக்கள், சமூக மரநடுகைத் திட்டங்களுக்கு ஆதரவளித்தால் பலரின் மனதை வெல்லலாம். வசதி குறைந்த பகுதிகளில் மக்கள் தகரம் அல்லது அஸ்பெஸ்டாஸ் தகடுகளால் செய்யப்பட்ட தாழ்ந்த கூரைகளுள்ள வீடுகளில் வாழ்கின்றனர். நெருக்கமாக அமைந்த இக்கட்டடங்களில் காற்றோட்டக் குறைபாடு உள்ளது; மும்பை குடிசைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், அண்டை குடியிருப்புச் சங்கங்களை விட இங்குள்ள சராசரி வெப்பநிலை ஆறு டிகிரி அதிகம் என்பதை

காட்டுகின்றன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களால் கூரைகளை மாற்றி, ஒளியை எதிரொலிக்கும் வெள்ளை நிறத்தில் பூசுமாறு நிர்வாகத்தை வலியுறுத்தலாம். தற்போது குப்பைகள் நிறைந்திருக்கும் இடங்களில் சுத்தமான, பசுமையான பொதுவெளிகளை உருவாக்கலாம்.

மொத்தத்தில், காலநிலை மாற்றத்தை அணுகும் விதமே மாற வேண்டும். நகர்ப்புற வெப்பத் தீவுகளும் நுண்காலநிலை மண்டலங்களும் இனி புறக்கணிக்க முடியாத உண்மைகள். அவற்றை நாம் எப்படிக் கையாள்கிறோம் என்பதே நமது நகரங்கள் எவ்வளவு ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் பசுமையாகவும் இருக்கும் என்பதைத் தீர்மானிக்கும்.

இந்த ஆய்வு தெரிவிக்கும் முக்கியமான செய்தி என்னவென்றால், நகரத்தின் ஒட்டுமொத்த வெப்பநிலையை மட்டும் பார்த்து ஒரு பகுதியின் உண்மையான நிலையை அறிய முடியாது என்பதே. ஒரே நகரத்திற்குள் இருக்கும் இரண்டு புறநகரங்கள், கட்டடங்களின் அடர்த்தி, மரங்களின் நிழல், திறந்தவெளி, சாலைகளில் ஓடும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகிய காரணங்களால் வெவ்வேறு வெப்ப அனுபவங்களைப் பெறுகின்றன. ஆகவே வெப்ப அலைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் திட்டங்களும் அந்தந்தப் பகுதியின் தேவைகள், பாதிப்புகள், வாழ்விடங்களின் தன்மைகளை கணக்கில் கொள்ள வேண்டும். குறிப்பாக குழந்தைகள், முதியோர், வெளியில் வேலை செய்பவர்கள், வசதி குறைந்த குடியிருப்புகளில் வாழ்பவர்கள் போன்றோருக்கு உள்ளூர் வெப்பம் கூடுதல் உடல்நலச் சவாலாக அமையலாம்.

பசுமை வளர்ப்பது வெறும் அழகுபடுத்தல் நடவடிக்கை அல்ல. மரங்களும் புதர்களும் நிழலைத் தருகின்றன; மண்ணில் ஈரப்பதத்தைப் பேண உதவுகின்றன; கட்டடங்கள், நடைபாதைகள், முற்றங்கள் நேரடியாக வெப்பமடைவதைத் தடுக்கின்றன.

அதேபோல், கூரைகள், சுவர்கள், திறந்த முற்றங்கள் எந்தப் பொருளால் அமைக்கப்படுகின்றன என்பதும் முக்கியம். இருண்ட மேற்பரப்புகள் சூரிய வெப்பத்தை அதிகமாக உறிஞ்சுகின்றன; வெளிர் நிறங்கள் அதனை பிரதிபலிக்க உதவுகின்றன. நீர் ஊடுருவும் மேற்பரப்புகள் மழைநீரை நிலத்துக்குள் செல்ல அனுமதித்து, சுற்றுச்சூழலில் ஈரத்தைத் தக்கவைக்கின்றன. வீட்டுவசதி சங்கங்கள், உள்ளாட்சி அமைப்புகள், குடிமக்கள் குழுக்கள் இத்தகைய சிறிய மாற்றங்களைத் திட்டமிட்டு செய்தால், அவை பரந்த அளவில் குறிப்பிடத்தக்க பலன்களைத் தரலாம்.

குடிசைப் பகுதிகளின் வெப்பப் பிரச்சினைக்கு சிறப்பு கவனம் தேவை. காற்றோட்டம், கூரைப் பொருட்கள், மரநிழல், சுத்தமான பொதுவெளி போன்ற அடிப்படை அம்சங்கள் இல்லாதபோது வெப்பத்தின் தாக்கம் மேலும் தீவிரமாகும். அதனால் நிர்வாகம், சமூக அமைப்புகள், குடியிருப்போர் இணைந்து குறைந்த செலவில் நடைமுறைப்படுத்தக்கூடிய மேம்பாடுகளைத் தேட வேண்டும். ஒவ்வொருவரின் தொடர்ச்சியான சிறு முயற்சிகளும் நகரத்தின் எதிர்கால வாழ்வாதாரத் தரத்தை மாற்றும் உண்மையான ஆற்றல் கொண்டவை.

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதி வருகிறார்.





## RID 3132

**ரோட்டரி இ-சங்கம் சோலாப்பூர் எலைட்**

ஹீராசந்த் நேம்சந்த் வணிகவியல் கல்லூரியின் சுமார் 300 மாணவர்கள், IPL கிரிக்கெட் நடுவர் அனிஷ் சஹஸ்ரபுத்தே வழிநடத்திய RYLA-வில் பங்கேற்றனர். தனது கிரிக்கெட் நடுவர் பயண அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, தலைமைப் பண்புகள், குழுப்பணி, ஒழுக்கம், நிறுவனத் திறன்கள் பற்றி அவர் பேசினார்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்






## RID 3181

**RC மங்களூரு சென்ட்ரல்**

PDG தேவ்தாஸ் ராய் நடத்திய 20-வது பதிப்பான ரோட்டரி விழிப்புணர்வு வினாடி வினாவில் 14 சங்கங்கள் பங்கேற்றன. மொபைல் செயலி வழியிலான போட்டியில் RC விஜயநகர் மைசூரின் H M ஹரிஷ் வென்றார்; RC மங்களூரு சிட்டியின் R K ரஞ்சன் மற்றும் சுமித் ராவ் இரண்டாம் வெற்றியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## RID 3182

**RC சிக்மகளூர்-காபிலேண்ட்**

தெருவோர உணவு விற்பனையாளர்கள், காய்கறி வியாபாரிகளுக்கு குடைகள் வழங்கப்பட்டன; 160 துப்புரவுப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு முகக் கவசங்கள், இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு தலைக்கவசங்கள் வழங்கப்பட்டன. காவலர் பயிற்சி மையத்தில் ஒரு நீர் வடிகட்டி அலகு அமைக்கப்பட்டு, துப்புரவுப் பணியாளர்களுக்கு உணவும் வழங்கப்பட்டது.





## RID 3192

**RC பெங்களூரு பிரிகேட்ஸ்**

ஆயுதம் தாங்கி ஊடுருவியவரிடமிருந்து பல்மாடிக் குடியிருப்புக் கட்டடத்தைப் பாதுகாத்த பாதுகாப்பு அதிகாரி சாகர் குமடகி மற்றும் அவரது குழுவினருக்கு சங்கத் தலைவர் பவேஷ் ஷா தொழில்சார் சிறப்புத் திறன் விருதை வழங்கினார்.

## RID 3170

**RC வைபவ்வாடி**

RC கரேபடன் உடன் இணைந்து மேற்கொண்ட கூட்டுத் திட்டத்தில் 10 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. பாகீரத் கிராம்விகாஸ் பிரதிஷ்தான் இணைக் கூட்டாளியாக இருந்தது. சங்கத் தலைவர்கள் சச்சின் ராவ்ரானே, தயானந்த் கோகாடே ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றனர்.



## RID 3233

**RC சென்னை ஈஸ்ட் R A புரம்**

தற்காப்புக் கலை நிபுணரான முன்னாள் தலைவர் P Vasu வழிகாட்டுதலில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில், பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த 10 முதல் 20 வயதுடைய 1,100 சிறுமிகளுக்கு தற்காப்புப் பயிற்சி வழங்கப்பட்டது.



## RID 3203

**RC அம்மாபேட்டை காவேரி**

கடந்த 200 வாரங்களாக ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் சுமார் 100 கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து கூடுதல் மாத்திரைகள், உணவுக் கருவித்தொகுப்புகள் வழங்கப்படுகின்றன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# மூட்டுவலி: அறிந்து நிர்வகிப்பது எப்படி

கீதா மத்தாய்

பலரைப் போலவே, காலையில் விறைப்பான மூட்டுகளுடனும் உடல் முழுவதும் வலியுடனும் நீங்கள் எத்தனை முறை எழுந்திருந்திருக்கிறீர்கள்? சில நேரங்களில் இது வழக்கத்திற்கு மாறான கடினமான நாளைத் தொடர்ந்து ஏற்படும். மற்ற நேரங்களில், தெளிவான காரணம் எதுவும் கண்டறிய முடியாது. அறிகுறிகள் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பிறகும் மறையவில்லை என்றால், அல்லது ஒரு மாதத்தில் பல முறை இது ஏற்பட்டால், அல்லது காலை விறைப்பு 30 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தால், அல்லது மூட்டின் மேல் தோல் சிவப்பாகவும் சூடாகவும் இருந்தால், உங்களுக்கு மூட்டுவலி இருக்கலாம்.

தினசரி செயல்பாடுகளை வசதியாகச் செய்ய முடியாமல் மூன்று நாட்கள் அல்லது அதற்கு மேலாக இருக்கும் எந்த மூட்டு அசௌகரியத்தையும் தீவிரமாக எடுத்துக்கொண்டு பரிசோதிக்க வேண்டும். மறுபுறம், வலி லேசானதாகவும், அரிதாகவும் இருந்து சில நாட்களுக்குப் பிறகு மறைந்துவிட்டால், அது தற்காலிக அதிகப்படியான பயன்பாட்டால் ஏற்பட்டிருக்கலாம்.

மூட்டுவலி என்பது மூட்டுகள், சுற்றியுள்ள திசுக்கள், இணைப்புத் திசுக்களைப் பாதிக்கும் 100-க்கும் மேற்பட்ட தொடர்புடைய நிலைமைகளை உள்ளடக்கிய பொதுவான சொல். சில வகைகளுக்கு உடனடி சிகிச்சை தேவை, மற்றவை மெதுவாக வளர்ச்சி யடைந்து அவசரமின்றி பரிசோதிக்கப்படலாம். மூட்டுகளுக்கு நிரந்தர சேதத்தை ஏற்படுத்தக்கூடிய அழற்சி மூட்டுவலி இருந்தால், முன்கூட்டிய சிகிச்சை மூட்டு செயல்பாட்டைப் பாதுகாத்து மற்ற தீவிர சுகாதாரப் பிரச்சினைகளைத் தடுக்க முடியும்.

வயது அதிகரிக்கும் போது, தேய்மானம் எலும்புகளின் முனைகளுக்கு இடையேயான உராய்வைக் குறைக்கும் குருத்தெலும்பைச் சேதப்படுத்தலாம். இதனால் ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ் உருவாகலாம், பெரும்பாலும் கீழ் முதுகு, இடுப்பு, முழங்கால்கள், கணுக்கால்கள் போன்ற எடையைத் தாங்கும் மூட்டுகளில் சமச்சீரற்ற முறையில் ஏற்படும். இது காலை விறைப்பு அல்லது மூட்டு ஓய்வெடுத்த பின், அசைவின் போது படிப்படியாக அதிகரிக்கும் வலி, மற்றும்



கிறீச்சிடும் அல்லது உராயும் ஒலிகள் ஆகியவற்றால் அடையாளம் காணப்படுகிறது. வயது, உடல் பருமன், மீண்டும் மீண்டும் நடக்கும் மூட்டு அசைவுகள், முந்தைய காயங்கள், எலும்பு முறிவுகள் அல்லது அறுவை சிகிச்சை ஆகியவற்றுடன் அபாயம் அதிகரிக்கிறது.

சில குடும்பங்களில், உறுப்பினர்களுக்கு இரத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவு அதிகமாக இருக்கலாம். இதனால் ஊசி வடிவ யூரேட் படிகங்கள் மூட்டுகளில் திரண்டு கவுட் நோயை ஏற்படுத்தலாம். தாக்குதல்கள் திடீர், கடுமையான வலி, சிவத்தல், வீக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும். பொதுவாக பெருவிரல் பாதிக்கப்பட்டாலும், கவுட் கணுக்கால், முழங்கால், முழங்கை, மணிக்கட்டு அல்லது விரல்களையும் பாதிக்கலாம். மீண்டும் மீண்டும், சிகிச்சையளிக்கப்படாத தாக்குதல்கள் இறுதியில் நிரந்தர மூட்டு சேதத்தை ஏற்படுத்தலாம்.

வைரஸ் தொற்றுகளும் மூட்டுவலியை ஏற்படுத்தலாம். சிக்குன்குனியா, டெங்கு போன்ற கொசு மூலம் பரவும் தொற்றுகள், மற்றும் பார்வோவைரஸ் B19, கோவிட்-19, ஹெபடைடிஸ் B மற்றும் C போன்ற தொற்றுகள், காய்ச்சல், தோல் அரிப்பு, பல மூட்டுகளில் வலியை ஏற்படுத்தலாம். இந்த அறிகுறிகள் பெரும்பாலும் தற்காலிகமானவை, இருப்பினும் சிக்குன்குனியாவைத் தொடர்ந்து ஏற்படும் மூட்டுவலி மாதங்கள் அல்லது ஆண்டுகள் வரை நீடிக்கலாம்.

ருமட்டாய்டு ஆர்த்ரைடிஸ் முக்கியமாக நடுத்தர வயது பெண்களைப் பாதிக்கிறது, ஆனால் எந்தப் பாலினத்திலும், எந்த வயதிலும் ஏற்படலாம். இது நோய் எதிர்ப்பு அமைப்பு மூட்டுகளின் உட்பகுதியைத் தாக்கும் ஒரு தன்னியக்க-எதிர்ப்பு நோயாகும், பொதுவாக கை-கால் சிறிய மூட்டுகளை சமச்சீராகப் பாதிக்கிறது. சிகிச்சை இல்லாமல், இது தொடர்ச்சியான வலியையும் உருமாற்றத்தையும் ஏற்படுத்தலாம். கண்கள், நுரையீரல், இதயம், இரத்த நாளங்கள், நரம்புகளையும் இது பாதிக்கலாம்.

சிஸ்டமிக் லூபஸ் எரித்திமடோசஸ், சொரியாசிஸ் மூட்டுவலி உள்ளிட்ட பிற தன்னியக்க-எதிர்ப்பு நோய்களின் ஒரு பகுதியாகவும் மூட்டுவலி இருக்கலாம். வயதான விளையாட்டு வீரர்கள், குறிப்பாக தொடர்பு விளையாட்டுகளில் ஈடுபடுபவர்கள், மற்றும் உடல் ரீதியாக கடினமான தொழில்களில் இருப்பவர்களும் மூட்டு சேதத்தை உருவாக்க அதிக வாய்ப்புள்ளவர்கள்.

தெளிவான காரணம் இல்லாமல் வயதானவர்களுக்கு மூட்டுவலியும் விறைப்பும் ஏற்படலாம். மூட்டுவலிக்கான காரணத்தைக் கண்டறிய விரிவான வரலாறு, உடல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனைகள், பொருத்தமான படமெடுத்தல் தேவை. ஆஸ்டியோஆர்த்ரைடிஸில், எக்ஸ்ரேக்கள் மூட்டு இடைவெளி குறுகுதல், ஆஸ்டியோஃபைட்ஸ் எனப்படும் எலும்பு முனைப்புகள், அடிப்படை எலும்பில் மாற்றங்களைக் காட்டலாம். ருமட்டாய்டு ஆர்த்ரைடிஸ் சமச்சீரான மூட்டு-இடைவெளி குறுகுதலையும் அரிப்பையும் ஏற்படுத்தலாம், ஆரம்பகால எக்ஸ்ரேக்கள் இயல்பாகத் தோன்றலாம். அல்ட்ராசவுண்ட் அல்லது MRI அழற்சியையும் ஆரம்பகால சேதத்தையும் கண்டறியலாம்.

இரத்தப் பரிசோதனைகளில் அழற்சியை மதிப்பிட ESR மற்றும் C-ரியாக்டிவ் புரோட்டீன் அடங்கும். யூரிக் அமில அளவுகள் கவுட் நோய் கண்டறிதலுக்கு துணைபுரியலாம், ஆனால் மூட்டிலிருந்து எடுக்கப்பட்ட திரவத்தில் யூரேட் படிகங்களைப் பரிசோதிப்பது வலுவான உறுதிப்படுத்தலை அளிக்கிறது. ருமட்டாய்டு காரணி மற்றும் anti-CCP ஆன்டிபாடிகள் ருமட்டாய்டு ஆர்த்ரைடிஸ் கண்டறிதலுக்கு துணைபுரியும். தொற்று சந்தேகிக்கப்படும்போது ஆன்டிபாடி பரிசோதனைகள், ஆன்டிஜென் பரிசோதனைகள் அல்லது ELISA அல்லது PCR தேவைப்படலாம்.

கண்டறிதல் முடிந்ததும் குறிப்பிட்ட சிகிச்சையைத் தொடங்கலாம். மருந்துகள் யூரிக் அமிலத்தைக் குறைத்து கவுட் தாக்குதல்களைத் தடுக்கலாம். ருமட்டாய்டு ஆர்த்ரைடிஸுக்கான சிகிச்சை கணிசமாக முன்னேறியுள்ளது. வலி நிவாரணிகள், அழற்சி எதிர்ப்பு மருந்துகளுடன், மெத்தோட்ரெக்சேட், லெஃப்லுனோமைடு, ஹைட்ராக்ஸி குளோரோகுயின், சல்ஃபாசாலசின் போன்ற நோய்-மாற்று ருமட்டிசம் எதிர்ப்பு மருந்துகள் நோய் முன்னேற்றத்தைக் குறைக்கலாம். பயாலஜிக்ஸ் மற்றும் ஜானஸ் கைனேஸ் தடுப்பான்களும் கிடைக்கின்றன. இந்த சிகிச்சைகளுக்கு நிபுணரின் மேற்பார்வை தேவை.

ஆஸ்டியோஆர்த்ரைடிஸை மருந்து, எடை கட்டுப்பாடு, உடற் பயிற்சி, பிசியோதெரபி மூலம் நிர்வகிக்கலாம். வலி கட்டுப்படுத்த முடியாமல் போய், தினசரி செயல்பாடு கடினமாகி விட்டால், அறுவை சிகிச்சை வழிமுறைகளைக் கருத்தில் கொள்ளலாம். இவற்றில் ஆஸ்டியோடமி, மூட்டு இணைப்பு, பகுதி அல்லது முழு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை ஆகியவை அடங்கும். ஊசிகள் தற்காலிக நிவாரணம் அளிக்கலாம், ஆனால் தேய்ந்த குருத்தெலும்பை மீண்டும் உருவாக்க முடியாது.

**மூட்டுவலியின் அபாயத்தையும் தாக்கத்தையும் குறைக்க:**

- ❖ உடல் எடையைப் பராமரிக்கவும்.
- ❖ புகைபிடிக்கவோ புகையிலை மெல்லவோ வேண்டாம்.
- ❖ சுமார் 40 நிமிடங்கள் ஏரோபிக் உடற்பயிற்சி செய்யவும்.
- ❖ பாதிக்கப்பட்ட மூட்டுகளை வலுவான தசைகள் ஆதரித்து நிலைப்படுத்த வலிமை பயிற்சியைச் சேர்க்கவும்.
- ❖ வலி நிவாரணம், நெகிழ்வுத் தன்மை, சமநிலை, தசை வலிமைப்படுத்தும் பயிற்சிகளுக்கு பிசியோதெரபி பெறவும்.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவ நிபுணரும், Staying Healthy in Modern India என்ற நூலின் ஆசிரியருமாவார்.




# லண்டனின் இருண்ட உலகத்தின் ஆழத்தில்

*அதீதமான பேராசையாலும் பொய்யான தெய்வங்களாலும் உருவாக்கப்பட்ட சிக்கலான வஞ்சக வலையில் சிக்கி, மயக்கப்பட்ட அப்பாவித்தனம் எவ்வாறு மரணத்தைச் சந்தித்தது என்பதே இந்தக் கதை.*



சந்தியா ராவ்

சமீபத்தில் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானப் பயணத்தின்போது, பொழுதுபோக்குப் பகுதியில் லண்டன் ஃபாலிங் என்ற புத்தகத்துக்கான பரிந்துரையைப் பார்த்தேன். அதன் ஆசிரியர் பேட்ரிக் ராடன் கீஃப் என்ற பெயர் ஓரளவு பரிச்சயமாகத் தோன்றியது. ஆனால் புத்தகத்தைப் பற்றிய சுருக்கமான அறிமுகமே என் ஆர்வத்தைத் தூண்டியது. கடந்த மாதக் கட்டுரையில் குறிப்பிட்ட பாத் நகரின் டாப்பிங் அண்ட் கம்பெனி புத்தக விற்பனையகத்துக்குச் சென்றபோது, புத்தகம் விற்றுத் தீர்ந்திருந்தது. உண்மையில், கீஃப் அங்கே ஒரு நிகழ்ச்சியிலும் பங்கேற்றிருந்தார். பின்னர்தான், சென்னைக்குத் திரும்பியபோது, 2021ஆம் ஆண்டு சாக்லர் குடும்பத்தைப் பற்றிய எம்பயர் ஆஃப் பெயின் என்ற நூலுக்காக கீஃப் புனைகதை அல்லாத எழுத்துக்கான பெய்லி கிஃப்போர்ட் பரிசை வென்றவர் என்பது நினைவுக்கு வந்தது. அந்தப் புத்தகம் 2016-ம் ஆண்டு அதே பரிசை வென்ற பென் ஜூடாவின் திஸ் இஸ் லண்டன் பற்றிய 2022 பிப்ரவரி மாத ‘வேர்ட்ஸ்வேர்ல்ட்’ கட்டுரையிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இறுதியில் ஹீத்ரோ விமான நிலையத்தில் புத்தகத்தை வாங்கிவிட்டேன்.

இந்தப் பதிப்பின் முன் மற்றும் பின் அட்டைகள் மிகவும் மந்தமான தோற்றம் கொண்டவை. கருப்பு மற்றும் மஞ்சள் கலந்த கோடுகள் கிடைமட்டமாக ஓடுகின்றன. சற்று உற்றுப் பார்த்தால், அந்த மந்தமான பின்னணியிலிருந்து, “தங்கமுலாம் பூசப்பட்ட நகரில் ஒரு மர்ம மரணம்... உண்மையைத் தேடும் ஒரு குடும்பம்” என்ற வாசகம் வெளிப்படுகிறது. உடனே முதுகுத்தண்டில் ஒரு குளிர்ச்சியான உணர்வு ஓடுகிறது.

2019 நவம்பரில், ராசெல் மற்றும் மேத்யூ பிரெட்லர் தம்பதியின் 19 வயது மகன் சாக் காணாமல் போகிறார். இரண்டு மகன்களில் இளையவரான சாக், சிறுவயதில் புத்திசாலித்தனமும் நகைச்சுவை உணர்வும் மிக்கவர்; அபாரமான நினைவாற்றலும் கொண்டவர். மற்ற குழந்தைகளைப் போலவே விளையாட்டிலும் அறிவிலும் ஆர்வமுடையவர். அன்பான குடும்பத்தில் வளர்ந்த அவர், லண்டனின் நல்லதொரு பகுதியில் வசித்து வந்தார்.

ஆனால் சாக் 16 அல்லது 17 வயதை எட்டியபோது, அவரிடம் மாற்றம் தென்படத் தொடங்கியது. பெற்றோரும், மூத்த சகோதரர் ஜோவும், நண்பர்களும் ஆரம்பத்தில் அதை கவனிக்கவில்லை. பின்னர் அவர் மிகப்பெரிய இலட்சியங்களைக் கொண்ட இளைஞராக மாறியிருப்பதை உணர்ந்தனர். குறிப்பாக பணக்கார வாழ்க்கையை விரும்பினார். இளமைப் பருவத்தில் இப்படிப்பட்ட ஆசைகள் இருப்பது இயல்புதான் என்று பெற்றோர் முதலில் எண்ணினர்.


ஆனால் படிப்படியாக, சாக் தன்னைவிட மிகவும் வயதான சில விசித்திரமான நண்பர்களுடன் பழகுவதை அவர்கள் கவனித்தனர். மேலும், பெரிய அளவில் பணம் கிடைப்பது போலவும், செல்வந்தர்களின் வாழ்க்கையை வாழ்வதுபோலவும் அவர் தோன்றினார். ஒருகட்டத்தில், தேம்ஸ் நதியைப் பார்த்தபடி அமைந்திருந்த உயர்தர அடுக்குமாடிக் குடியிருப்பான ரிவர்வாக்கில் நீண்ட காலம் தங்குவதாகக் கூறினார். ஒரு சாதாரண மாணவனால் அத்தகைய விலையுயர்ந்த முகவரியில் எப்படி தங்க முடியும் என்று பெற்றோர் ஆச்சரியப்பட்டனர்.

2019 கோடையில், குடும்பம் முழுவதும் ஒரு பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டபோது சாக் மீண்டும் பழைய மகிழ்ச்சியான இளைஞனைப் போலத் தோன்றினார். ஆனால் விழா முடிவதற்கு முன்பே, அந்தக் கோடையில் தங்கியிருந்த ரிவர்வாக்குக்குத் திரும்புவதாகக் கூறி அவர் சென்றுவிட்டார். பெற்றோர் மெய்டா வேலுக்குத் திரும்பும்போது, வாகனம் வாக்ஸ்ஹால் பாலத்தை நெருங்கியதும் தன்னை அழைக்கும்படி சாக் கூறியிருந்தார்.

விழா முடிந்ததும் ராசெல், மேத்யூ, ஜோ ஆகியோர் காரில் வீடு திரும்பினர். MI6 தலைமையகத்தைக் கடந்து பாலத்தில் சென்றபோது, சாக் கூறியபடி ராசெல் அவரைத் தொலைபேசியில் அழைத்தார். அப்போது அவர்கள் தொலைவில் ஐந்தாவது மாடி பால்கனியில் ஒரு சிறிய உருவம் கையை அசைப்பதைக் கண்டனர். அது சாக்.

ரிவர்வாக் அமைந்திருந்த இடத்தை

கவனியுங்கள்: தேம்ஸ் நதிக்கரையில், MI6 தலைமையகத்துக்கு எதிரே, வாக்ஸ்ஹால் பாலத்துக்கு அருகில். சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாணவனால் எளிதில் சென்றடையக்கூடிய இடம் அல்ல அது. ஆனால் அங்குள்ள 504-ம் எண் குடியிருப்பின் பால்கனியில்தான் சாக் நின்று கையசைத்தார். அந்த ஆண்டின் இறுதிக்குள், அங்கிருந்து அவர் நதிக்குள் விழுந்து அல்லது குதித்து உயிரிழந்தார். வழியில் அவரது இடுப்பு கரையைத் தாக்கியது.




அந்த நேரத்தில் அங்கு சென்றுகொண்டிருந்த பாக்ஸ்டர் வில்லிஸ் என்ற இளைஞர் அவரது உடலைக் கண்டுபிடித்தார். விசித்திரமாக, சில ஆண்டுகளுக்கு முன்பு தேம்ஸில் மிதந்தபடி கண்டெடுக்கப்பட்ட மற்றொரு இளைஞரின் மரணம் தொடர்பாக வில்லிஸிடமும் விசாரணை நடத்தப்பட்டிருந்தது. நீண்டகாலத் தொல்லைகளுக்குப் பிறகு அவர் குற்றமற்றவர் எனத் தெளிவுபடுத்தப்பட்டிருந்தார்.

சாகின் உடலில் சட்டை இல்லை; அவர் விளையாட்டு கால்சட்டை அணிந்திருந்தார். முகத்தின் ஒரு பக்கம் குத்துச்சண்டை வீரரின் தாக்குதலைப் போன்ற கடுமையான அடியைப் பெற்றிருந்தது. காவல்துறையும் விசாரணையாளர்களும் வந்தபோது, நதியின் ஓட்டத்தால் உடல் அந்த இடத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று கருதினர். ரிவர்வாக்கின் மேல்தளத்தைப் பார்த்து, அங்கிருந்து அவர் விழுந்திருக்கக்கூடிய வாய்ப்பை அவர்கள் முதலில் ஆராயவே இல்லை. சில நாட்களுக்குப் பிறகே கட்டிடத்துக்குள் சென்று விசாரித்தனர்.

சாக் தவறி விழுந்தாரா? யாராவது அவரைத் தள்ளினார்களா? அல்லது தப்பிப்பதற்காக நதியை நோக்கிக் குதித்தாரா?

லண்டன் ஃபாலிங் இந்தக் கேள்விகளையும் பல சாத்தியக்கூறுகளையும் விரிவான விசாரணையின் மூலம் ஆராய்கிறது. சம்பவத்தின் காலம், சூழ்நிலைகள், சம்பந்தப்பட்டவர்களின் தனிப்பட்ட வரலாறுகள் ஆகியவற்றை ஆராய்ந்து, சாதாரண மனிதர்களிலிருந்து செல்வாக்கு மிக்கவர்கள் வரை அனைவரையும் இணைக்கும் சிக்கலான வலையின் தொடர்புகளை ஆசிரியர் ஒன்றன்பின் ஒன்றாகத் தேடுகிறார். வாக்குமூலங்கள், நினைவுகள், உண்மைகள், கருத்துகள், ஊகங்கள், முடிவுகள் மற்றும் ஆதாரங்களைப் பதிவுசெய்து, துயரத்தில் ஆழ்ந்த பெற்றோரின் கருத்துகளையும் கவனமாகக் கேட்கிறார்.

சாகின் பார்மிட்ஸ்வா சடங்கை நடத்திய ரப்பியான ஒரு நண்பர் மூலம் கீஃப் இந்தக் கதையை தற்செயலாக அறிந்தார். உண்மைக்கான பதில்களைத் தேடி பெற்றோர் எவ்வளவு துடித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை அவர் கீஃபிடம் கூறினார். விசாரணை ஆழமடைந்தபோது, லண்டனின் இருண்ட அடித்தள உலகத்தைச் சேர்ந்த பலர் இந்தக் கதைக்குள் நுழைந்தனர்–போதைப்பொருள் கும்பல் தலைவர்கள், கொலைகாரர்கள், கால்பந்து சங்க உரிமையாளர்கள், தொழிலதிபர்கள், நகர வாழ்க்கையில் செல்வாக்கு கொண்டவர்கள் எனப் பலர். இவர்கள் அனைவருக்கும் மேலாக ரஷ்யப் பெரும் செல்வந்தர்களின் செல்வாக்கும் இருந்தது. இதன் நடுவே, பெருநகரக் காவல்துறையின் செயலற்ற போக்கும் கேள்விக்குறியாகிறது.

பிரெட்லர் குடும்பத்தை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய உண்மை, அவர்களின் மகன் தன்னை ரஷ்யப் பெரும் செல்வந்தரின் அனாதை வாரிசான 'சாக் இஸ்மாய்லோவ்' என்ற பெயரில் ஒரு பணக்கார முதலீட்டாளராகக் காட்டிக் கொண்டிருந்தான் என்பதுதான்.

ஒரு வாசகராக எனக்கு மேலும் ஆச்சரியமளித்தது, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இருவரின் நெருங்கிய தொடர்பு. ஒருவர் உகாண்டாவைச் சேர்ந்த இந்தியரின் மகனான அக்பர் ஷாம்ஜி; மற்றொருவர் 'இந்திய டேவ்' என்று அழைக்கப்படும் வெரிந்தர் சர்மா. சர்மா ரப்பர் தொழிலதிபர் என்று கூறப்பட்டாலும், உண்மையில் போதைப்பொருள் கும்பல் தலைவராக இருந்திருக்கலாம். அவர் பல சந்தேகத்திற்குரிய நபர்களுடன் தொடர்புடையவராக இருந்தார்; மேலும் அவர் காவல்துறையின் தகவலாளராக இருக்கலாம் என பிரெட்லர்கள் சந்தேகித்தனர்.

சாக் இவர்களுடன் எவ்வாறு நெருக்கமானார்? ரஷ்ய வாரிசு என்று அவர்களை எப்படித் தன்னை நம்பச் செய்தார்? இறுதியில், இந்த வழக்கு தற்கொலை என்று முடிக்கப்பட்டது. ஆனால் பிரெட்லர் குடும்பம் அது கொலை என்ற நம்பிக்கையில் இருந்தது-இன்றும் இருக்கிறது.

லண்டன் ஃபாலிங் நம்பத் தகுந்ததாகவும், பரபரப்பூட்டுவதாகவும், மனதை அமைதியிழக்கச் செய்வதாகவும் உள்ளது. நம்பிக்கையுடனும் கனவுகளுடனும் பெருநகரங்களை நோக்கிச் செல்லும் கோடிக்கணக்கான இளைஞர்களைப் பற்றி அது சிந்திக்க வைக்கிறது. வழிதவறுவது எளிது. சுரண்டப்படுவதும் எளிது. காணாமல் போவதும் எளிது.


குறிப்பாக, புத்தகத்தின் அட்டையில் இடம் பெற்றுள்ள படம் ரிவர்வாக் குடியிருப்பின் படமாகும். அது MI6 தலைமையகத்துக்கு நேர் எதிரே அமைந்துள்ளது. அங்கிருந்த கண்காணிப்பு கேமராவே 504-ம் எண் குடியிருப்பின் பால்கனியிலிருந்து தேம்ஸ் நதிக்குள் விழுந்த ஒரு மனித உருவத்தைப் பதிவு செய்திருந்தது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



# மொழிக் குழப்பம்

LBW



**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

மொழியும் உடையும் ஆழமாக பின்னிப் பிணைந்திருக்கக்கூடும். பல ஆண்டுகளுக்கு முன்பு, சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு குறுகிய விமானப் பயணம் மேற்கொண்டபோது இது எனக்குப் புரிந்தது. கிட்டத்தட்ட 10 நாட்கள் பயணம் செய்திருந்ததால் எனது கால்சட்டைகள் அனைத்தும் அழுக்கடைந்து அணிய முடியாத நிலையில் இருந்ததால், நான் ஒரு வேட்டியை அணிந்திருந்தேன். கோயம்புத்தூரில் கால்சட்டைகளை டிரை கிளீன் செய்ய வைப்பதே எனது திட்டமாக இருந்தது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நான் ஒரு வேட்டியை வாங்கினேன். எனது பைஜாமாக்களில் ஒன்றை அணியலாம் என்று நினைத்தாலும், அவையும் அழுக்காக இருந்தன. எப்படியிருந்தாலும், நான் வேட்டியும் புஷ் சட்டையும் அணிந்திருந்தேன், நான் சந்தித்த அனைவரும் எனது முகத்தைப் பார்த்து இந்தியிலோ, எனது தோற்றத்தைப் பார்த்து தமிழிலோ பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் ஒரு பிரச்சினை: எனது தமிழையோ இந்தியையோ யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் முழுவதுமாக வடக்கில், மத்தியப் பிரதேசம் மற்றும் டெல்லியில் வளர்ந்தேன், எனவே எனது தமிழ், சரியாகவே இருந்தாலும், 1950களில் நின்றுவிட்டிருந்தது. தமிழ்நாட்டு மக்கள் பேசும் விதத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட முறையில் நான் அதைப் பேசினேன். அவர்களது மொழி தொடர்ந்து வளர்ச்சியடைந்திருந்தது. இந்தியைப் பொறுத்தவரை, அவர்களுக்கு அது போதுமான அளவு தெரியாது. ஆனால், நான் ஆங்கிலம் தெரியாதவன் என்று அவர்கள் நினைத்திருந்தாலும், நாங்கள் அனைவரும் ஆங்கிலம் அறிந்திருந்தோம். மறுநாள் எனது கால்சட்டைகள் திரும்பக் கிடைத்தபோதுதான் வாழ்க்கையும் மொழியும் இயல்பு நிலைக்குத் திரும்பின.


இது, அரை நூற்றாண்டுக்கு முன்பு நான் பீகார் சென்ற ஒரே தடவையில் எனக்கு நடந்ததற்கு நேர் எதிரானது. காலை 6 மணிக்கு ரயிலிலிருந்து இறங்கி, என் மாமா வீட்டிற்குச் செல்ல ரிக்ஷா தேடிக்கொண்டிருந்தேன். ரிக்ஷாக்காரர்கள் அனைவரும் தூங்கிக்கொண்டிருந்தனர், இறுதியில், ஒருவர் வாடிக்கையாளர் தேடி வந்து என்னை அழைத்துச் செல்ல ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று வலியுறுத்தினார் – அதைப் பற்றி அவருக்கு எந்தத் தெரிவும் இல்லை. ஆனால் தான் ஆங்கிலத்தில் பேசுவதாக அவர் நினைத்தார். நான் இதுவரை அனுபவித்த மிக விசித்திரமான அனுபவம் அது.

பின்னர் என்னுடைய தீவிர தேசியவாத, தீவிர சாவினிச்ட் மாமா ஒருவர் இருந்தார். அவர் ஒருபோதும் மேற்கத்திய உடைகளை அணிய மாட்டார், ஆனால் "பக்கா உச்சரிப்பு" என்று அழைக்கப்படும் குறையற்ற ஆங்கிலம் பேசுவார். இதைப் பற்றி நாங்கள் அவரிடம் கேட்டபோது, தான் காந்திஜியின் பின்பற்றுபவர் என்று அவர் கூறினார் – காந்திஜி ஆங்கிலத்தை நிபுணத்துவத்துடன் பேசுவார், வைஸ்ராயுடன் பேசும்போது தவிர. அப்போது எப்போதுமே இந்தியில்தான் பேசுவார். இது சில ஆங்கிலேயர்களை கடுங்கோபமடையச் செய்தது, ஆனால் காந்திஜி பிடிவாதமாக இருந்தார். மனித உரிமைகளை தொடர்ந்து மீறிய வின்ஸ்டன் சர்ச்சில், அவரை நிர்வாண பக்கீர் என்று அழைத்ததற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது.

ஏதோ ஒரு விசித்திரமான தந்திரத்தால் மொழியும் உடையும் பின்னிப் பிணைந்திருப்பதாகத் தெரிகிறது. 1970களின் பிற்பகுதியில், வேறு எங்குமல்லாமல் கொரியாவில், எனது மனைவியும் இதைக் கண்டறிந்தார். ஒரு உண்மையான முன்னோடியான அவர், கொரியாவிற்கு படிக்கச் சென்றார், அங்குள்ளவர்கள் அவரை புடவையில் பார்க்கும்போதெல்லாம் அவர்களுக்கு முற்றிலும் தெரியாத ஆங்கிலத்தில் பேசத் தொடங்குவதைக் கண்டறிந்தார். அவர் அவர்களிடம் கொரிய மொழியில் பேசிக்கொண்டிருந்தபோதும் இது நடந்தது. அந்த நாட்களில் கொரியாவில் வெளிநாட்டவர்கள் அரிதாகவே இருந்தனர், இருந்த சிலரும் வெள்ளையர்களாகவும் மேற்கத்திய உடையிலும் இருந்தனர். புடவையில் ஒரு பெண் அவர்களது அனுபவத்திற்கு முற்றிலும் புதியதாக இருந்தது.

இது சில வேடிக்கையான சூழல்களுக்கு வழிவகுத்தது, ஒரு பேருந்தில் இரண்டு பள்ளி மாணவர்கள் அவரைப் பற்றி ஊகித்துக்கொண்டிருந்த ஒரு சம்பவம் உட்பட. அவர்கள் பல நிமிடங்களாக முணுமுணுப்பதைக் கேட்ட அவர், தன் நிறுத்தம் வந்ததும், திரும்பி கொரிய மொழியில், தான் இந்தியாவைச் சேர்ந்தவர் என்றும், வீட்டிற்குச் சென்றதும் தங்கள் புவியியல் பாடப் புத்தகத்தில் அதைத் தேடிப் பார்க்குமாறும் அவர்களிடம் கூறினார். அந்த சிறுவர்கள் அதிர்ச்சியில் இறந்தே போயிருப்பார்கள்.

மற்றொரு சம்பவத்தில், எனது பெற்றோர் ரயிலில் பயணித்துக்கொண்டிருந்தனர், எதிர் பார்த்தில் பாரம்பரிய பதான் உடையில் தலைப்பாகை அணிந்த ஒரு மனிதர் இருந்தார். அவ்வப்போது, என் தாய் அவரைப் பற்றி தமிழில் என் தந்தையிடம் ஏதோ சொல்வார். பல மணி நேரங்களுக்குப் பிறகு, அவர் ரயிலிலிருந்து இறங்கும்போது, என் பெற்றோரிடம் விடைபெற்று, அவர்கள் அந்த நகரத்திற்கு எப்போதாவது வந்தால் தன்னைச் சந்திக்குமாறு கூறினார். மறக்க முடியாதவகையில், அவர் தூய தமிழில் பேசினார்.




## INSPIRE LEARNING

The Rotary Foundation

Rotary members are creating community-driven, sustainable projects to improve access to quality education around the world. From foundational literacy and numeracy classes to classroom technology programs and continuing education for teachers, your gift to The Rotary Foundation's Annual Fund supports these projects to inspire learning at all ages.

**GIVE TODAY:** rotary.org/donate

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹50
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27

